
# வேதத்தைத் தியானிப்பது எப்படி?



ஆல்ஃப்ரட் தேவதாசன்

# வேதத்தைத் தியானிப்பது எப்படி?

## (HOW TO MEDITATE ON THE BIBLE?)

பேராசிரியர்

Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன், M.Sc., M.Phil., Ph.D.
(வாழ்வியல் விளக்க வேதாகமத்தின் ஆசிரியர்)

வேர்டு ஆஃப் கிரைஸ்ட்
சென்னை

வேதத்தைத் தியானிப்பது எப்படி?

First Edition : May 1989
Sixth revised Edition : 2010
Sixth revised Edition Reprint - 2013
© Dr. ALFRED DEVADASON

## அர்ப்பணிப்பு

என்னை இரட்சித்து, தமது ஊழியத்தைச் செய்யவும், இந்நூலை எழுதவும் வழி நடத்திய பிதா, குமாரன், தூய ஆவியானவராகிய தேவனின் பாதங்களில் இந்நூலை அர்ப்பணிக்கிறேன். அவருக்கே மகிமை உண்டாவதாக!

Price Rs. 40/-

Published by

WORD OF CHRIST MINISTRIES
No.100/3, Nirmala Apartments, Medavakkam Tank Road,
Kellys, Chennai - 10.

# முன்னுரை

வேதத்தை நேசித்து அதைக் கற்றுக்கொள்ள வாஞ்சிப்பவர்களுக்காக இந்நூல் எழுதப்பட்டுள்ளது. வேதத்தை ஆழ்ந்தாராய்வது (தியானிப்பது) எப்படி என்று மட்டும் கூறாமல், அதற்கு எடுத்துக்காட்டுக்களும் விளக்கங்களும் இந்நூலில் கூறப்பட்டுள்ளன. இந்நூல் வேத தியானத்திற்கு வழிகாட்டும் என்பதில் ஐயமில்லை.

மற்ற நூல்களைப்போல இதை வேகமாக வாசிப்பது அதிகப் பயன் தராது. ஜெபத்துடன் வாசித்து, சிந்தித்து, இதில் கூறியவற்றைக் கற்றுக்கொண்டு, அவற்றைப் பயன்படுத்தினால் மிகுந்த நன்மை உண்டு. ஆங்காங்கே குறிப்பிடப் பட்டுள்ள வசனங்களை வேதத்தில் எடுத்து வாசியுங்கள். இந்நூலைப் பத்திரமாக வைத்திருந்து பலமுறை வாசித்துப் பயன்படுத்துங்கள். உங்கள் நண்பர், உறவினர் யாவருக்கும் இதை வாங்கிப் பரிசாக அளியுங்கள். இதன் மூலம் அவர்களின் வேத ஆராய்ச்சி பெருக ஏதுவுண்டு அல்லவா?

இந்நூலின் சில பகுதிகள் உன்னத வாழ்வு வேதபாடங்களாக 1986இல் வெளிவந்தவை. இதை அநேகர் படித்து, பயன்பெற்று, பாராட்டியுள்ளனர். உன்னத வாழ்வு வேதபாடங்களை 1986 முதல் 1988 இறுதிவரை ஆதரித்து வந்த ஆசீர்வாத இளைஞர் இயக்கத்திற்கு நன்றியைத் தெரிவித்துக்கொள் கிறேன். உன்னத வாழ்வு வேதபாடங்கள் அனைத்தையும் அச்சிடுமுன் சரிபார்த்து ஆலோசனைகள் தந்து உதவிய சகோதரர் லயணல் அவர்களுக்கும் நன்றி.

இந்நூலில் உள்ள சில அத்தியாங்களுக்குக் குறிப்புக்கள் தந்து உதவிய சகோதரர் லயணல், Dr. ஆர்தர் ஜாண், சகோதரர் டேவிட்சன் ஓசன்னா அவர்களுக்கு நன்றி.

இந்நூலைப் பயன்படுத்துகிறவர்களின் வேத தியானத்தின் தரம் உயர வேண்டும் என்பதே என் இருதயத்தின் விருப்பமும் நான் தேவனை நோக்கிச் செய்யும் வேண்டுதலுமாயிருக்கிறது. தேவன் இந்நூலின் மூலமாய் அநேகரை ஆசீர்வதிப்பாராக.

**ஆல்ஃப்ரட் தேவதாசன்**
E-58, 15 வது தெரு,
2 வது குறுக்குத்தெரு,
பெரியார் நகர், சென்னை – 82.

குறிப்பு: இந்நூலில் கூறப்படாத பல தியானமுறைகளும் உண்டு.

# பொருளடக்கம்


| எண் | | பக்கம் |
|---|---|---|
| | முன்னுரை | |
| 1. | வேதாகமம் – ஒரு அறிமுகம் | 5 |
| 2. | வேதத்தைத் தியானிப்பது எப்படி? | 9 |
| 3. | அதிகாரங்களைத் தியானிக்கும் முறை | 13 |
| 4. | பத்திகளைத் தியானிக்கும் முறை | 25 |
| 5. | வசனங்களைத் தியானிக்கும் முறை | 41 |
| 6. | நூல்களைத் தியானிக்கும் முறை | 53 |
| 7. | வாழ்க்கை வரலாறுகளைத் தியானிக்கும் முறை | 65 |
| 8. | கருத்துக்களைத் தியானிக்கும் முறை | 73 |
| 9. | ஒற்றுமை வேற்றுமைகளைத் தியானித்தல் | 85 |
| 10. | வேதத்தைப் பகிர்ந்தளிப்பது எப்படி? | 95 |
| | இணைப்பு: | 99 |
| | வேதம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு ஆதாரங்கள் | |

# 1. வேதாகமம் - ஒரு அறிமுகம்

**வேதத்தின் மகத்துவங்கள்**

தேவனால் மிகவும் மகிமைப்படுத்தப்பட்டிருப்பது எது என்று கேட்டால் அதற்குப் பதில் 'வேதாகமம்' என்பதுதான் (சங்.138:2). வானங்களில் என்றென்றும் நிலைத்திருக்கும் தன்மையுடையது வேதம் (சங்.119:89, 152). வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் வேதம் ஒழியாது (மத்.24:35). வேதத்திலுள்ளவை நிச்சயமாய் நிறைவேறும், தவறாது (மத்.5:18; யோவா.10:35). இவ்விதமாய் மகிமைப்படுத்தப்பட்டிருக்கிறதை நாம் அறிந்துகொள்வதும் அதன்படி வாழ்வதும் மிகவும் அவசியமாகும்.

**வேதத்தை எழுதியது யார்?**

வேதாகமத்தை, ஆதியாகமம் தொடங்கி வெளிப்படுத்தின விசேஷம்வரை 66 நூல்களை, ஏறக்குறைய 40 பேர்கள் எழுதியுள்ளனர். ஆனால் இவர்கள் இந்நூல்களின் ஆசிரியர்கள் அல்ல. தேவ ஆவியானவரே ஆசிரியர். இக்கருத்தை 2 தீமோ.3:16, 17; 2 பேதுரு 1:21 போன்ற பகுதிகளினின்று அறிகிறோம். எனவே வேதத்தை, 'தேவனுடைய வார்த்தை' என்று குறிப்பிடுகிறோம். (இணைப்பு காண்க, பக்கம் 99).

**வேதத்தின் பகுதிகள்**

**1. பழைய ஏற்பாடு:** இதில் 39 நூல்கள் இருக்கின்றன.

(அ) ஆதியாகமம் முதல் உபாகமம் முடிய 5 நியாயப்பிரமாண நூல்கள்

(ஆ) யோசுவா முதல் நெகேமியா முடிய 12 வரலாற்று நூல்கள்

(இ) யோபு முதல் உன்னதப்பாட்டு முடிய 5 பாடல் நூல்கள்

(ஈ) ஏசாயா முதல் தானியேல் முடிய 5 பெரிய தீர்க்கதரிசிகளின் நூல்கள்

(உ) ஓசியா முதல் மல்கியா முடிய 12 சிறிய தீர்க்கதரிசிகளின் நூல்கள்

**2. புதிய ஏற்பாடு:** இதில் 27 நூல்கள் உண்டு.

(அ) மத்தேயு முதல் யோவான் முடிய 4 நற்செய்தி நுல்கள் (சுவிசேஷங்கள்)

(ஆ) அப்போஸ்தலர் நடபடிகள் என்பது வரலாற்று நூல்

(இ) ரோமர் முதல் எபிரெயர் முடிய 14 பவுலின் நிருபங்கள்

(ஈ) யாக்கோபு முதல் யூதா முடிய 7 பொதுவான நிருபங்கள்

(உ) வெளிப்படுத்தின விசேஷம் என்ற ஒரு தீர்க்கதரிசன நூல்

குறிப்பு: எபிரெயர் நிருபத்தை எழுதியவர் யார் என்பது சரியாகத் தெரியாது. அது பவுலாயிருக்கக்கூடும் என்று பலர் கருதுவதால் பவுலின் நிருபங்களோடு அதைச் சேர்த்துள்ளேன்.

**வேதத்தின் மூலமொழிகள்**

பழைய ஏற்பாட்டில் எஸ்றா 4:8 – 6:18; 7:12–26; எரே.10:11; தானி.2:4–7:28 என்ற பகுதிகள் கல்தேயருடைய மொழியில் எழுதப்பட்டவை. பழைய ஏற்பாட்டின் மற்றப் பகுதிகள் எபிரெய மொழியில் எழுதப்பட்டவை.

புதிய ஏற்பாடு முழுவதும் கிரேக்க மொழியில் எழுதப்பட்டது. கி.பி. 2005 வரை உலகில் முழு வேதாகமும் 383 மொழிகளிலும், புதிய ஏற்பாடு மட்டும் 987 மொழிகளிலும், வேதப்பகுதிகள் 891 மொழிகளிலும் வெளியிடப்பட்டுள்ளன. 672 மொழிகளில் வேதத்தை மொழிமாற்றம் செய்யும் பணி நடைபெறுகின்றது. (ஆதாரம் :Operation World, 2005, பக்கம் 2).

**வேதத்தைத் தியானிப்பதால் வரும் நன்மைகள் எவை?**

1. வேத வாக்கியங்களை ஆராய்ந்து பாருங்கள் என்று கர்த்தர் கட்டளையிட்டுள்ளார். அவ்வாறு செய்யும்போது கர்த்தருக்குக் கீழ்ப்படிகிறோம் (யோவா.5:39).
2. நித்திய ஜீவனை அடைய வேத ஆராய்ச்சி உதவும் (யோவா.5:39).
3. வேதத்தை நாம் தியானித்தால் நமது வாழ்க்கை சிறப்பானதாகவும், செழிப்பானதாகவும் அமையும், நாம் செய்வதெல்லாம் வாய்க்கும் (சங்.1:1–3).
4. கர்த்தரால் வரும் ஆசீர்வாதங்களை (பாக்கியங்களை) அடைவோம் (வெளி.1:3).
5. தேவனுடைய வார்த்தைகள் நமது உள்ளத்தில் நிலைத்திருந்தால் நமது விண்ணப்பங்கள் கேட்கப்படும் (யோவா.15:7).
6. தேவனுடைய வார்த்தையை இருதயத்தில் மறைத்து வைக்கும்போது நாம் பாவம் செய்யாதவாறு காக்கப்படுவோம் (சங்.119:11). நியாயத்தீர்ப்பில் தப்பித்துக்கொள்ள வேதத்தியானம் ஏவும் (யோவா.12:48).
7. தேவனுடைய வார்த்தையைத் தியானிக்கிறவன் தன் எதிரிகளைவிடவும், தன்னிலும் முதியோரைவிடவும், தன் ஆசிரியர்களைவிடவும் ஞானியாக மாறுவான் (சங்.119:98–100).

8. தேவனுடைய வார்த்தை நம்மைச் சுத்திகரிக்கும் என்பதை யோவா.15:3; எபே.5:26இல் காண்கிறோம். அதைத் தியானிப்பவன் பரிசுத்தம் அடைவான் (யோவா.17:17). அவனுக்கு வேதத்தியானத்தின் மூலம் எச்சரிப்புக்கள் கிடைக்கும் (1 கொரி.10:11).

9. தேவனுடைய வார்த்தை பாவத்தை உணர்த்தும், திருத்தும், சுத்திகரிக்கும், நிலை நிறுத்தும், வழி நடத்தும், சீர் பொருந்தப்பண்ணும், போதிப்பதற்குத் தகுதிப்படுத்தும் (2 தீமோ.3:16,17). இவற்றை அனுபவிக்க வேதத் தியானம் உதவும்.

10. பாவத்தையும், அந்தகார சக்திகளையும் எதிர்க்கும் பட்டயமாகப் பயன் படுகிறது வேதம் (எபே.6:17). வேதத்தைத் தியானிப்பவர்கள் பட்டயத்தைப் பயன்படுத்தும் பயிற்சி பெறுகிறார்கள்.

11. வேதத்தைத் தியானிப்பதால் அதிலுள்ள தேவனுடைய வாக்குத்தத்தங் களை அறிந்துகொள்கிறோம். இவை ஏற்ற சமயத்திலே பொறுமையும், ஆறுதலும் அடைவதற்கேற்ற நம்பிக்கையூட்டும் போதனைகளாகும் (ரோம.15:4).

12. எந்த நற்கிரியையும் செய்யத் தகுதியுடையவர்களாக ஆவதற்கு வேத அறிவு தேவை (2 தீமோ.3:16, 17; அப்.17:11).

13. ஆவிக்குரிய ஆகாரம் பெறவும், வளர்ச்சி அடையவும் வேத ஆராய்ச்சி தேவை (1 பேதுரு 2:1–3; எபி.5:12–14).

14. சரியான உபதேசத்தைத் தெரிந்துகொள்ளவும் கள்ளப்போதகத்தைக் கண்டுபிடித்து ஒதுக்கவும் வேத ஆராய்ச்சி மிகவும் தேவை (2 தீமோ.2:15; 2 பேதுரு 1:19–2:1).

இன்னும் பல நன்மைகள் உண்டு. சகோதரரே, வேதத்தின் மகத்து வங்களை அந்நிய காரியமாக எண்ணாமல் உற்சாகமாகத் தியானிக்க இன்றே உம்மை ஒப்புக்கொடுப்பீராக (ஓசியா 8:12).

# 2. வேதத்தைத் தியானிப்பது எப்படி?

"சில நூல்களை ருசி பார்க்கவேண்டும், சில நூல்களை அப்படியே விழுங்கவேண்டும். சில நூல்களையோ மெதுவாக மென்று சுவைத்துச் சீரணிக்கவேண்டும்." – ஃப்ரான்சிஸ் பேகன்

இதில் வேதாகமம் கடைசிப் பிரிவைச் சார்ந்தது. அதைத் தியானிப்பது (மெதுவாக சுவைத்துச் சீரணிப்பது) எப்படி என்று பார்ப்போம்.

**தியானத்திற்கான தேவைகள்**

1. ஒவ்வொருவரும் சொந்தமாக ஒரு வேதாகமம் வைத்துக்கொள்வது நல்லது. வேதத்திலேயே சில குறிப்புக்கள் எழுதுவதற்கு இது தேவையானது.
2. குறிப்புக்கள் எடுத்துக்கொள்ள ஒரு ஏடு (நோட்டு) வைத்துக்கொள்ள வேண்டும் (இன்றே ஒரு ஏடு வாங்கும்படியாக அன்புடன் கேட்டுக் கொள்கிறேன்).
3. வாசிக்கும் முறைகளில் ஒன்றைத் தெரிந்தெடுத்துக்கொண்டு அதை அனுதினமும் கடைப்பிடிப்பது நல்லது (அதிகாரங்கள் முறை, நூல்கள் முறை, பத்திகள் முறை, கருத்துக்கள் முறை, **etc**).

**தொடங்குதல்**

4. வேதத்தைத் தியானிக்க ஆரம்பிக்கும் முன்னர் நம்மைத் தாழ்த்தி, ஜெபித்து, ஆவியானவர் ஒத்தாசை செய்வார் என்று விசுவாசிக்க வேண்டும் (யோவா.16:13).
5. மெதுவாக ஒவ்வொரு வார்த்தையும் மனதில் நன்கு பதியும்படி வாசிக்க வேண்டும்.
6. வாசித்ததின் மையக் கருத்தைக் கண்டுபிடிப்பதற்காக மீண்டும் மீண்டும் வாசிக்கலாம். முக்கியமான சொற்களைக் குறித்துவைத்து யோசித்துப் பார்க்க வேண்டும்.

**முதற்படிகள்**

7. வாசித்த பகுதிக்கு ஒரு தலைப்பு கண்டுபிடித்து வேதத்தில் குறிக்கலாம். ஏட்டிலும் குறிக்கலாம். வாசித்த பகுதியை, கருத்துவாரியாகச் சிறு

பகுதிகளாகப் பிரித்து அவற்றிற்கும் தலைப்புக்கள் தந்து அவற்றை எழுத வேண்டும்.

8. முக்கியமான சொற்கள், சொற்றொடர்கள், வசனங்களை வேதத்தில் அடிக்கோடிடலாம். ஏட்டிலும் அவற்றை எழுதலாம்.

**கேள்விகள் கேட்கவேண்டும்**

9. கேள்விகள் கேட்டுப் பதில்கள் காணவேண்டும். பின்வருவனபோன்ற கேள்விகள் பயன்தரும்.

(அ). யார், எச்சூழ்நிலையில் கூறுகின்றார்கள்?

(ஆ) யாருக்கு இந்த வேதப்பகுதி கூறப்படுகிறது? (அது எவ்விதத்தில் எனக்குப் பொருந்துகிறது என்று நினைத்துப் பார்க்கவேண்டும்)

(இ) எதற்காக இது கூறப்பட்டிருக்கிறது? (விசுவாசத்தை வளர்க்க, அறிவுறுத்த, etc.)

(ஈ) என்ன விதத்தில் (நேரிடையாக, உவமையாக), எப்படி (சாந்தமாக, எச்சரிப்புடன்...) கூறப்படுகிறது?

(உ) இப்பகுதியின் மையக் கருத்து என்ன?

(ஊ) பிதா, குமாரன், பரிசுத்த ஆவியானவரைக் குறித்து இப்பகுதியில் என்ன கூறப்பட்டுள்ளது? இப்பகுதியில் கூறப்படும் தேவனுடைய பெயர்கள் எவை? அவற்றின் பொருள் என்ன?

(எ) இப்பகுதி ஏதேனும் பாவத்தைக் கூறுகிறதா? அது என் வாழ்க்கையில் உள்ளதா? (அறிக்கையிட்டு விட்டுவிடவேண்டும்)

(ஏ) ஏதேனும் கட்டளைகள் இப்பகுதியில் உண்டா? நான் அவற்றிற்குக் கீழ்ப்படிந்து வாழ்கிறேனா? (கீழ்ப்படியவேண்டும்)

(ஐ) ஏதேனும் வாக்குத்தத்தங்கள், தீர்க்கதரிசனங்கள் இப்பகுதியில் உண்டா? (அப்படியானால் விசுவாசத்தோடு சுதந்தரித்துக் கொண்டு அவற்றிற்காகத் தேவனுக்கு நன்றி செலுத்தவேண்டும்)

(ஒ) இப்பகுதிக்கு ஒத்த வேறு வேதப்பகுதி ஞாபகத்திற்கு வருகிறதா? அப்படியானால் அதையும் தியானிக்க வேண்டும். எடுத்துக்காட்டு: (அ) ஏசா.1:18–20; ஓசி.4:1–2. (ஆ) வெளி.3:20; உன்.5:2–8

**சிறப்பு கண்ணோட்டம்**

10. ஒருமை பன்மைகளைத் தியானிக்கலாம். எடுத்துக்காட்டு :

(அ) கலா.3:16

(ஆ) வலைகளைப் போடும்படி கர்த்தர் சொன்னபோது ஒரு வலையைப் போட்டதினால் கிழிந்துபோகும் அபாயம் ஏற்பட்டதை லூக்.5:4–6இலும்

வலையைப்போடச் சொன்னபோது வலையைப்போட்டதால் மிகுதியான மீன்களைப் பிடித்தும் அபாயமின்மையை யோவா.21:6–11இலும் காண்கிறோம் (வலை, வலைகள்).

11. 'ஆகையால், மேலும், என்னத்தினாலெனில் . . .' போன்ற சொற்களைக் கவனித்து இவற்றால் பிணைக்கப்படுகின்ற கருத்துக்களை ஆராயலாம். ஆகாய் 2:6இலுள்ள இன்னும் ஒருதரம் என்ற சொல்லைக் கவனித்துத் தியானித்ததை எபி.12:26, 27இல் காண்க.

12. எதிர்மறைகளைத் தியானிக்கலாம். எபே.4:8,9இலுள்ள எதிர்மறை தியானம் இதற்கு எடுத்துக்காட்டாகும்.

**காணும், கேட்கும் பயன்**

13. காட்சிகளைக் கற்பனைக் கண்களில் நிறுத்தித் தியானிக்கவேண்டும். ஏசா.53:5ஐத் தியானிக்கையில் ஒவ்வொரு காயத்தையும் மனக் கண்ணால் காணவேண்டும். ஐயாயிரம் ஆண்களும் மற்றவர்களும் வரிசை வரிசையாக உட்கார்ந்த பந்தியின் காட்சி, இயேசு குஷ்டரோகியைத் தொடுதல், நீரின் மீது நடத்தல், கப்பற்சேதம் போன்ற காட்சிகளை எளிதில் மனக்கண்முன் கொண்டுவரலாம்.

14. வேதத்தில் வரும் இடங்களின் பெயர்களை வேதத்தின் கடைசியிலுள்ள தேசப்படங்களில் பார்ப்பது நல்லது.

15. சில பகுதிகளை உணர்ச்சியோடு சொல்லிப் பார்க்கலாம். எடுத்துக் காட்டு: அப்.9:4–8இல் கர்த்தரும் சவுலும் கூறியவற்றைச் சத்தமாகச் சொல்லிப்பாருங்கள்.

பிற குறிப்புகள்

16. முக்கிய வசனத்தை மனப்பாடம் செய்யலாம்.

17. வாழ்க்கை வரலாறுகளையும் குணநலன்களையும் (நல்ல, கெட்ட செயல்கள், சொற்கள்) ஆகியவற்றையும் தியானிக்கலாம்.

18. தியானிக்கும்போது மனதை அலையவிடக்கூடாது. ஒரே மனதாக, கவனத்தோடு படித்தால் தேவ பிரசன்னம் படிப்பவரை நிரப்பும். தேவன் வசனத்தின் மூலமாகப் பேசுவார்.

19. நம்முடைய வாழ்க்கையோடு ஒப்பிட்டு நம்மைச் சரி செய்யவேண்டும் (யாக்.1:22). மற்றவரைக் குறை கூறும் நோக்கத்தோடு தியானிக்கக் கூடாது. மேலும், மற்றவர்களுக்குப் பிரசங்கம் பண்ணவேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடு தியானிக்கக்கூடாது. நன்கு கற்று, நம் வாழ்க்கையில் கடைப்பிடித்து, பின்னர் பிறருக்குக் கூறலாம்.

20. எல்லாவற்றிற்கும் ஆவிக்குரிய பொருள் என்ற பெயரில் சொந்தக் கருத்துக்களை எடுத்துக்கொள்ளக்கூடாது. ஆனால், ஆவிக்குரிய பொருள் இருக்கும் இடங்களை விட்டுவிடக்கூடாது. நிதானம் தேவை.
21. தியானத்தில் கண்ட குறிப்புக்களை ஏட்டில் குறித்தபின் சில நேரத்தை ஜெபத்திலும் துதித்தலிலும் தேவனோடு செலவிடலாம்.
22. கற்ற பகுதியை அன்று முழுவதும் மீண்டும் மீண்டும் நினைத்துப் பார்க்க வேண்டும். இரவு தூங்கச் செல்லும்போது அப்பகுதியை நினைத்துப் பார்க்கலாம். மறுநாள் அடுத்த பகுதியை வாசிக்கும் முன்னர் முந்திய நாளின் பகுதியை நினைவுகூரலாம்.

மேலே கூறப்பட்ட எல்லா முறைகளையும் செய்ய முடியாமற்போகலாம். எல்லாக் கேள்விகளும் பொருத்தமுள்ளவையாக இல்லாமலும் போகலாம். முடிந்தவரை பொருத்தமானவற்றைப் பயன்படுத்தவேண்டும்.

குறிப்பு: "என்னாலே இவ்வளவும் செய்ய முடியுமா?" என்று தயங்க வேண்டாம். முடிந்தவரை வேதத்தை ஆராய்ந்து கற்க இன்றே தீர்மானிப்பீரா? (சங்.1:1–3)

# 3. அதிகாரங்களைத் தியானிக்கும் முறை

வேதத்தை நன்கு கற்க (தியானிக்க) விரும்புகிறவர்கள் ஏதேனும் ஒரு முறையைப் பின்பற்றுவது அவசியம். இந்த அத்தியாயத்தில் அதிகாரங்களைத் தியானிக்கும் முறையைக் காண்போம்.

ஒவ்வொருநாளும் ஒரு அதிகாரத்தை நன்கு கற்றால் வேதத்திலுள்ள 1189 அதிகாரங்களையும் மூன்று ஆண்டுகட்குச் சற்று அதிக நாட்களில் கற்று முடிக்க முடியும். புதிய ஏற்பாட்டில் ஆரம்பிப்பது நல்லது. புதிய ஏற்பாட்டைத் தியானித்து முடித்ததும் பழைய ஏற்பாட்டைத் தொடங்கலாம்.

பெரிய அதிகாரமாயிருந்தால் ஒரு சில நாட்களில் ஒரு அதிகாரத்தைத் தியானிக்கலாம். சிறிய அதிகாரங்களாயிருப்பின் ஒரு நாளில் சில அதிகாரங்களைத் தியானிக்கலாம்.

ஒவ்வொரு ஆண்டிலும் ஒரு முறை வேதம் முழுவதையும் வாசிக்கும் பலருண்டு. அவ்வாறு செய்யும்போது குறிப்புக்கள் எடுத்து தியானிப்பது சிறந்தது.

நீங்கள் படிக்க வேண்டிய அதிகாரத்தை இரு முறையேனும் கூர்ந்து கவனித்து வாசிக்கலாம். அதிகாரத்திற்கு ஒரு பெயர் சூட்டுங்கள். அதிகாரத்தின் பல பகுதிகளையும் பொருள் வாரியாகப் பிரித்து, சிறு தலைப்புகள் கொடுங்கள். முக்கியமான கருத்துக்கள், சொற்கள் ஆகியவற்றை அடிக்கோடிடுங்கள்.

அதிகாரம் 2 இலுள்ளவற்றைப் பின்பற்றி உங்கள் தியானத்தைத் தொடருங்கள். குறிப்புக்களை ஏட்டில் எழுதிவைப்பதற்குத் தவறாதேயுங்கள். முக்கியமான வசனங்களை மனப்பாடம் செய்வது சிறந்தது.

### எடுத்துக்காட்டு – 1

சங்.91ஐ வாசித்து, தியானித்து, குறிப்புக்களை எழுதுங்கள். பின்னர் கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்களை வாசியுங்கள்.

சங்கீதம் 91

1 *உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவன் சர்வவல்லவருடைய நிழலில் தங்குவான்.*

2 *நான் கர்த்தரை நோக்கி: நீர் என் அடைக்கலம், என் கோட்டை, என் தேவன், நான் நம்பியிருக்கிறவர் என்று சொல்லுவேன்.*

3 அவர் உன்னை வேடனுடைய கண்ணிக்கும், பாழாக்கும் கொள்ளை நோய்க்கும் தப்புவிப்பார்.

4 அவர் தமது சிறகுகளாலே உன்னை மூடுவார்; அவர் செட்டைகளின் கீழே அடைக்கலம் புகுவாய்; அவருடைய சத்தியம் உனக்குப் பரிசையும் கேடகமுமாகும்.

5 இரவில் உண்டாகும் பயங்கரத்துக்கும், பகலில் பறக்கும் அம்புக்கும்,

6 இருளில் நடமாடும் கொள்ளை நோய்க்கும், மத்தியானத்தில் பாழாக்கும் சங்காரத்துக்கும் பயப்படாதிருப்பாய்.

7 உன் பக்கத்தில் ஆயிரம்பேரும், உன் வலதுபுறத்தில் பதினாயிரம்பேரும் விழுந்தாலும், அது உன்னை அணுகாது.

8 உன் கண்களால் மாத்திரம் நீ அதைப் பார்த்து, துன்மார்க்கருக்கு வரும் பலனைக் காண்பாய்.

9 எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உனக்குத் தாபரமாகக் கொண்டாய்.

10 ஆகையால் பொல்லாப்பு உனக்கு நேரிடாது, வாதை உன் கூடாரத்தை அணுகாது.

11 உன் வழிகளிலெல்லாம் உன்னைக் காக்கும்படி, உனக்காகத் தம்முடைய தூதர்களுக்குக் கட்டளையிடுவார்.

12 உன் பாதம் கல்லில் இடறாதபடிக்கு அவர்கள் உன்னைத் தங்கள் கைகளில் ஏந்திக்கொண்டுபோவார்கள்.

13 சிங்கத்தின்மேலும் விரியன் பாம்பின்மேலும் நீ நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப்போடுவாய்.

14 அவன் என்னிடத்தில் வாஞ்சையாயிருக்கிறபடியால் அவனை விடுவிப்பேன்; என் நாமத்தை அவன் அறிந்திருக்கிறபடியால் அவனை உயர்ந்த அடைக்கலத்திலே வைப்பேன்.

15 அவன் என்னை நோக்கிக் கூப்பிடுவான், நான் அவனுக்கு மறுஉத்தரவு அருளிச்செய்வேன்; ஆபத்தில் நானே அவனோடிருந்து, அவனைத் தப்புவித்து, அவனைக் கனப்படுத்துவேன்.

16 நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி, என் இரட்சிப்பை அவனுக்குக் காண்பிப்பேன்.

**இச்சங்கீதத்தின் தலைப்பு**

நீங்களாக ஒரு பொருத்தமான தலைப்பை எழுதுங்கள். (“சர்வ வல்லவரின் நிழலில் தங்குதல்”, “தேவனுடைய பாதுகாப்பு,” “தேவனுடைய வாக்குத்தத்தங்கள்,” “தேவ பிள்ளைகளுக்குக் கிடைக்கும் பாதுகாப்பு” போன்ற ஏதேனும் ஒரு தலைப்பு)

இச்சங்கீதத்தைக் கவனித்து வாசித்தால் இதில் பேசுகிறவர்கள் ஒன்றுக்கு மேற்பட்ட நபர்கள் என்று காணலாம்.

வச.1இல் 'நான், அவர், நீ' போன்ற சொற்கள் இடம்பெறவில்லை. அதில் ஒரு அறிக்கை (அறிவிப்பு, கருத்து) கூறப்பட்டுள்ளது. முதல் வசனமாகவும் சங்கீதத்தின் கருத்தைச் சுருக்கமாகக் கூறுவதாலும் இதை **முகவுரை** என்று அழைக்கலாம்.

வச.2இல் 'நான் கர்த்தரை நோக்கி. . . என்று சொல்லுவேன்' என்பதைக் கவனித்தால் இது '**சங்கீதக்காரனின் சாட்சி**'யாக அமைகிறது என்று காணலாம்.

வச.3இலிருந்து 8வரை தேவனுடைய வாக்குறுதிகளை, சங்கீதக்காரன் கூறுவதால் இப்பகுதிக்கு '**சங்கீதக்காரன் மூலம் தேவன் தரும் வாக்குறுதிகள்**' என்று பெயரிடலாம்.

வச.9இல் சங்கீதக்காரன் தன்னையும் இச்சங்கீதத்தை வாசிப்பவரையும் ஒப்பிடுகிறார். மேலும் வச.10 'ஆகையால்' என்று தொடங்குவதால் '**வாக்குறுதிகள் நிறைவேறுவதற்கான நிபந்தனை**' என்று வச.9ஐ அழைக்கலாம்.

வச.10–13ஐ '**சங்கீதக்காரன் மூலம் தேவனின் வாக்குறுதிகள் – தொடர்ச்சி**' என்று கருதலாம்.

வச.14–16இல் சங்கீதக்காரனை நிறுத்திவிட்டு தேவன் நேரடியாகப் பேசுகிறதைக் காண்கிறோம். வாக்குறுதிகளும் அவற்றிற்கான நிபந்தனைகளும் கூறப்பட்டுள்ளன. ஆகவே, வ.14–16ஐ '**தேவன் நேரிடையாகத் தரும் நிபந்தனைகளுடனான வாக்குறுதிகள்**' என்று பெயர் சூட்டலாம்.

உங்கள் வேதத்திலும் ஏட்டிலும் இவற்றை எழுதுங்கள்.

**முக்கிய வசனம்: வசனம் 1**

இந்த வசனம் இச்சங்கீதத்தின் திறவுகோல் வசனம் ஆகும்.

இச்சங்கீதத்தைப் பின்வருமாறு பகுத்துத் தியானிப்போம்.

**வசனம் 1. சங்கீதத்தின் முகவுரை**

உன்னதமானவரின் மறைவிலிருக்கிறவனைப் பற்றி சங்கீதக்காரன் கூறுவது: உன்னத நோக்கங்களைக் கொண்டவனாகவும் உன்னதமானவரைத் தியானித்து அவர்மேல் நம்பிக்கை வைத்திருப்பவனாகவும் இருப்பவன்தான் உன்னதமானவரின் மறைவில் தங்கியிருக்க முடியும். இப்படிப்பட்டவனைத் தம்முடைய சர்வ வல்லமையினாலும் உன்னதமானவர் பாதுகாப்பார்.

**தற்பரிசோதனை**

உம் நோக்கம் எப்படியிருக்கிறது? உம் தியானம், உம் நம்பிக்கை யார் அல்லது எது? தேவனுடன் தனிப்பட்ட உறவுடையவராயிருக்கிறீரா? உன்னதமானவரின் மறைவில் நீர் இருக்கிறீரா?

**வசனம் 2. சங்கீதக்காரனின் சாட்சி**

உன்னதமானவர் சங்கீதக்காரனுக்கு:-

அ. அடைக்கலமாக (தங்கும், இளைப்பாறும் இடமாக) இருக்கிறார்

ஆ. கோட்டைபோன்று எதிரிகளினின்று பாதுகாவலாக இருக்கிறார்

இ. வணக்கத்திற்குரிய தேவனாக இருக்கிறார்

ஈ. (அவர் ஒருவரே) நம்பிக்கைக்குப் பாத்திரமானவராக இருக்கிறார்.

உமக்கும் அப்படி இருக்கிறார் என்பதை முற்றிலும் விசுவாசித்து வாழ்கிறீரா?

**வசனங்கள் 3–8. சங்கீதக்காரன் மூலமாகத் தேவன் நமக்குத் தரும் வாக்குறுதிகள்**

அவர் உன்னை. . .என்று எழுதியிருப்பதைக் கவனிக்கவும். இப்பகுதியின் மூலம் நமக்குக் கிடைத்துள்ள வாக்குறுதிகள் எவை? (கோடிட்ட பகுதிகளைக் கவனமாக நிரப்புக)

1. ____________________
2. ____________________
3. ____________________
4. ____________________
5. ____________________
6. ____________________

**குறிப்பு:** வாக்குறுதிகளை நீங்கள் உணர்ந்து தியானிப்பதற்காக உங்களை எழுதுமாறு கேட்கப்பட்டுள்ளது.

மேலே உள்ளவற்றில் எழுவாய்களையும் பயனிலைகளையும் தனித்தனியே தியானிக்கவும்.

எடுத்துக்காட்டு: **எழுவாய்கள்:** வேடனுடைய கண்ணி, பாழாக்கும் கொள்ளை நோய். . . .

**பயனிலைகள்:** தப்புவிப்பார், மூடுவார் . . . .அதாவது தப்புவிக்கப்படுதல், மூடப்படுதல், அடைக்கலம் புகுதல். . . .

**வசனம் 9. வாக்குறுதிகள் நிறைவேறுதலுக்கான நிபந்தனை**

நிபந்தனையை எழுதுக: ______________________________

______________________________________________

இந்த நிபந்தனையை நிறைவேற்றுகிறவர்களுக்கு இவ்வாக்குத்தத்தங்கள் அனைத்தும் நிச்சயம் நிறைவேறும் (2 கொரி.1:20). மற்றவர்களுக்கு இவற்றிற்கு உரிமை இல்லை. (தாபரம் – அடைக்கலம், பாதுகாப்பான இடம்)

**தற்பரிசோதனை:** சகோதரனே, உம் தாபரம் என்ன? மனிதர்களா, கல்வியா, பணமா. . . அல்லது தேவனா? இன்றைக்கே உன்னதமானவரை உமக்குத் தாபரமாகக்கொள்வீரா? உம் பாவங்களை அறிக்கையிட்டு உம் உள்ளத்தில் வரும்படி இயேசுவை அழைக்கவேண்டும். அவர் உம்மை ஏற்றுக்கொள்ளும்படி உம் வாழ்க்கையை அவருக்கு ஒப்படைப்பீராக. அப்படிச் செய்வீரானால் இவ்வாக்குறுதிகள் அனைத்தும் உமக்கும் சொந்தமாகும்.

**வசனங்கள் 10–13. சங்கீதக்காரன் மூலம் தேவன் தரும் வாக்குறுதிகளின் தொடர்ச்சி**

உனக்கு, உன்....கட்டளையிடுவார்.....என்று எழுதியிருப்பதைக் கவனிக்கவும்

வசனம் 10இல் 'ஆகையால்' என்ற சொல் நிபந்தனையை வலியுறுத்துகின்றது.

இப்பகுதியில் நமக்குக் கிடைத்துள்ள வாக்குத்தத்தங்கள் எவை? (கோடிட்ட பகுதிகளில் நிரப்புக).

1. ______________________________
2. ______________________________
3. ______________________________
4. ______________________________

______________________________

______________________________

(எழுவாய் பயனிலைகளைத் தியானிக்கவும்)

**வசனங்கள் 14–16. தேவன் நேரிடையாகத் தரும் நிபந்தனைகளோடு கூடிய வாக்குறுதிகள்**

இதுவரை சங்கீதக்காரன் மூலமாகப் பேசிய உன்னதமானவருக்குத் தமது உற்சாகத்தைத் (ஆவலை, அன்பை) தாங்க முடியவில்லைபோலும். தாமே நேரிடையாக வாக்குறுதிகள் தந்துவிட்டார். அவன், என்னிடத்தில்... என்று எழுதியிருப்பதைக் கவனிக்கவும்.

**தேவனுடைய நிபந்தனைகள்:**

1. தேவனிடத்தில் வாஞ்சையாயிருத்தல்: சகோதரனே, தேவன்மீது உம் வாஞ்சை எவ்விதம் இருக்கின்றது? தேவன்மீது வாஞ்சையாயிருக்கிறேன் என்று சொல்வீரானால் அவருக்காக என்னவெல்லாம் செய்கிறீர்?
2. தேவனுடைய நாமத்தை அறிந்திருக்கிறீரா? அவருடைய நாமங்களைத் தியானிப்பீராக.
3. தேவனை நோக்கிக் கூப்பிடுகிறீரா? உம் ஜெப வாழ்க்கை எவ்வாறு இருக்கிறது?

தேவன் நேரிடையாகத் தரும் வாக்குறுதிகள் (வசனங்கள் 14–16) எவை? (கோடிட்ட பகுதிகளில் நிரப்புக).

1. ______
2. ______
3. ______
4. ______

______

______

மத்.18:18; மாற்கு 16:17, 18; லூக்.10:19 என்ற வசனங்களையும் தியானியுங்கள்.

**இந்நூலை எழுதியவரின் சாட்சி:** பல ஆண்டுகட்கு முன் நான் மருத்துவரால் கைவிடப்பட்டு, மரணப்படுக்கையிலிருந்தேன். தேவன் என்னை எடுத்துக்கொள்வார் என்ற எண்ணம் எனக்குள் வந்தது. ஏனெனில், அதற்கு சில காலத்திற்குமுன் தமிழ்நாட்டில் இரு தேவனுடைய ஊழியர் நடுத்தர வயதில் நித்திரையடைந்திருந்தார்கள். என்னைச் சந்திக்க வந்த ஒரு சகோதரர் 91ஆம் சங்கீதத்தை வாசித்தார். மனப்பாடமாகத் தெரிந்திருந்தபோதிலும் அதிலுள்ள வாக்குறுதிகளைச் சரியாகச் சுதந்தரித்துக்கொள்ளாத நிலையிலிருந்தேன். 16ஆம் வசனத்தை அச்சகோதரர் வாசித்தபோது 'நீடித்த நாட்களால் அவனைத் திருப்தியாக்கி' **(With long life will I satisfy him)** என்ற பகுதியை மீண்டும் வாசிக்கச் சொல்லித் தியானித்தேன்.

"நான் திருப்தியாகும்வரை எனக்கு நீடித்த நாட்கள் தருவதாகத் தேவன் வாக்களித்திருக்கிறார். மற்றவர்கள் ஏன் மரணமடைந்தார்கள் என்பது

எனக்குத் தெரியாது. அது எனக்குத் தேவையுமில்லை. மக்களின் வாழ்க்கை உதாரணங்கள் அல்ல, தேவனுடைய வசனமே மாறாதது. தேவன் பொய் சொல்ல மனிதனல்ல. ஆகவே, தேவனுடைய வாக்குத்தத்தத்தின்படி நான் திருப்தி யாகும்வரை அவர் எனக்கு நீடித்த நாட்களைத் தந்துதான் ஆகவேண்டும். இப்பொழுது நான் திருப்தியடையவில்லை. எனவே, நான் சாகமுடியாது. நான் சாகமாட்டேன்." என்று தேவனுடைய கிருபையால் விசுவாசித்தேன். வாக்குமாறாத தேவன் என் மரணப்படுக்கையை மாற்றினார். துதியையும் சாட்சியையும் என் வாயில் தந்தார். தேவனுடைய வாக்குறுதிகள் எல்லாம் இயேசு கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும், அவருக்குள் ஆமென் என்றும் இருக்கிறதே (2 கொரி.1:20). கர்த்தருக்கே மகிமையுண்டாவதாக.

சகோதரனே, எனக்கு அடைக்கலமாயிருக்கிற உன்னதமான கர்த்தரை உமக்குத் தாபரமாக இன்றைக்கே ஏற்றுக்கொள்ளும். கல்வாரியைத் தியானித்து, பாவங்களை அறிக்கையிட்டு, அவரிடம் உம் வாழ்க்கையை ஒப்புக்கொடும் (இந்நூலில் பக்கம் 74–81ஐ வாசிக்கவும்).

அதற்குப்பின் தேவனுடைய வாக்குறுதிகளுக்காக அவரைத் துதித்து இவ்வாக்குறுதிகள் அனைத்தையும் உரிமையுடன் பெற்றுக்கொள்வீராக.

போராட்டங்கள், வியாதிகள்......யாவற்றையும் தேவனின் வாக்குத் தத்தங்களின் மூலம் உம் கால்களின் கீழ் மிதித்துப்போடும். தேவையான நன்மைகளை விசுவாசத்தோடு பெற்றுக்கொள்ளும்.

**இந்தச் சங்கீதத்திலிருந்து நாம் கற்றுக்கொள்பவை** அநேகம். அதில் சிலவற்றை மட்டும் கீழே தருகிறோம்.

தேவன் தன் பிள்ளைகளைப் பாதுகாக்கிறார். பலவிதமான சூழ்நிலை களிலும் ஆபத்துக்களின் மத்தியிலும் அவர் பாதுகாக்க வல்லவர். அவருடைய பாதுகாப்புக்களுக்கு நிபந்தனைகள் உண்டு. நிபந்தனைகளை நிறைவேற்று கிறவர்களுக்கு மிகுந்த ஆசீர்வாதங்களும் பாதுகாவலும் உண்டு.

இச்சங்கீதம் முழுவதிலும் 'அவன், உனக்கு. . .' என்று ஒருமையில் இருப்பதைக் கவனியுங்கள். எனவே இந்த வாக்குறுதிகள் தனிப்பட்ட நபர்களுக்கே சொந்தம்.

இந்தச் சங்கீதத்தில் காணப்படும் தேவனுடைய பெயர்கள் எவை? அவற்றின் பொருள் என்ன? பெயர்களைத் தியானிப்பதோடு, அப்பெயர்களைக் கூறி தேவனைத் துதியுங்கள். தேவனைப்பற்றி வேறு எவற்றை இச்சங்கீதத்தி லிருந்து அறிந்துகொள்கிறோம்? அவற்றிற்காகவும் துதிக்கவும்.

## எடுத்துக்காட்டு:– 2

### 1 யோவான் 1

1 ஆதிமுதல் இருந்ததும், நாங்கள் கேட்டதும், எங்கள் கண்களினாலே
கண்டதும், நாங்கள் நோக்கிப்பார்த்ததும், எங்கள் கைகளினாலே
தொட்டதுமாயிருக்கிற ஜீவவார்த்தையைக்குறித்து உங்களுக்கு
அறிவிக்கிறோம்.

2 அந்த ஜீவன் வெளிப்பட்டது; பிதாவினிடத்திலிருந்ததும், எங்களுக்கு
வெளிப்பட்டதுமான நித்தியமாயிருக்கிற அந்த ஜீவனை நாங்கள்
கண்டு, அதைக் குறித்துச் சாட்சிகொடுத்து, அதை உங்களுக்கு
அறிவிக்கிறோம்.

3 நீங்களும் எங்களோடே ஐக்கியமுள்ளவர்களாகும்படி, நாங்கள்
கண்டும் கேட்டும் இருக்கிறதை உங்களுக்கும் அறிவிக்கிறோம்;
எங்களுடைய ஐக்கியம் பிதாவோடும் அவருடைய குமாரனாகிய
இயேசு கிறிஸ்துவோடும் இருக்கிறது.

4 உங்கள் சந்தோஷம் நிறைவாயிருக்கும்படி இவைகளை உங்களுக்கு
எழுதுகிறோம்.

5 தேவன் ஒளியாயிருக்கிறார், அவரில் எவ்வளவேனும் இருளில்லை;
இது நாங்கள் அவரிடத்தில் கேட்டு உங்களுக்கு அறிவிக்கிற விசேஷமா
யிருக்கிறது.

6 நாம் அவரோடே ஐக்கியப்பட்டவர்களென்று சொல்லியும், இருளிலே
நடக்கிறவர்களாயிருந்தால், சத்தியத்தின்படி நடவாமல் பொய்
சொல்லுகிறவர்களாயிருப்போம்.

7 அவர் ஒளியிலிருக்கிறதுபோல நாமும் ஒளியிலே நடந்தால் ஒருவரோ
டொருவர் ஐக்கியப்பட்டிருப்போம்; அவருடைய குமாரனாகிய இயேசு
கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி, நம்மைச்
சுத்திகரிக்கும்.

8 நமக்குப் பாவமில்லையென்போமானால், நம்மை நாமே வஞ்சிக்கிறவர்
களாயிருப்போம், சத்தியம் நமக்குள் இராது.

9 நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு
மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு
அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்.

*10 நாம் பாவஞ்செய்யவில்லையென்போமானால், நாம் அவரைப் பொய்ய ராக்குகிறவர்களாயிருப்போம், அவருடைய வார்த்தை நமக்குள் இராது.*

இந்த அதிகாரத்தை வாசித்து, தியானித்து, குறிப்புக்கள் எழுதுங்கள். பின்னர் கீழே இருப்பவற்றை வாசித்துப்பாருங்கள்.

(அ) **வாசித்த அதிகாரத்திற்கு ஒரு தலைப்பு கொடுக்கவும். –** (ஆசிரியர் தரும் தலைப்பு: தேவனோடும் சகோதரரோடும் உள்ள ஐக்கியம்)

(ஆ) **பகுதிகளாகப் பிரித்தல்:** இவ்வதிகாரத்தைப் பொருள்வாரியாகப் பிரித்து, சிறு தலைப்புக்கள் கொடுங்கள்.

ஆசிரியர் தரும் சிறு தலைப்புக்கள்

வ.1–4 ஐக்கியம் அறிவித்தல்

வ.5–7 ஐக்கியத்தின் அடிப்படை

வ.8–10 முறிந்த ஐக்கியத்தைச் சரி செய்யும் முறை

(இ) **முக்கிய வசனம்:** இந்த அதிகாரத்தின் முக்கிய வசனங்கள், சொற்கள், சொற்றொடர்கள் எவை? முக்கிய வசனங்கள், முக்கிய சொற்கள் என்று நீங்கள் கருதுபவற்றை அடிக்கோடிடுங்கள்.

(ஈ) **நோக்கம்:** இவ்வதிகாரம் எழுதப்பட்டதின் நோக்கம் என்ன? படிப்பவரின் (வ.4).............

**வ.1–4 ஐக்கியம் அறிவித்தல்**

எதைக் குறித்துச் சாட்சி கொடுக்கிறார்கள்?

வ.2 ____________________

ஏன் அறிவிக்கிறார்கள்? வ.3 ____________________

அறிவிக்கிறவர்களின் ஐக்கியம் யாரோடு இருக்கிறது?

வ.3 ____________________

பிறரை இந்த ஐக்கியத்தில் பங்குபெற அழைக்கிறவர்கள், பிதாவோடும் அவருடைய குமாரனாகிய இயேசு கிறிஸ்துவோடும் ஐக்கியம் வைத்தல்வேண்டும்.

பிறரை ஐக்கியத்தில் இணைக்க என்ன முறை கையாளப்பட்டுள்ளது? ஜீவ வார்த்தை (ஜீவன், நித்திய ஜீவன்)யைக் குறித்து சாட்சி கொடுத்து அறிவித்தல். ஜீவ வார்த்தையைக்குறித்து என்ன சாட்சி கொடுத்தார்கள்?

**ஜீவ வார்த்தையானது:**

(1) ஆதியிலே இருந்தது (யோவா.1:1)

(2) சீஷர்கள் கேட்டது (மத்.13:16, 17)

(3) சீஷர்கள் கண்டது (லூக்.2:32; யோவா.1:14)

(4) சீஷர்கள் நோக்கிப் பார்த்தது (மத்.27:55)
(5) சீஷர்கள் தொட்டது (யோவா.20:27)
(6) வெளிப்பட்டது (அப்.2:22; 1 தீமோ.3:16)
(7) பிதாவினிடத்தில் இருந்தது (யோவா.1:1)
(8) சீஷர்களுக்கு வெளிப்பட்டது (மத்.16:16, 17)
(9) நித்தியமாயிருக்கிறது (எபி.1:10–12).

**தற்பரிசோதனை:** நான் இந்த ஐக்கியத்தில் இருக்கிறேனா (யோவா.1:12)? மற்றவர்களை இந்த ஐக்கியத்திற்கு வரும்படி அழைக்கிறேனா மத்.28:19,20? (இல்லையெனில் மன்னிப்பு கேட்டு, ஜெபித்து, புதிய தீர்மானம் எடுக்கவும்).

**வ.5–7 ஐக்கியத்தின் அடிப்படை**

தேவனுடைய தன்மை என்ன? வ.5 ____________________

______________________________________________

தேவனோடு ஐக்கியப்பட்டவர்கள் எதில் நடக்கவேண்டும்? வ.6,7 ________
ஒளியில் நடப்பது என்றால் என்ன? ____________________
தேவனோடு ஐக்கியம் வைத்துள்ளோம் என்று கூறிக்கொண்டு இருளில் நடப்பவர்கள் யார்? வ.6 ____________________
ஒளியில் நடப்பது எப்படி? (வ.7) ____________________
ஒளியில் நடந்தால் யாருடன் ஐக்கியமாயிருப்போம்? ____________
இதிலிருந்து நாம் கற்றுக்கொள்வது யாது? ____________
வ.7 இலுள்ள நிபந்தனை என்ன? ____________________
நிபந்தனையை நிறைவேற்றினால் என்ன கிடைக்கும்? ____________
எது சுத்திகரிக்கிறது? ____________________
எதிலிருந்து நாம் சுத்திகரிக்ககப்படுகிறோம்? ____________
எவ்வளவு பாவங்கள் சுத்திகரிக்கப்படுகின்றன? ____________

**தற்பரிசோதனை:** நான் ஒளியில் நடக்கிறேனா? இருளின் கிரியைகள் என்னிடத்தில் உண்டா? சகோதரரோடு என் ஐக்கியம் எப்படி இருக்கிறது? ஒளியில் நடக்கவும் சகோதரரோடு ஐக்கியம் கொள்ளவும் தீர்மானித்து செயல்படுத்துவீராக.

**வ.8–10 முறிந்த ஐக்கியத்தைச் சரிசெய்யும் முறை**

நாம் பாவம் செய்யவில்லை என்போமானால் நம்மைக் குறித்து வேதம் என்ன கூறுகிறது?
வ.8, 10 (அ) ____________________(ஆ)____________________

(இ)______________________________(ஈ)______________________________

நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டால் அவர் செய்வது என்ன?

வ.9 (அ) . . . . . . . . . . . . . . . . . . . . மன்னித்து (ஆ) எல்லா. . . . . . . . . . .

எவற்றை மன்னிக்கிறார்? பாவங்களை மன்னிக்கிறார்

எவற்றிலிருந்து நம்மைச் சுத்திகரிக்கிறார்? அநியாயத்திலிருந்து சுத்திகரிக்கிறார்

எவ்வளவு அநியாயத்தை நீக்குகிறார்? எல்லா அநியாயத்தையும் நீக்குகிறார்.

எதன் மூலம் சுத்திகரிக்கிறார் வ. 7 ______________________________

______________________________________________________________

**(எ) இவ்வதிகாரத்தில் கற்றுக்கொண்ட பாடங்கள்**

**(1) தேவனைப் பற்றிய பாடங்கள்:**

A. **தேவன்** 1. ஒளியாயிருக்கிறார் 2. எவ்வளவேனும் இருள் இல்லாதவர் 3. பாவங்களை மன்னிக்கிறவர் 4. எல்லா அநியாயத்தையும் நீக்குகிறவர் 5. சுத்திகரிக்கிறவர் 6. உண்மையுள்ளவர் 7. நீதியுள்ளவர்

B. **பிதா** 1. ஜீவ வார்த்தையைப் பிறப்பித்தவர் (வ.2)

2. மனிதரோடு ஐக்கியம் கொள்பவர் (வ.3)

C. **குமாரன்** 1. ஆதி முதல் இருந்தவர் 2. பிதாவினிடத்தில் இருந்தவர் 3. உலகத்தில் வெளிப்பட்டவர் 4. நித்தியமானவர் 5. மனிதரோடு ஐக்கியம் கொள்பவர் 6. பாவங்களைத் தமது இரத்தத்தால் சுத்திகரிப்பவர்.

II **இதர பாடங்கள்:**

(1) நாம் தேவனோடு ஐக்கியப்பட்டால் நாமும் அவரைப்போல ஒளியில் நடப்போம்.

(2) தேவனிடத்திலிருந்து வெளிப்பட்ட ஜீவவார்த்தையான இயேசு கிறிஸ்துவின் மூலம் தேவனோடு ஐக்கியம் கொள்கிறோம். இந்த ஜீவ வார்த்தையை அறிவிப்பதின் மூலம் பிறரை இந்த ஐக்கியத்தில் இணையும்படி அழைக்கவேண்டும்.

(3) நாம் தேவனோடு ஐக்கியப்பட்டிருந்தால்தான் மற்றவர்களை இந்த ஐக்கியத்தில் இணைய அழைக்கவேண்டும்.

(4) சகோதரரோடும் ஐக்கியம் கொள்தல் அவசியம்.

(5) நம்முடைய பாவங்களை நாம் ஒத்துக்கொண்டு அறிக்கையிடவேண்டும்.

(6) பாவ அறிக்கை செய்த உடன், நம்முடைய கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது.

(7) நம்முடைய பாவங்களை மன்னிப்பதற்கு தேவன் உண்மையுள்ளவர், நீதியுள்ளவர்.

(நாம் என்பதை நான் என்று மாற்றி வாசித்துப் பார்க்கவும்)

**தேவனுடைய கட்டளைகள்:** 1. சகோதரரோடு ஐக்கியப்படு 2. ஒளியில் நட 3. பாவங்களை அறிக்கையிடு

**தேவனுடைய வாக்குத்தத்தங்கள்:**

1. வ.7 ________________________________

2. வ.9 ________________________________

அடுத்த அதிகாரத்தோடு எப்படிப் பொருந்துகிறது என்று ஆராய்க. இவ்வதிகாரத்தின் வசனங்களுக்கு ஒத்த வாக்கியங்களைக் கண்டுபிடித்து, தியானியுங்கள்.

இந்த அதிகாரத்திற்காகத் தேவனைத் துதியுங்கள். இதில் கற்ற பாடங்களை நினைவில் வைத்திருக்கவும், பயன்படுத்தவும் தேவன் உதவுமாறு ஜெபிக்கவும். வேதத்திலும் ஏட்டிலும் குறிப்புக்களை எழுதுங்கள்.

# 4. பத்திகளைத் தியானிக்கும் முறை

கூறப்பட்டுள்ள பொருள் மாறும்போது ஒரு பத்தி முடிந்து அடுத்த பத்தி தொடங்குகிறது என்று கணிக்கவேண்டும். சில பத்திகள் ஒரு அதிகாரத்தில் ஆரம்பமாகி அடுத்ததில் முடியலாம். முழுப்பத்தியையும் ஒரே நாளில் கற்பது நல்லது.

(வேதம் முழுவதையும் ஒரு முறையேனும் வாசித்தல் அவசியம். தினமும் 3 அல்லது 4 அதிகாரங்கள் வாசித்தால் ஒரு ஆண்டில் முடிக்கலாம். இப்படிச் செய்வது வாசிப்பது, தியானிப்பது அல்ல. வாசிப்பதினால் தியானிப்பதை நிறுத்திவிடக்கூடாது. இரண்டும் தேவை.)

வேதத்தில் நமது அன்றைய தேவைக்கேற்ற ஒரு பத்தியைத் தெரிந் தெடுத்து, தியானிக்கலாம்.

(அ) தியானத்திற்காகத் தெரிந்த பத்தியை மெதுவாக ஒவ்வொரு வார்த்தையும் சிந்தையில் பதியும்வண்ணம் வாசிக்கவேண்டும். அப்பகுதியின் மையப் பொருளைக் கண்டுபிடிக்கவேண்டும். பத்திக்கு ஒரு தலைப்பு கொடுக்கவேண்டும்.

(ஆ) பத்தியிலுள்ள முக்கியமான வசனத்தையும் முக்கியமான சொற் களையும் அடிக்கோடிடுக.

(இ) அத்தியாயம் 2இல் படித்த கேள்விகளைக் கொண்டு ஆராய்க. முக்கிய மான காரியங்களை நோட்டில் குறிக்கவும் (வேதத்திலும் குறிக்கலாம்).

(ஈ) இப்பத்தியின் பொருளைச் சார்ந்த மற்றப் பத்திகளை, வசனங்களை ஒத்த வாக்கிய அகராதியைப் பயன்படுத்திக் கண்டுபிடித்து வசனத்தோடு வசனத்தை ஒப்பிடலாம்.

(உ) பத்தியில் கற்றவற்றை ஏட்டில் (வேதத்தில்) குறிக்கவும்.

(ஊ) ஒவ்வொரு வசனத்தினாலும் கருப்பொருள் பெறும் விளக்கத்தைத் தியானிக்கவும்.

(எ) தற்பரிசோதனை செய்து, ஜெபம், துதி செய்யுங்கள்.

## எடுத்துக்காட்டு – 1

1 தெசலோனிக்கேயர் 4ஆம் அதிகாரத்தை வாசியுங்கள். இதிலிருந்து ஒரு பத்தியைத் தெரிந்தெடுப்போம். வ.13இன் கருத்து வ.12இன் கருத்து அல்ல என்பதாலும், வ.13இலிருந்து வ.18வரை ஒரே கருத்து கூறப்பட்டுள்ளதாலும், அதற்கடுத்த வசனமான 5:1இல் சற்று வேறுபட்ட கருத்து வருவதாலும் 1 தெச.4:13–18ஐ ஒரு பத்தி என்று காண்கிறோம். இந்தப் பத்தியை நன்கு வாசித்து, குறிப்புக்கள் எழுதுங்கள்.

### 1 தெசலோனிக்கேயர் 4:13–18

*13. அன்றியும், சகோதரரே, நித்திரையடைந்தவர்களினிமித்தம் நீங்கள் நம்பிக்கையற்றவர்களான மற்றவர்களைப்போலத் துக்கித்து, அறிவில்லாதிருக்க எனக்கு மனதில்லை.*

*14 இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக் கிறோமே; அப்படியே இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்களையும் தேவன் அவரோடேகூடக் கொண்டுவருவார்.*

*15 கர்த்தருடைய வார்த்தையை முன்னிட்டு நாங்கள் உங்களுக்குச் சொல்லுகிறதாவது: கர்த்தருடைய வருகைமட்டும் உயிரோடிருக்கும் நாம் நித்திரையடைந்தவர்களுக்கு முந்திக்கொள்வதில்லை.*

*16 ஏனெனில், கர்த்தர் தாமே ஆரவாரத்தோடும், பிரதான தூதனுடைய சத்தத்தோடும், தேவ எக்காளத்தோடும் வானத்திலிருந்து இறங்கி வருவார்; அப்பொழுது கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள்.*

*17 பின்பு, உயிரோடிருக்கும் நாமும் கர்த்தருக்கு எதிர்கொண்டுபோக, மேகங்கள்மேல் அவர்களோடேகூட ஆகாயத்தில் எடுத்துக்கொள்ளப் பட்டு, இவ்விதமாய் எப்பொழுதும் கர்த்தருடனேகூட இருப்போம்.*

*18 ஆகையால், இந்த வார்த்தைகளினாலே நீங்கள் ஒருவரையொருவர் தேற்றுங்கள்.*

**இந்தப் பகுதியின் கருப்பொருள் என்ன? . . . . . . . . . . . . . .**

**இப்பகுதிக்கு பொருத்தமான தலைப்பு தருக. . . . . . . . . . . . . .**

(கர்த்தரின் இரகசிய வருகை, பரிசுத்தவான்கள் உயிர்த்தெழுதலும் எடுத்துக்கொள்ளப்படுதலும், மரணமடைந்தோரின் இன்றைய நிலையும்

இறுதிநிலையும், மரணமடைந்த விசுவாசிகளின் குடும்பங்களைத் தேற்றுவது எப்படி, போன்ற தலைப்பு ஏதேனும் தரலாம்)

முக்கியமான சொற்களையும் சொற்றொடர்களையும் குறித்துக் கொள்ளலாம்.

**வசனம் 13:** நமது குடும்பத்தில் ஒருவர் நித்திரையடைந்தால் துக்கப்படலாமா? நம்மால் துக்கப்பட்டால் இருக்க முடியாது. லாசருவின் கல்லறையருகில் இயேசு கண்ணீர்விட்டார் (யோவா.11:36) என்பதால் நாம் துக்கப்படுவது தவறல்ல. ஆனால், நம்பிக்கையற்ற மற்றவர்கள் துக்கப்படும் அளவிற்கு நாம் துக்கமடையவேண்டியதில்லை. ஏனெனில் நமக்கு நம்பிக்கை உண்டு. நமது நம்பிக்கையை இப்பத்தி விளக்குகிறது. எனவே இந்த வசனம் இந்தப்பகுதிக்கு நல்ல முகவுரையாக அமைகிறது. நம்மைவிட்டுப் பிரிந்தவர்களை மீண்டும் சந்திப்போம் என்ற நம்பிக்கை நமக்கு உண்டு. எனவே, 'மீண்டும் சந்திப்போம்' என்ற நம்பிக்கையில்லாதவர்களைப்போல நாம் துக்கமடைய அவசியமில்லை.

இந்தப் பத்தி சகோதரருக்கு எழுதப்பட்டுள்ளது. அதாவது கிறிஸ்துவுக்குள் இருக்கும் சகோதர, சகோதரிகளுக்கு மட்டுமே இது பொருத்தமானது. நீர் கிறிஸ்துவின் குடும்பத்தில் சகோதரரா(சகோதரியா)க இருக்கிறீரா?

நம்பிக்கையற்றவர்கள் யார்? கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளாதவர்களே நம்பிக்கையற்றவர்கள். எனவே, கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் நம்பிக்கையுள்ளவர்கள்.

**தற்பரிசோதனை:** நம்பிக்கையற்றவர்களுக்காக நீர் செய்ததென்ன? அவர்களுக்காக ஜெபிக்கிறீரா? அவர்களுக்கு கிறிஸ்துவின் நற்செய்தியை அறிவிக்கிறீரா? அறிவிப்பதற்கு நற்செய்திப் பணியாளர்களை (மிஷனரிகளை) அனுப்புகிறீரா?

நான் இந்த நம்பிக்கையைக் குறித்த சரியான அறிவுடையவனாயிருக்கிறேனா? இந்த நம்பிக்கை நிறைவேறுவதற்காக ஆவலுடன் காத்திருக்கிறேனா?

**வசனம் 14:** இயேசுவானவர் மரித்து பின்பு எழுந்திருந்தாரென்று விசுவாசிக்காத எவரும் உண்மையான கிறிஸ்தவரல்ல (ரோம.10:9–10). இயேசுவின் சிலுவை மரணமானது விசுவாசிகளின் பாவமன்னிப்பையும், அவரது உயிர்த்தெழுதலானது மரித்தோரின் உயிர்த்தெழுதலையும் உறுதிப்படுத்துகின்றன. இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் அவருடன் வருவார்கள். மேலும், இயேசு இப்பொழுது பரலோகத்தில் பிதாவாகிய

தேவனின் பிரசன்னத்தில் இருக்கிறார் என்று வேதம் கூறுகிறது (மாற்.16:19; எபே.1:21–22). இவ்விரண்டையும் சேர்த்து கவனித்தால், இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் (உள்ளான மனிதர்கள்) இப்பொழுது அவருடன் பிதாவின் பிரசன்னத்தில் இருக்கின்றனர் என்று காணலாம். பிலி.1:20–23; வெளி.6:9 ஆகிய வேதப்பகுதிகளும் இதற்குச் சான்றளிக்கின்றன.

**வசனம் 15**

இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ள '**நாங்கள்**' யார்? (1 தெச.1:1) 1................ 2........................... 3............................

'........ என்று கர்த்தர் உரைக்கிறார்', 'சேனைகளின் கர்த்தர் கூறுகிறதாவது........', 'கர்த்தருடைய வார்த்தை எனக்கு உண்டாகி.....' என்றவாறு தீர்க்கதரிசிகள் கூறுவது வழக்கம். கர்த்தருடைய நேரடியான செய்திகளைக் கூறும்போது இவ்வாறு கூறுவார்கள். இந்த வசனமும் அதே அதிகாரத்துடன் கூறப்படுகிறது. இப்பகுதியில் கூறப்பட்டுள்ளவை மனிதனின் கருத்துக்கள் அல்ல, கர்த்தரின் முன்னறிவிப்புகள் என்பதை இந்த வசனம் வலியுறுத்துகிறது.

இந்த வசனத்தில் கூறப்பட்டுள்ள '**நாம்**' என்பது யாரைக் குறிக்கிறது? உயிரோடிருப்பவர்களில் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்களை மட்டும் இது குறிப்பிடுகிறது.

**முந்திக்கொள்வதில்லை:** இரு குழுவினரை நாம் காண்கிறோம்

1) கிறிஸ்துவுக்குள் ஏற்கெனவே மரித்து அவருடன் வருகிறவர்கள்

2) உயிரோடிருக்கும் உலக மக்களில் கிறிஸ்துவுக்குள் இருப்பவர்கள் (நாம்)

நாம் முந்திக்கொள்வதில்லையென்றால், அவர்கள் முந்திக்கொள்வார்களா? இதற்கான பதிலைப் பின்வரும் விளக்கங்களில் காண்போம்.

**வசனம் 16**

கிறிஸ்து வரும்பொழுது ஆரவாரம், பிரதான தூதனுடைய சத்தம், தேவ எக்காளம் ஆகிய மாபெரும் முழக்கங்கள் இருக்கும். கிறிஸ்து வானத்திலிருந்து இறங்கி வருவார்.

இயேசுவுக்குள் நித்திரையடைந்தவர்கள் அவரோடுகூட வானத்திலிருந்து இறங்கி வருவார்கள் என்று வச14இலும் எழுந்திருப்பார்கள் என்று வச.16இலும் கூறப்பட்டுள்ளது. இதில் முரண்பாடு போன்று இருப்பதின் (இறங்குதல், எழுந்திருத்தல்) விளக்கத்தைக் காண்போம்.

கர்த்தருக்குள் நித்திரையடைந்தவர்களின் சரீரங்கள் பூமியிலுள்ள கல்லறைகளில் வைக்கப்பட்டுள்ளன. அவற்றின் பல பகுதிகள் மாற்றமடைந்து மண்ணுடன் கலந்துவிட்டன. ஆனால், ஆத்துமா, ஆவி இணைந்த உள்ளான மனிதர்கள் கிறிஸ்துவுடன் இருக்கின்றனர் (வச.14 விளக்கத்தில் இவர்களைப் பற்றி மேலே வாசித்தோம்). இந்த உள்ளான மனிதர்கள் இயேசுவுடன் வந்து அவரவர் தங்கள் தங்கள் மறுரூபமாக்கப்பட்ட (ஆவிக்குரிய சரீரமாக்கப்பட்ட) சரீரங்களுடன் இணைந்து உயிருடன் எழும்புவார்கள் (1 இரா.17:21–22). அழிவுள்ளதாய் விதைக்கப்பட்ட (புதைக்கப்பட்ட) சரீரம் அழிவில்லாததாய் எழுந்திருக்கும். ஜென்ம சரீரமாகப் புதைக்கப்பட்ட சரீரம் ஆவிக்குரிய சரீரமாக எழுந்திருக்கும் (1 கொரி.15:42–44; யோபு 19:25–27). இவ்விதமான சரீர உயிர்த்தெழுதலை நாம் விசுவாசிக்கிறோம்.

கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் முதலாவது எழுந்திருப்பார்கள் என்று வாசிக்கிறோம். கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருப்பதையும் (பிழைப்பதையும்) உயிருடனிருப்பவர்கள் மரணமடையாமல் எடுத்துக் கொள்ளப்படுவதையும் "நானே உயிர்த்தெழுதலும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னை விசுவாசிக்கிறவன் மரித்தாலும் பிழைப்பான்; உயிரோடிருந்து என்னை விசுவாசிக்கிறவன் என்றென்றைக்கும் மரியாமலுமிருப்பான்" என்று கிறிஸ்து கூறியதின் நிறைவேறுதல் என்று காண்கிறோம் (யோவா.11:25–26).

**வசனம் 17**

**பின்பு:** எதற்குப் பின்பு? கிறிஸ்துவுக்குள் மரித்தவர்கள் எழுந்திருந்த பின்பு. எவ்வளவு நேரத்தில் என்ன நடக்கும்? கடைசி எக்காளம் தொனிக்கும்போது 'ஒரு நிமிடத்திலே, ஒரு இமைப்பொழுதிலே நாமும் மறுரூபமாக்கப்படுவோம்' (1 கொரி.15:51, 52). அழிவுள்ளதாகிய நமது சரீரம் அழியாமையையும் சாவுக்கேதுவான நமது சரீரம் சாவாமையையும் தரித்துக்கொண்டதாக மறுரூபமாக்கப்படும் (1 கொரி.15:51–54). மறுரூபமாக்கப்படுபவர்களுக்கு சாவு இல்லை.

கிறிஸ்துவுக்குள் நித்திரையடைந்தவர்கள் முதலாவது எழுந்திருந்தாலும், அவர்கள் முந்திக்கொண்டு செல்வதில்லை. நாமும் அவர்களோடு சேர்ந்து மேகங்கள்மீது எடுத்துக்கொள்ளப்படுவோம். பின்பு எப்பொழுதும் முடிவின்றி கர்த்தருடனேகூட இருப்போம்.

**எதிர்கொண்டுபோக:** தமிழர்களின் வழக்கத்தின்படி எதிர்கொண்டு போவது என்றால் வரவேற்பதற்காகச் சென்று அழைத்துவருவதாகும். ஆனால், யூதரின் (வேதத்தில் கூறப்பட்டுள்ள) வழக்கத்தின்படி எதிர்

கொண்டுபோதல் என்றால் வருகின்றவருக்கு எதிராகச் சென்று, சந்தித்து, அவருடன் அவருடைய இல்லத்திற்குச் செல்வதாகும். மத்.25:1–10 இக்கருத்தை நிறுவுகிறது. எனவே, 'எதிர்கொண்டுபோவது' என்றால் யோவா.14:2–3இல் இயேசு கூறியபடி அவர் வந்து தம்முடையவர்கள் யாவரையும் தமது பிதாவின் வீட்டிலுள்ள தங்குமிடங்களுக்கு (வாசஸ்தலங் களுக்கு) அழைத்துச் செல்வதாகும்.

வச.14–17வரை கூறப்பட்ட இந்நிகழ்ச்சியை இரகசிய வருகை என்று அழைக்கிறோம் **(secret coming, rapture)**. இது இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட்ட யாவரும் பரலோகத்தில் இருக்கும் பிதாவின் வீட்டிலுள்ள உறைவிடங்களுக்கு (வாசஸ்தலங்களுக்கு), கிறிஸ்துவுடன் செல்வதாகும் (யோவா.14:2–3). இரண்டாம் வருகையின்போது இயேசுவும் தேவதூதர்களும் பரிசுத்தவான்களும் வந்து அந்திக்கிறிஸ்துவின் சேனைக்கு எதிராகப் போரிட்டு, அதில் வெற்றிபெற்று பூமியிலே அரசாளுவோம் (சக.14:3–5, 9; வெளி.5:10; 19:11–21; யூதா 15). பாவத்தில் மரணமடைந்தவர்கள் இரகசிய வருகையில் உயிர்த்தெழும்பமாட்டார்கள். கிறிஸ்துவின் இரண்டாம் வருகைக்குப் பின்னர் கிறிஸ்துவும் பரிசுத்தவான்களும் 1000 ஆண்டுகள் அரசாண்ட பின்னர் அவர்கள் உயிரோடு எழுப்பப்படுவார்கள் (வெளி.20:4–5).

இரகசிய வருகையில் பங்கேற்காதவர்கள் வசனம் 16இல் கூறப்பட்டுள்ள முழக்கங்களைக் கேட்கமாட்டார்கள் என்றும் கர்த்தருடைய பிள்ளைகள் எடுத்துக்கொள்ளப்படுவதைக் காணமாட்டார்கள் என்றும் லூக்.17:34–36இலிருந்து அறிகிறோம். எனவே இந்நிகழ்ச்சியை இரகசிய வருகை என்று அழைக்கிறோம்.

**வசனம் 18**

**ஆகையால்:** இயேசுவுக்குள் மரித்தவர்கள் இப்பொழுது அவருடன் இருப்பதால், மீண்டும் வந்து உயிர்த்தெழும்பப்போவதால், நாமும் அவர்களைச் சந்திக்கப்போவதால், நாமும் அவர்களோடு சேர்ந்து பரலோகம் செல்லப்போவதால், அதன்பின்பு எப்பொழுதும் கர்த்தருடனே இருக்கப்போவதால், இந்த வார்த்தைகளால் – மேற்கூறப்பட்டவற்றால் – தேற்றுங்கள். **இது ஒரு கட்டளை.**

**இரண்டாம் வருகையைக் குறித்த சில குறிப்புகள்**

தானியேலின் நூலையும் வெளிப்படுத்தின விசேஷம் நூலையும் ஆராய்ந் தால் இரகசிய வருகைக்குப்பின் ஏறத்தாழ ஏழு ஆண்டுகளில் கிறிஸ்துவின் இரண்டாம் வருகை இருக்கும் என்று காணலாம். இந்த ஏழு ஆண்டுகள்

உபத்திரவகாலம் என்றும் அதின் பிற்பாதியாகிய மூன்றரை ஆண்டுகள் மகா உபத்திரவ காலமென்றும் அழைக்கப்படும். அந்திக்கிறிஸ்து இந்த ஏழு ஆண்டுகளும் ஆட்சிசெய்வான். உபத்திரவ காலத்திற்குத் தப்பித்துக் கொள்வதற்கு வழி என்ன? உபத்திரவகாலம் தொடங்குவதற்கு முன்பே கர்த்தரின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதே வழி. இதற்காக ஜெபிக்கும்படி நம்மை இயேசு கேட்டுக்கொண்டுள்ளார் (லூக்.21:35–36). உலகத்தின் எல்லாப் பகுதிகளிலும் இப்பொழுது நற்செய்தி கூறப்பட்டு வருகிறது. நற்செய்தி அறிவிக்கப்படாத இடங்களைத் தேடிப்பிடித்து அங்கு அறிவிப்பதற்கான முயற்சி நடைபெற்றுவருகிறது. சீக்கிரத்தில் அது நிறைவு பெறப்போகிறது. அது நிறைவுறும்போது முடிவு வரும் என்று கர்த்தர் கூறியுள்ளார் (மத்.24:14). இதை வாசிக்கும் அன்பரே, நீரும் ஆயத்தப்படுவீராக.

**எப்படிப்பட்டவர்கள் இரகசியவருகையில் எடுத்துக்கொள்ளப்படுவார்கள்?**

1. மறுபடியும் பிறந்த அனுபவமுள்ளவர்களாயிருக்கவேண்டும். ஏனெனில், மறுபடியும் பிறக்காதவன் தேவனுடைய அரசைக் காணவேமாட்டான் (யோவா.3:3; 2 கொரி.5:17).
2. விசுவாசமுள்ளவராகி திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றிருக்க வேண்டும் (மாற்.16:16; யோவா.3:5; 1 பேது.3:21).
3. பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றிருக்கவேண்டும். ஏனெனில் தண்ணீரினாலும் ஆவியினாலும் பிறக்காதவன் தேவனுடைய அரசில் பிரவேசிக்கமுடியாது (யோவா.3:5; ரோம.8:9; எபே.4:30).
4. கனியுள்ள வாழ்க்கை வாழவேண்டும் (மத்.3:10; யோவா.15:2).
5. ஆவியானவரின் உதவியால் பரிசுத்தமாக வாழவேண்டும் (2 பேது.3:14; மத்.7:21).

நாம் இரகசிய வருகையில் கைவிடப்படாமல் (மத்.24:34–42) எடுத்துக்கொள்ளப்படுவது மிகவும் முக்கியமானது. எனவே இதற்காக ஊக்கமாக ஜெபிப்போமாக (லூக்.21:36)

**குறிப்பு: வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி?** என்ற நூலை வாங்கி, வாசித்து, ஆயத்தமாகலாம்.

### எடுத்துக்காட்டு – 2

லூக்.19:1–10ஐத் தியானித்து, குறிப்புக்கள் எழுதுங்கள். அதன் பின்னர் கீழே வரும் கருத்துக்களை வாசித்து உங்கள் குறிப்புக்களோடு ஒத்துப்பாருங்கள்.

## லூக்கா 19:1–10

*1 அவர் எரிகோவில் பிரவேசித்து, அதின் வழியாக நடந்துபோகையில்,*
*2 ஆயக்காரருக்குத் தலைவனும் ஐசுவரியவானுமாயிருந்த சகேயு என்னப்பட்ட ஒரு மனுஷன்,*
*3 இயேசு எப்படிப்பட்டவரோ என்று அவரைப் பார்க்க வகைதேடினான். அவன் குள்ளனானபடியால், ஜனக்கூட்டத்தில் அவரைக் காணக்கூடாமல்,*
*4 அவர் போகும் வழியில் முன்னாக ஓடி, அவரைப் பார்க்கும்படி ஒரு காட்டத்திமரத்தில் ஏறினான்.*
*5 இயேசு அந்த இடத்தில் வந்தபோது, அண்ணாந்து பார்த்து, அவனைக் கண்டு: சகேயுவே, நீ சீக்கிரமாய் இறங்கிவா, இன்றைக்கு நான் உன் வீட்டிலே தங்கவேண்டும் என்றார்.*
*6 அவன் சீக்கிரமாய் இறங்கி, சந்தோஷத்தோடே அவரை அழைத்துக் கொண்டுபோனான்.*
*7 அதைக் கண்ட யாவரும்: இவர் பாவியான மனுஷனிடத்தில் தங்கும்படி போனார் என்று முறுமுறுத்தார்கள்.*
*8 சகேயு நின்று, கர்த்தரை நோக்கி: ஆண்டவரே, என் ஆஸ்திகளில் பாதியை ஏழைகளுக்குக் கொடுக்கிறேன், நான் ஒருவனிடத்தில் எதையாகிலும் அநியாயமாய் வாங்கினதுண்டானால், நாலத்தனையாகத் திரும்பச் செலுத்துகிறேன் என்றான்.*
*9 இயேசு அவனை நோக்கி: இன்றைக்கு இந்த வீட்டுக்கு இரட்சிப்பு வந்தது; இவனும் ஆபிரகாமுக்குக் குமாரனாயிருக்கிறானே.*
*10 இழந்துபோனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார் என்றார்.*

**இப்பகுதியின் தலைப்பு**

'இயேசு எப்படிப்பட்டவர்?' 'இழந்து போனதைத் தேடுகிறவர் இயேசு', 'சகேயு', 'மனந்திரும்புதல்' போன்ற ஏதேனும் ஒரு தலைப்பு தரலாம்.

**முக்கிய வசனம்:**

வ.10 'இழந்து போனதைத் தேடவும் இரட்சிக்கவுமே மனுஷகுமாரன் வந்திருக்கிறார்!'

இந்தப் பகுதியை, சகேயுவின் குணநலன்களைத் தியானிப்பதாகவும், பின்னர் கர்த்தரின் பண்புகளைத் தியானிப்பதாகவும் பின்னர் மற்ற சில காரியங்களைத் தியானிப்பதாகவும் தந்திருக்கிறோம்.

## சகேயுவின் நிலை (Position)

**1. ஒரு தலைவர் (வ.2).** அதாவது ஆயக்காரருக்குத் தலைவராக இருந்தார். தலைவர் என்றிருந்ததால் இவருடைய சொற்களுக்குக் கீழ்ப்படியும் பலர் இவருக்குக் கீழ் இருந்ததை உணரலாம். இவர் ஆயக்காரர் மத்தியிலும், அதன் மூலம் மக்கள் மத்தியிலும் நன்கு அறியப்பட்டிருந்தார் என்று கூறலாம்.

**2. ஒரு பணக்காரர் (வ.2).** பணக்காரராக இருந்ததினால் செல்வாக்கு உள்ளவராக இருந்திருக்கக்கூடும். மேலும் வேலைக்காரர்கள் இருந்திருக்க வாய்ப்பு இருக்கிறது.

**3. பிறப்பால் யூதர்.** இவரை ஆபிரகாமின் குமாரன் என்று கர்த்தர் சொன்னார் (வ.9).

**4. ரோம அரசின் ஊழியர்.** மக்களிடம் வரி (ஆயம்) வசூல் செய்து அதை ரோம அரசுக்குச் செலுத்துவது இவரது வேலை. யூத மக்கள் ரோம அரசை வெறுத்தபடியால் அதற்கு வரி கொடுப்பதை உள்ளத்தில் வெறுத்தனர். எனவே, வெளியரங்கமாக இவருக்குப் பயந்திருந்தபோதிலும், இவரை மதித்த போதிலும், உள்ளத்தில் வெறுத்துவந்தனர்.

**5. வரி வசூல் செய்பவர்** (ஆயக்காரர்). வரி வசூல் செய்பவர்கள் சரியான வரிக்கு அதிகமாக வாங்கி, மக்களைக் கொள்ளையடிப்பவர்கள் என்று அக்காலத்தில் பெயர் பெற்றிருந்தனர். அநேக ஆயக்காரர் இவ்விதம் செய்து வந்தனர். அவர்களில் யாரேனும் உண்மையாக இருந்தாலும் அவர்களை மக்கள் நம்பாத அளவிற்கு ஊழல் நடைபெற்று வந்தது. எனவே 'ஆயக்காரன்' என்றாலே மிகப்பெரிய பாவி என்று அக்காலத்து யூதர்கள் கருதினார்கள் (லூக்.3:12, 13; 18:11 காண்க).

**6. பாவியான மனிதன் என்று கருதப்பட்டவர் (வ.7).** மக்கள் இவரைப் பாவியான மனிதன் என்று கருதினார்கள். யாவரும் முறுமுறுக்கும் அளவிற்கு இந்தப் பட்டத்தைப் பெற்றவர் இவர். அதிகமாகப் பணம் வசூலித்தார் என்பதற்கு வேதத்தில் ஆதாரமில்லை. ஆனாலும் இவரை 'இழந்து போனவன்' என்று கர்த்தர் குறிப்பிட்டார் (வ.10).

**7. ஒரு குள்ளர்** (வ.3). இவர் ஒரு குள்ளராயிருந்தபடியால் இவரை மக்கள் ஏளனமாக நடத்தியிருப்பார்கள். குழந்தைகளும் ஏளனம் செய்திருப்பார்கள். இவரும் தாழ்ச்சி உணர்வுடையவராக இருந்திருக்கக்கூடும்.

## சகேயுவின் குணங்கள் (Character)

1. இயேசுவைக் குறித்த காரியங்களைக் கேள்விப்பட்டு அவர் செய்த அற்புதங்களைக் கவனித்து கேட்டிருப்பார் என்று கருதலாம். எனவேதான்

அவரைப்பார்க்க விரும்பினார். தான் கேள்விப்பட்டவற்றை நன்கு தியானித்திருப்பார். தான் கேள்விப்படுகிறவைகளைக் குறித்து அசட்டையாக இருக்காமல் எதையும் **தியானித்து நிதானித்துப் பார்க்கும் குணம்** இவருக்கு இருந்தது. சகோதரனே, நீர் இந்தக்குணம் உடையவர்தானா? உம் வேதத்தியானம் எப்படி இருக்கிறது? (அப்.17:11)

2. நற்காரியங்களையும், தேவனுடைய அற்புத செயல்களை இயேசு செய்வதையும் கேள்விப்பட்டு அவரைப் பார்க்க விரும்பியதிலிருந்து இவருடைய ஆத்துமாவில் **நற்காரியங்களுக்கான தாகம்** இருப்பதைக் காண்கிறோம். நமக்கு இந்தத் தாகம் உண்டா? நற்கிரியைகளைக் காண, செய்ய, வாஞ்சை உண்டா?

3. தான் கேள்விப்பட்டவற்றைச் **சரிபார்க்கும் குணமுடையவர்.** இயேசு எப்படிப்பட்டவரோ என்று பார்க்க விரும்பினார். அது மட்டுமல்ல, இப்படிப்பட்டவரைக் காண **வாஞ்சை** கொண்டார். நம் நிலைமை என்ன?

4. தான் தீர்மானித்த காரியத்தைச் செய்வதற்காகத் **தன்னைத் தாழ்த்தத் தயங்கவில்லை.** தன் கீழிருந்த யாரையும் அனுப்பி அவரைக் குறித்து அறிய விரும்பாமல், தானே நேரில் வந்தார். மேலும், தான் ஒரு தலைவன், பணக்காரன் என்பவற்றைப் பொருட்படுத்தாது கூட்டத்தில் நுழைய முயற்சிப்பதையும், ஓடுவதையும், மரத்தில் ஏறிக்கிடப்பதையும் காணும்போது அவரது தாழ்மையை நாம் அறிகிறோம். சாதாரணமாகத் தலைவர்கள், பணக்காரர்கள், இக்காரியங்களைச் செய்யமாட்டார்கள் அல்லவா? கிறிஸ்துவுக்காக நம்மைத் தாழ்த்த நாம் ஆயத்தமா?

5. மற்றவர்கள் ஏளனம் செய்வார்கள் என்று கருதாமல் ஓடினார், மரத்தில் ஏறியிருந்தார். யார் ஏளனம் செய்தாலும் பரவாயில்லை; நான் இயேசுவைக் காணவேண்டும் என்று தீர்மானித்தார். அதாவது இயேசுவைக் காண்பதற்காக **மற்றவர்களின் ஏளனத்தை அற்பமாக எண்ணினார்.** இயேசுவுக்காக ஏளனம் செய்யப்பட நீர் ஆயத்தமா?

6. **விடாமுயற்சியுடையவர்.** கூட்டத்தில் இயேசுவைக் காண முயற்சித்தார் (காலை உந்தியிருப்பார், நுழைந்து பார்த்திருப்பார்). அவரால் இயேசுவைக் காண முடியவில்லை. தோல்விகளைக் கண்டு நல்ல முயற்சிகளைக் கைவிட்டுவிடாத **உறுதி படைத்தவர்** இவர். அதுமட்டுமல்ல புதிய வழி முறைகளைக் கையாள **மதிநுட்பமும் மனத்திண்மையும்** பெற்றவர். கூட்டத்தை விட்டு முன்னால் ஓடினார். கூட்டத்தைக் கடந்ததும் இயேசு

வரக்கூடிய வழியில் ஒரு மரத்தைத் தெரிந்தெடுத்து அதன்மேல் ஏறினார். மனிதர் கூட்டம் இயேசுவைப் பார்க்கத் தடைசெய்ததால் அதை விட்டு விலகித் தனியாக இருந்தேனும் அவரைப் பார்க்க வகை செய்தார்.

நாம் பல நேரங்களில் அற்பமான காரணங்களைக் கூறி, கர்த்தரைத் தேடுவதையும், ஊழியம் செய்வதையும் தள்ளிப்போடுகிறோம் அல்லவா? சகேயுவைப்போல விடாமுயற்சி உடையவர்களாக மாறுவோமாக. மனிதர் கூட்டம் தடை செய்தால், ஒரு கதவை அடைத்தால், வேறொரு வகையிலேனும் தொடர்ந்து இயேசுவைப் பின்பற்றுவோமாக. முடிவு பரியந்தம் நிலைநிற்கத் தீர்மானிப்போமாக (மத்.24:13).

7. கர்த்தருக்குத் **தீவிரமாய்க் கீழ்ப்படிந்தார்.** சீக்கிரமாய் இறங்கி வா என்று கர்த்தர் சொன்னவுடனே, சீக்கிரமாய் இறங்கினார் (வ.5,6). நாம் கர்த்தருக்கு உடனுக்குடன் கீழ்ப்படிகிறோமா?

**8. சந்தோஷத்தோடு இயேசுவை அழைத்துக்கொண்டு போனார்** (வ.6). வருத்தத்தோடே அல்ல, சந்தோஷத்தோடே இயேசுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றார். இயேசுவைத் தன் வீட்டிற்கு அழைத்துச் சென்றால் வரும் விளைவுகளைப் பற்றிப் பொருட்படுத்தவில்லை. அநேகர் இயேசுவை ஏற்றுக்கொண்டதினால் தாங்கள் துக்கமுகமாய்க் காணப்படவேண்டும் என்று எண்ணுகின்றனர். அவ்வாறு அல்ல. கர்த்தரை உள்ளத்தில் சந்தோஷமாக ஏற்றுக்கொள்வது நல்லது. இயேசு உள்ளத்தில் இருப்பதை நினைத்து நினைத்து மகிழ்ச்சி அடைவது நல்லது.

9. இயேசுவை ஆண்டவரே என்று அழைத்தார் (வ.8). அதாவது இயேசு ஒரு நல்ல போதகர், தலைவர், அற்புதங்களைச் செய்பவர் என்ற அளவில் அவரை ஏற்றுக்கொள்ளாமல் **ஆண்டவராக ஏற்றுக்கொண்டார்.** நம் வாழ்க்கையின் எல்லாப் பகுதிகளிலும் நாம் இயேசுவை ஆண்டவராக (ஆட்சி புரிபவராக) ஏற்றுக்கொண்டிருக்கிறோமா என்று நம்மை நாமே சோதித்துப் பார்ப்போம்.

10. சகேயுவின் முக்கியமான பிரச்சனை பண ஆசை என்று தோன்றுகிறது. இயேசுவைக் கண்டதும் தன் சொத்துக்களில் பாதியை இழக்க (ஏழைகளுக்குக் கொடுக்க) முன்வந்தார் (வ.8). **பண ஆசையை விட்டு விலகினார்** (1 தீமோ.6:10). நாம் நம்முடைய சொத்துக்களை ஆண்டவருக்காக இழக்கத் தயாராக இருக்கிறோமா?

11. தவறுகள் இருந்தால் சரிசெய்து திரும்பச் செலுத்தத் தீர்மானித்தார் (வ.8). 'எதையாகிலும் அநியாயமாக வாங்கினதுண்டானால். . . .' என்று கூறியதிலிருந்து அவ்வாறு வாங்கியதில்லை என்று தோன்றுகிறது. ஏனெனில் வாங்கியிருந்தால் "நான் அநியாயமாக வாங்கியதை" என்று

கூறியிருப்பார். மேலும், "அநியாயமாக வாங்கியதுண்டானால், நாலு மடங்கு திரும்பத் தருகிறேன்" என்று கூறியதும் அக்கூட்டத்தில் உள்ளவர்கள் அவ்வாறு தருமாறு கேட்டு, குழப்பம் விளைவித்திருக்கக்கூடும். நன்கு யோசித்துப் பார்த்ததில் இவர் அநியாயமாகப் பணம் வாங்கவில்லை என்றே தோன்றுகிறது (பல வேதவல்லுநர்கள் இதற்கு மாறுபட்ட கருத்தைத் தெரிவித்திருக்கின்றனர்). ஆனால், தான் அநியாயமாக வாங்கினதுண்டானால் நாலு மடங்கு திரும்பச் செலுத்தத் தீர்மானித்தார். **ஒப்புரவாகுதலை ஏற்றுக் கொண்டார்.** நம்முடைய வாழ்க்கையை நோக்கிப் பார்ப்போம். யாருக்கேனும் அநியாயம் செய்ததுண்டானால் ஒப்புரவாக இன்றே தீர்மானித்து அதைச் செயல்படுத்துவோம்.

12. இயேசு தன் வீட்டிற்கு வருவதற்கு முன்பே சகேயு **தன் குறைகளை யாவர் முன்பும் ஒத்துக்கொண்டார்.** தன் பண ஆசையையும் அதைவிட்டு நீங்கியதையும் உடனடியாகத் தெரிவித்தார் (நீதி.28:13). நம்முடைய பாவங்களை அறிக்கையிட்டு விட்டிருக்கிறோமோ?

## இயேசு எப்படிப்பட்டவர்?

**1. ஆண்டவர்:** இயேசு எப்படிப்பட்டவரோ என்று தேடினார் சகேயு (லூக்.19:3). கண்டுகொண்டது என்ன? அவர் ஆண்டவர் என்று கண்டுகொண்டார். எனவேதான் அவரை 'ஆண்டவரே' என்று சகேயு அழைத்தார் (வ.8). திறந்த மனதுடன் 'இயேசு எப்படிப்பட்டவர்?" என்று காண விரும்பி ஆவலாய்த் தேடும் யாவரும் 'அவர் ஆண்டவர்' என்பதைக் கண்டுகொள்வது நிச்சயம். தேடுகிறவன் கண்டடைகிறான் என்று கர்த்தரே கூறியிருக்கின்றார் அல்லவா? (லூக்.11:9)

**2. இழந்து போனதைத் தேடுகிறவர்:** திரள் கூட்டத்தின் மத்தியில் சென்று கொண்டிருந்தபோதிலும் தம்மை வாஞ்சையாய்த் தேடுகிற இழந்துபோன மனிதனாகிய சகேயுவைத் தேடி, மரத்தில் கண்டு, சகேயுவின் வீட்டில் தங்குவதற்காக நின்று பேசினார் கர்த்தர்.

**3. மனிதனை நோக்கிப் பார்க்கிறவர்:** இயேசு அண்ணாந்து பார்த்தார் (வ.5). நம்மையும் நம் நிலைமைகளையும் பார்க்கிற கர்த்தர் இயேசு. தம்மை வாஞ்சிக்கிறவர்களை இன்றைக்கும் நோக்கிப் பார்க்கிறார். தம்மைக் காண்பதற்காகக் காத்திருக்கும் மக்களை அசட்டைபண்ணமாட்டார்; கடந்து போகமாட்டார். அவர்களைப் பார்த்து, அவர்கள் வாஞ்சைகளைத் தீர்ப்பார்.

**4. நம்மோடு பேசுகிறவர்:** இயேசு சகேயுவிடம் பேசினார். இன்றும் பல வழிகளில் (ஜெபத்திலும், வேதத்தியானத்திலும், தரிசனங்களாலும்....)

நம்முடன் பேசுகிறார். நேரிடையாகப் பேசுதலும் உள்ளத்தின் ஆழத்தில் பேசுதலும் உண்டு. இதுவரை இதை அனுபவித்திருக்கிறீரா? இல்லையேல் இதற்காக அவருடன் ஜெபத்தில் நெருங்கி வாழ்வீராக.

**5. நம்மைப் பற்றி அறிந்திருக்கிறவர்:** சாதாரணமாக முன்பின் தெரியாத ஒரு மனிதரை நாம் சந்தித்தால் அவருடைய பெயரைச் சொல்லிக் கூப்பிடுவது இயலாத காரியம். ஆனால் கர்த்தராகிய இயேசு சகலத்தையும் அறிந்தவராயிருக்கிறார் என்பதற்கு அவர் சகேயுவைப் பார்த்தமாத்திரத்திலேயே பெயர் சொல்லி அழைத்தது சான்றாகும். அது மட்டுமல்ல சகேயுவின் வீட்டில் தாமும் தம்மைச் சேர்ந்தவர்களும் தங்கும் அளவிற்கு இடமுண்டு என்பதையும், சகேயு ஆபிரகாமின் குமாரன் என்பதையும், இழந்து போனவர்களில் ஒருவர் என்பதையும் இயேசு அறிந்திருந்தார். அதாவது, சகேயுவின் வாழ்க்கையின் சகல பகுதிகளும் கர்த்தருக்குத் தெரிந்திருந்தன. அவ்வாறே, நம் ஒவ்வொருவரைப் பற்றியும் கர்த்தர் நன்கு அறிந்திருக்கிறார். சகலமும் அவருக்கு முன்பாக வெட்ட வெளிச்சமாயிருக்கின்றன. நம் வாழ்க்கையின் கோளாறுகள் அவருக்குத் தெரியும். எனவே நாம் மனந்திரும்புவது அவசியம். அவரிடம் ஒன்றையும் மறைக்க முடியாது. எனவே நமது பாவங்களை அவரிடமிருந்து மறைக்க முற்படுவது அறிவீனமாகும். இப்படி மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான் (நீதி.28:13). அறிக்கை செய்து விட்டுவிடுவோமாக. மேலும் நமது பிரச்சனைகளும் அவருக்குத் தெரியும். எனவே நாம் அவரிடம் வேண்டிக்கொள்ளும்போது நன்கு புரிந்துகொண்டு நமது தேவைகளைச் சந்திக்கிறார்.

**6. நம் வேண்டுதல்களைக் கேட்டுப் பதிலளிக்கிறவர்:** சகேயு பேசினவற்றைக் கேட்டு, பதிலளித்தார். இன்றும் நம் வேண்டுதல்களைக் கேட்டு, பதில் அளிக்கிறவர் இயேசு.

**7. நம்மை நேசிக்கிறவர்:** இயேசு தன் வீட்டிற்கு வந்து, தங்கி, தன்னைக் கௌரவிப்பார் என்று சகேயு எதிர்பார்த்திருக்கமாட்டார். ஆகையால் இயேசு அதைக் கூறியதும் சகேயு மகிழ்ச்சியோடே அவரை அழைத்துக்கொண்டு போனார். சகேயு எதிர்பார்த்ததைவிட, சகேயு அவரை நேசித்ததைவிட, இயேசு சகேயுவை அதிகம் நேசித்தார் என்பதை நாம் காண்கிறோம். சகேயு இயேசுவைக் காண்பதற்கு மட்டும்தான் விரும்பினார். இயேசுவோ சகேயுவோடு உறவாடி, தங்கியிருந்து, மகிழ்ச்சியடையச் செய்யவும் சகேயுவையும் அவரது வீட்டாரையும் இரட்சிக்கவும் விரும்பினார். இன்று இயேசு நம் உள்ளத்திலும், இல்லத்திலும் வந்து நம்மோடு உணவருந்த விரும்புகின்றார் (வெளி.3:20). அவரை அழைப்போமாக. எப்படி அவருக்கு

உணவு தரமுடியும்? கர்த்தருடைய பிள்ளைகளுக்கு உணவளிப்பது அவருக்கு அளிப்பது போன்றதே (மத்.25:35–40). கர்த்தருடைய பிள்ளைகளின் தேவைகளைச் சந்திக்கத் தீர்மானிப்பீராக.

**8. நம்மை இரட்சிக்கிறவர்:** சகேயு தன் வாழ்க்கை மாற்றத்தை அறிக்கையிடும்வரை கர்த்தர் சகேயுவுக்கு இரட்சிப்பை அறிவிக்கவில்லை. அறிக்கையிட்ட உடனே அதை அறிவித்தார். எனவே இரட்சிப்படைவதற்கு, பாவ அறிக்கையும் வாழ்க்கை மாறுதலும் அவசியம் என்பதையும் அவ்வாறு செய்தவுடன் கர்த்தர் இரட்சிப்பை அருளுகிறார் என்பதையும் நாம் அறிகிறோம்.

**9. கேட்பதற்கும் நினைப்பதற்கும் அதிகமாகத் தருகிறவர்:**

சகேயு விரும்பியது என்ன? ______________________________

சகேயுவிற்குக் கிடைத்தவை எவை? இயேசுவின் பார்வை, இயேசுவால் பெயர் சொல்லி அழைக்கப்படுதல், இயேசு தன் வீட்டிற்கு வருதல், மகிழ்ச்சி, தன் வாழ்க்கை மாறுவதற்கான சந்தர்ப்பம், வீட்டிற்கு இரட்சிப்பு. நாம் வேண்டிக் கொள்கிறதற்கும் நினைப்பதற்கும் அதிகமாக நமக்குள்ளே கிரியைசெய்கிற கர்த்தர் (எபே.3:20), நமக்காக ஆயத்தம் பண்ணப்பட்டிருக்கிறவைகளைக் குறித்து என்ன சொல்லியிருக்கிறார்? (1 கொரி.2:9) ______________

______________________________

**10. தன் சொற்களை நிரூபிக்கிறவர்:** சகேயுவின் நிகழ்ச்சிக்கு மாறான ஒரு நிகழ்ச்சியை லூக்.18:18–27இல் காணலாம். பணக்காரர்கள் தேவனுடைய அரசிற்குள் நுழைவது மிகவும் அரிது என்பதற்கு அந்நிகழ்ச்சி எடுத்துக் காட்டாக அமைந்தது. ஆனால் சகேயுவோ இதற்கு மாறாக 'தேவனாலே எல்லாம் கூடும். பணக்காரர்களையும் இரட்சிக்கக்கூடும்' (லூக்.18:24–27) என்பதற்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறார். கர்த்தராகிய இயேசு தாம் கூறிய சொற்களை (லூக்.18:24–27), சகேயுவை இரட்சித்ததின் மூலம் நிரூபிக்கிறார். கர்த்தர் வாக்குமாறாதவர்.

**பிற குறிப்புக்கள்:**

இயேசு உலகத்திற்கு வந்ததின் நோக்கம் என்ன?
லூக்.19:10 ______________________________

______________________________

**சகேயு ஒரு எடுத்துக்காட்டு:** லூக்.18:26, 27ல் கூறப்பட்டுள்ளபடி 'தேவனாலே எல்லாம் கூடும்' என்பதற்கு சகேயு எடுத்துக்காட்டாக அமைந்தார் என்று மேலே பார்த்தோம்.

"ஆயக்காரரும் வேசிகளும் உங்களுக்கு முன்னே தேவனுடைய இராஜ்யத்தில் பிரவேசிக்கிறார்கள்" என்று கர்த்தர் கூறியதற்கும் (மத்.21:31) சகேயு எடுத்துக்காட்டாக அமைகிறார். 'எந்தப் பாவியாயினும் தள்ளமாட்டேன் என்கிறார். துரோகம் செய்த போதிலும், நோக்கிப்பார் இரட்சிப்பார்'.

**பாவிகள் மனந்திரும்புதலுக்கு உலகத்தாரின் வெறுப்பு:**

ஒரு பாவி மனந்திரும்புவதினிமித்தம் பரலோகத்திலே மிகுந்த மகிழ்ச்சி உண்டாகும் என்பதை லூக்.15:10இல் காண்கிறோம்.

ஆனால் பாவிகள் தேவனிடத்தில் சேருவதை இவ்வுலகத்தின் மக்கள் முறு முறுப்போடும் சந்தேகத்தோடும் ஓரளவு வெறுப்போடும் சந்திப்பதை லூக்.19:7இல் காண்கிறோம். இன்றைக்கும் அநேகர் இவ்விதம் நடந்து கொள்கின்றனர். நாமோ, எந்தப் பாவி மனந்திரும்பினாலும் அதற்காக மகிழ்ச்சி அடையவேண்டும். குறிப்பாக, நமக்குத் தீமை செய்கிறவர்கள் மனந்திரும்புவதற்காக ஜெபித்து, அவ்விதம் அவர்கள் திரும்பும்போது அதற்காக மகிழ்ச்சி அடைந்து, அவர்களிடம் அன்பு காட்டவேண்டும். இந்தக் கிருபைக்காக ஜெபிப்போமாக (மத்.5:44–48).

**இரட்சிப்பின் படிகள்**

1. தேவனை, அவரது அன்பினை அறிதல்
2. உடனடியாகக் கீழ்ப்படிதல் – இருதயத்தைக் கர்த்தருக்கு அர்ப்பணித்தல்
3. பாவங்களை அறிக்கையிட்டு விட்டுவிடுதல், ஒப்புரவாகுதல்

**சில கேள்விகள்:**

1. இயேசு எப்படிப்பட்டவர்?
   (மேலே கூறப்படாத கருத்துக்களைக் கண்டுபிடித்து எழுதுக)
2. எந்தப் பாவியையும் தள்ளாத கர்த்தரிடம் நீர் வருவீரா?
3. இயேசுவின் நோக்கத்தை உலகிற்கு அறிவித்து உலகத்தாரை அவரிடம் சேர்க்க உம்மை அழைக்கிறார். அதைச் செய்வீரா?
4. உம் உறவினர்களுக்காக, நண்பர்களுக்காக, உம்மை விரோதிப்பவர் களுக்காக ஊக்கமாக ஜெபிப்பீராக.
5. உம் வேத ஆராய்ச்சி எப்படி இருக்கிறது?

**குறிப்பு:–** ஒவ்வொரு வசனத்தாலும் கருப்பொருள் எவ்விதம் விளக்கம் பெறுகிறது என்று ஆராய்க.

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]

[illegible]

1. [illegible]
2. [illegible]
3. [illegible]
4. [illegible]
5. [illegible]

[illegible]

# 5. வசனங்களைத் தியானிக்கும் முறை

நல்ல கருத்தினை விளக்கும் ஒரு வசனத்தைத் தியானிப்பது இம்முறை யாகும். சில வசனங்களில் சில ஆவிக்குரிய ஆழ்ந்த கருத்துக்கள் இருக்கும். அத்தகைய வசனத்தைத் தெரிந்தெடுக்கவேண்டும்.

(i) அவ்வசனத்தை மனப்பாடம் செய்து கொள்வது நல்லது
(ii) அதிலுள்ள கருத்துக்களைத் தியானிக்கலாம்
(iii) வசனத்திற்கு பொருத்தமான தலைப்பு கொடுக்கலாம்
(vi) வசனத்தின் ஒவ்வொரு பகுதியையும் பிரித்து அத்தியாயம் 2இல் உள்ள கேள்விகளைக் கேட்கலாம்
(v) வசனத்திற்கு ஒத்தவாக்கியங்களை அதற்கான அகராதியில் (Concordance) கண்டுபிடித்து அவற்றையும் சேர்த்து தியானிக்கலாம்
(vi) 'ஆனால், ஏனெனில், மேலும் . . .' போன்ற சொற்கள் அந்த வசனத்திலோ அதற்கு முந்திய, பிந்திய வசனங்களிலோ காணப் பட்டால் அந்த வசனங்களையும் சேர்த்து அவ்வசனங்களை இணைக்கும் கருத்துக்களைத் தியானிக்கலாம்
(vii) வசனத்திலுள்ள தேவனுடைய பெயர்களையும் பண்புகளையும் தியானிக்கலாம்
(viii) வசனத்தை அந்நாள் முழுவதும் அடிக்கடி நினைவுகூர்ந்து தியானிக்கலாம். வசனத்திலுள்ள வாக்குறுதிகள், எச்சரிப்புக்கள், தீர்க்கதரிசனங்களைத் தியானிக்கலாம்
(ix) அவ்வசனத்திலுள்ள எழுவாய்களையும் பயனிலைகளையும் எடுத்துக் கொண்டு அவற்றைத் தனித்தனியே தியானிக்கலாம். முக்கியமான வார்த்தை ஒவ்வொன்றையும் தியானிக்கவேண்டும்
(x) கற்றவற்றை ஏட்டில் (அல்லது வேதத்தில்) குறிக்கவும்
(xi) தற்பரிசோதனை செய்து, ஜெபம், துதி செலுத்தவும்.

### எடுத்துக்காட்டு 1 – யோவா.3:16

**மனப்பாட வசனம்**

*'தேவன், தம்முடைய ஒரேபேறான குமாரனை விசுவாசிக்கிறவன் எவனோ அவன் கெட்டுப்போகாமல் நித்தியஜீவனை அடையும்படிக்கு, அவரைத்*

*தந்தருளி, இவ்வளவாய் உலகத்தில் அன்புகூர்ந்தார்.'*

**தலைப்பு** 'தேவனின் மாபெரும் அன்பு' என்று இவ்வசனத்தை அழைக்கலாம். நீங்கள் வேறு பொருத்தமான தலைப்புக்களைக் கண்டுபிடித்து எழுதுங்கள்.

**இந்த வசனம் ஏன் மிகவும் சிறந்ததாகக் கருதப்படுகிறது?** இதின் ஒவ்வொரு சொல்லும் தியானிக்கத்தக்கது.

தேவன் – பேரண்டத்தின் **(Universe)** மிகப்பெரிய நபர், வணங்கப்படத் தக்கவர், பரிசுத்தர், சர்வவல்லமையுடையவர், எப்பொழுதும் இருப்பவர், எங்கும் இருப்பவர், மிகவும் நல்லவர்

தம்முடைய – தேவன் தம்மைப் பாதிக்கும் அளவிற்கு நமக்காகத் தந்தார்.

ஒரே பேறான – தம்மிடம் இருந்த ஒரே பேறான (ஒன்றே ஒன்று) குமாரனைத் தந்தார். இயேசு ஒருவரே தேவனுடைய ஒரேபேறான குமாரன் **(Only begotten Son).**

குமாரனை – பிதாவாகிய தேவனால் மிகவும் அதிகமாக நேசிக்கப்பட்ட ஒரே நபர் (மத்.3:17). குமாரனாயிருப்பதுதான் மிக உன்னத மான நிலையாகும்.

விசுவாசிக்கிறவன் – மிகவும் எளிய, ஆனால் முக்கியமான நிபந்தனை

எவனோ – யாவரையும் குறிக்கிறது (நீர் விசுவாசித்தால் உம்மையும் சேர்த்து குறிப்பிடுகிறது)

அவன் கெட்டுப்போகாமல் – கெட்டுப்போவது என்பது ஒரு மனிதனுக்கு நேரிடும் பரிதாபமான, பயங்கரமான மிகவும் மோசமான நிலை. இது நரகத்தில் தள்ளப்படுவதைக் குறிப்பிடுகிறது (வெளி.20:15; 21:8).

நித்திய ஜீவனை அடையும்படிக்கு – ஒரு மனிதன் அடையக்கூடியவற்றில் மிகவும் உன்னதமானது.

அவரைத் தந்தருளி – வரலாற்றின் மிகப்பெரிய தியாகமான ஈகை

இவ்வளவாய் – அளவிடமுடியாத எல்லையில்லா அன்பு

உலகத்தில் – எல்லா மனிதரையும் – எதற்கும் உதவாத, பாவமுள்ள, பெலனற்ற, நரகத்தை நோக்கிச் செல்லும் மக்கள் அனைவரையும் தேவன் நேசிக்கிறார்.

அன்புகூர்ந்தார் – யாவரும் போற்றும் மிகவும் சிறந்த செயல்

இந்த வசனத்தைத் தியானித்து இரட்சிப்பின் நிச்சயத்தைப் பெற்றுக் கொண்ட அநேக நபர்களில் இந்நூலில் ஆசிரியரும் ஒருவராவார். இவ்வசனத்தின் சொற்களை ஆராய்வோம்.

**தேவன் எத்தகையவர்?**

| | | |
|---|---|---|
| தேவன் பெரியவர் | – | அவரைப் போன்று பெரியவர் (Great) யாரும் இல்லை. |
| தேவன் பரிசுத்தர் | – | தேவன் ஒருவரே பரிசுத்தர், வேறு யாரும் இல்லை. |
| தேவன் சர்வ வல்லவர் | – | தேவன் ஒருவர் மட்டும் சர்வ வல்லவர். |
| தேவன் யாவற்றையும் படைத்தவர் | – | தேவனாலன்றி எதுவும் படைக்கப் படவில்லை. |
| தேவன் யாவற்றையும் அறிந்தவர் | – | தேவனின் ஞானமும் அறிவும் ஒப்பிடமுடியாது. |
| தேவன் எங்கும் இருப்பவர் | – | தேவனைத்தவிர வேறு யாரும் இவ்வாறு இருக்கமுடியாது. |
| தேவன் நித்தியர் | – | தேவன் ஒருவரே நீடூழி காலத்திலிருந்து என்றென்றும் இருக்கிறவர். |
| தேவன் நல்லவர் | – | தேவன் ஒருவரே நல்லவர். |

**பயிற்சி** மேலே கூறப்பட்டவற்றிற்கான வேத வசனங்களைக் கண்டுபிடித்து எழுதங்கள்.

**ஒரேபேறான குமாரன்:** தேவன் மனிதனைப் படைத்தார். எனவே, மனிதர் தங்களை தேவனுடைய பிள்ளைகள் என்று கூற முற்படலாம். தேவனால் படைக்கப்பட்டவர்களான தேவதூதரை 'தேவகுமாரர்' என்று வேதம் குறிப்பிடுகிறது (யோபு 38:7). ஆனால் தேவன் மற்ற படைப்புக்களைப் போன்று இயேசுவைப் படைக்கவில்லை. ஆதியிலே தேவனோடு தேவனாக இருந்த 'வார்த்தை', பரிசுத்த ஆவியானவரின் ஆற்றலால் கன்னிமரியாளிடம் உற்பவித்து மனிதனாகப் பிறந்தார் (யோவா.1:1–2, 14; லூக்.1:35). இவ்வாறு பிறந்த ஒரே நபரான இயேசு, தேவனுடைய ஒரேபேறான குமாரன் ஆவார் (லூக்.1:35). இயேசுவை ஏற்றுக்கொண்டு தேவனுடைய ஆவியினால் நடத்தப்படுகிறவர்கள் தேவனுடைய பிள்ளைகள் என்பதை யோவா.1:12–13; ரோம.8:14–15இல் காண்கிறோம். இவர்கள் சுவிகாரபுத்திரர் (தத்து எடுக்கப் பட்ட பிள்ளைகள்) என்பதை ரோம.8:14–15; எபே.1:6இல் காண்கிறோம். இயேசு சுவிகார புத்திரரல்ல (தத்து எடுக்கப்பட்டவரல்ல), ஒரேபேறான குமாரன் **(Only begotton Son)**.

**விசுவாசிக்கிறவன்:** இதன் பொருள் என்ன? புதிய ஏற்பாடு எழுதப்பட்ட மூலமொழியான கிரேக்கு மொழியில் இதற்கு 'முற்றிலும் நம்புகிறவன்', 'பற்றிப் பிடித்துக்கொள்கிறவன்', 'தொடர்ந்து உறுதியாக சார்ந்து கொள்கிறவன்' என்று பொருள். இவற்றின் கருத்துக்களைத் தியானியுங்கள். நீர் இவ்வாறு இருக்கிறீரா?

**எவனோ:** யாராயிருந்தாலும் – இச்சொல் என்னையும் உம்மையும் உள்ளடக்கியுள்ளது.

**அவன் கெட்டுப்போகாமல்:** இவ்வுலகில் நிம்மதியின்றி, உண்மையான சமாதானமின்றி, நம்பிக்கையின்றி, பாவபாரத்துடனும் பாவத்தின் விளைவுகளாலும் வாழ்க்கையில் துன்புறுவது மட்டுமின்றி, இறுதியில் என்றென்றும் நெருப்புக் கடலென்று அழைக்கப்படும் நரகத்தில் வேதனையுறுவது கெட்டுப்போவதாகும். அவ்வாறு நாம் கெட்டுப்போகாமலிருப்பதற்காக தேவன் நமக்கு வழிவகுத்துள்ளார்.

**நித்திஜீவனை அடையும்படிக்கு:** நித்தியஜீவன் என்றால் என்றென்றும் உயிருடனிருப்பது என்று பொருள்படாது. ஏனெனில் இவ்வுலக வாழ்க்கையைக் கடந்துசெல்லும் ஒவ்வொருவரும் பரலோகத்தில் அல்லது நரகத்தில் என்றென்றும் உயிருடன் இருப்பார்கள். நித்தியஜீவன் என்பது 'ஜீவனாயிருக்கும்' கிறிஸ்துவுக்குள் (யோவா.14:6) இருப்பதாகும். ஒரு மனிதன் இரட்சிக்கப்படும்போது (மறுபடியும் பிறக்கும்போது) நித்தியஜீவன் அவனுக்குள் தொடங்குகிறது. அவன் புதிய படைப்பாக மாறுகிறான் (2 கொரி.5:17). கிறிஸ்துவின் பிரசன்னத்தையும் அவரது சமாதானத்தையும் (யோவா.14:27) அவன் அனுபவிக்கிறான். இவ்வுலகைவிட்டுக் கடந்து சென்றதும் கிறிஸ்துவின் நேரடிப் பிரசன்னத்தில் என்றென்றும் பேரின்பமாக வாழ்வான். இந்த அனுபவமே நித்திய ஜீவனை அடைதல் ஆகும்.

**அவரைத் தந்தருளி:** நமது தேவன் கொடுக்கிற தேவன். ஆதியாகமத்திலிருந்து வெளிப்படுத்தின விசேஷம்வரை இதை நாம் காண்கிறோம். அவர் தந்தருளின மாபெரும் ஈவு அவரது ஒரேபேறான குமாரன் ஆவார். இதற்காக என்றென்றுமாக அவருக்கு நன்றி செலுத்துவோமாக.

**இவ்வளவாய்:** எவ்வளவாய் அன்புகூர்ந்தார் என்பதைத் தியானிக்க இவ்வுலகில் நாம் வாழும் காலமும் நீடுழி காலமும் போதாது. (ஒரே பிள்ளையுடைய) பெற்றோர் தங்களைத் தாங்கள் நேசிப்பதைவிட, தங்கள் பிள்ளையை அதிகமாக நேசிப்பது உண்டு. பிள்ளைகளுக்காக, தியாகமாக

வாழ்கிறவர்கள் உண்டு. தேவன், தமக்கு எதிராகப் புரட்சி செய்து பாவத்தில் கிடக்கும் மனிதருக்காக, விலைமதிக்க முடியாத தமது சொந்தக்குமாரனை, சொந்தக் குமாரனென்றும் பாராமல் அருளிச்செய்த அன்பை முற்றிலும் புரிந்துகொள்ளவும் இயலுமோ (ரோம.8:32). [இதை எழுதும்போது என் கண்கள் கலங்குகின்றன. ஆவியில் நிரம்பி நன்றிசெலுத்தவும் துதிக்கவும் ஏவப்படுகிறேன். 'ஆவியில் ஆழ்ந்த துக்கத்துடன் "ஏன் என்னைக் கைவிட்டீர்" என்று தமது சொந்தக் குமாரன் கதறும் அளவிற்கு கைவிடப்பட்ட நிலையையும், உச்சந்தலையிலிருந்து உள்ளங்கால்வரை கோரமான பாடுகளை அனுபவிக்கும் நிலையையும் எங்களுக்காக (எனக்காக) மன முவந்து நிறைவேற்றிய அன்பாகவே இருக்கும் தேவனே, உமது அன்பிற்கு நாங்கள் (நான்) அடிமைகள்' என்று அடிபணிகிறேன்]. இவ்வளவாய் அன்புகூர்ந்த பிதாவிற்கும் குமாரனுக்கும் பாடுகளில் பங்கேற்ற பரிசுத்த ஆவியானவருக்கும் என்றென்றும் மகிமையும் கனமும் ஆளுகையும் உண்டாவதாக.

**பயிற்சி:** இவ்வளவாய் என்பதில் தியானிப்பதற்கு இன்னும் ஏராளம் உண்டு. தியானியுங்கள்.

**உலகத்தில்:** தமது சாயலாகவும் உருவமாகவும் தம்மால் படைக்கப்பட்ட மனிதன், பாவத்தினால் விழுந்துபோனபோதிலும், தேவன் மனிதனை நேசிக்கிறார் (ரோம.5:8). உலகத்தில் உள்ள எவராயினும் இந்த அன்பை ஏற்றுக்கொண்டு நித்திய ஜீவனைப் பெற்றுக்கொள்ள முடியும்.

நேசிக்கும்படி ஒன்றுமில்லாத மனிதனையும் நேசிக்கிறார். ஏனெனில் தேவன் அன்பாகவே இருக்கிறார் (1 யோவா.4:8, 16).

**தியானிக்க:** 1 யோவா.3:14–21

**அன்புகூர்ந்தார்:** அன்பு என்பது மிகச்சிறந்த பண்பாகும். தேவனுடைய அன்பைப் புரிந்துகொள்ளவும் அவர் நம்மீது கொண்டிருக்கும் அன்பைப் போன்று நாம் அன்புகூர்வதும் நம்மால் இயலாதவையாகும் (1 யோவா.3:1). மனித அன்பு (தாயின் அன்பும்) தேவனுடைய அன்பைவிட மிகவும் குறைவுள்ளது.

**பிற குறிப்புகள்**

**1. தேவன் தமது ஒரேபேறான குமாரனை அனுப்பாமலிருந்தால். . . :** தேவன் தமது குமாரனை அனுப்பினார். தேவன் அனுமதிக்காவிட்டால் அவரது குமாரனை யாரும் சிலுவையில் அறைந்து கொல்ல முடிந்திருக்காது.

அவர் அவ்வாறு அனுமதிக்காமலிருந்தால், இயேசுவின் மரணம் நடைபெற்றிருக்காது. மனிதர் யாவரும் எரிநரகத்தில் சேர்ந்து என்றென்றும் வேதனை அனுபவிக்க நேர்ந்திருக்கும்.

**2. நற்செய்தி:** உலகிலுள்ள யாவருக்கும் இரட்சிப்பு இலவசம். இயேசு கிறிஸ்துவை விசுவாசிக்கவேண்டும் என்ற நிபந்தனை மட்டுமே உண்டு.

**3. தேவனுடைய பண்புகள்:** பாரபட்சமின்மை, கொடுக்கும் தன்மை, அன்பு, பேரின்பவாழ்வை ஆயத்தம்பண்ணியிருக்கும் பரிவு, சிறிய நிபந்தனையை நிறைவேற்றியவர்களுக்கு மாபெரும் ஆசீர்வாதம் அருளும் தன்மை, யாவரும் பேரின்ப வாழ்வை அடையவேண்டும் என்ற பரந்த நோக்கம்.

**கவனிப்பதற்கான குறிப்புகள்**

1. 'எவனோ' என்ற சொல்லில் நீரும் இணைந்துள்ளீரா? இல்லையெனில் இன்றே இயேசுவை உம் இரட்சகராக ஏற்றுக்கொள்வீராக. இந்நூலின் அத்தியாயம் 8இல் எடுத்துக்காட்டான இரட்சிப்பு என்ற தலைப்பில் உள்ள யாவற்றையும் பார்க்கவும். பக்கங்கள் **74 – 81**.

2. மிக மோசமான பாவியையும் புதுப்படைப்பாக மறுரூபப்படுத்தி (2 கொரி.5:17), அவனுக்கு நித்திய ஜீவன் அளிக்கும் தேவனின் மாபெரும் இரக்கத்திற்காகவும் அன்பிற்காகவும் நன்றி செலுத்துங்கள்.

3. நற்செய்தி (சுவிசேஷம்) உலகெங்கும் அறிவிக்கப்படுவதற்காக ஜெபியுங்கள். நற்செய்தியைப் பிறரிடம் கூறுங்கள் நற்செய்திப்பணிக்கு தாராளமாகக் கொடுங்கள்.

## எடுத்துக்காட்டு 2 – எபே.4:30

*'அன்றியும், நீங்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவியைத் துக்கப்படுத்தாதிருங்கள்'.*

1. இவ்வசனத்தை **மனப்பாடம்** செய்யுங்கள்.

2. பொருத்தமான ஒரு **தலைப்பை** அளியுங்கள்.

3. **இவ்வசனத்தின் அமைப்பு என்ன?** இவ்வசனம் ஒரு கட்டளையாக அமைகிறது. கட்டளையை எழுதுக. _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ _ .

**4. வசனத்தைச் சிறு பகுதிகளாகப் பிரித்தல்:** அன்றியும், மீட்கப்படும் நாள், முத்திரை, தேவனுடைய பரிசுத்த ஆவி, துக்கப்படுத்துதல்

**அன்றியும்:** இச்சொல் இதற்கு முன்புள்ள கருத்துக்களுடன் தொடர்புடைய புதிய கருத்து இவ்வசனத்தில் தொடங்குவதைக் குறிக்கிறது. வச.4–29 பகுதியில் பல கட்டளைகள் உள்ளன. அக்கட்டளைகளை ஒவ்வொன்றாக ஏட்டில் எழுதுங்கள்.

**நீங்கள் மீட்கப்படும் நாள்:** மீட்பு என்பதற்கு இரட்சிப்பு என்றும் ஆபத்தினின்று காப்பாற்றப்படுதல் என்றும் விடுவிக்கப்படுதல் என்றும் பல விளக்கங்கள் தரலாம்.

பாவத்தில் வாழும் ஒரு மனிதனை ஒரு ஏரியில் விழுந்து மூழ்கிக் கொண்டிருக்கும் குழந்தைக்கு ஒப்பிடலாம். ஒரு நீச்சல் வீரர் தண்ணீருக்குள் பாய்ந்து அக்குழந்தையைப் பிடித்துக்கொள்வது மறுபடியும் பிறக்கும் அனுபவத்திற்கொப்பானது (மீட்கப்படுதல்). அக்குழந்தையுடன் நீச்சல் வீரர் கரையை நோக்கி நீந்தி வருகின்றார். இது, மறுபடியும் பிறந்தவர், கர்த்தருடைய கிருபையால் இவ்வுலகில் கர்த்தரின் பிள்ளையாக வாழ்வதற்கொப்பானது. இச்சமயத்தில் குழந்தை தண்ணீரில் இருப்பதால் தவறிவிட வாய்ப்பு உண்டு. அவ்வாறே இவ்வுலகில் இருக்கும்வரை விசுவாசி பின்மாற்றமடையக்கூடும். இறுதியில் குழந்தை கரைக்குக் கொண்டுவரப் படுகிறது. இப்பொழுது குழந்தை முற்றிலுமாக மீட்கப்பட்டுவிட்டது. இது ஒரு தேவனுடைய பிள்ளை இவ்வுலகைவிட்டுக் கடந்துசென்று பரலோகத்தில் சேருவது போன்றது. மரணத்தின் வாயிலாகவோ, இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதின் வாயிலாகவோ, இது நேரிடலாம். அவ்வாறு பரலோகம் சேர்வது முற்றிலும் மீட்கப்படுவதாகும். அந்த நாளை 'மீட்கப்படும் நாள்' என்று இவ்வசனம் குறிப்பிடுகிறது. வெளி.22:12 காண்க. மீட்கப்படும் நாளுக்கு நாம் ஆயத்தமாயிருப்பது மிகவும் அவசியமாகும்.

**முத்திரையாகப் பெற்ற தேவனுடைய பரிசுத்த ஆவி:**

**முத்திரையின் முக்கியத்துவம் என்ன?** சில குறிப்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

(i) முத்திரையிடப்பட்டது (முத்திரையிடப்பட்டவர்) முத்திரையிட்டவருக்குச் சொந்தம் என்பதற்கு ஆதாரமாக முத்திரை அமைகிறது.

(ii) முத்திரையிடப்பட்டதை முத்திரையிட்டவர் தமது அதிகாரத்தினாலும் ஆற்றலாலும் பாதுகாப்பார் என்ற உறுதி உண்டாகிறது (அரசு முத்திரை யிடப்பட்டதைச் சேதப்படுத்துபவர்களுக்குக் கடும் தண்டனை கிடைக்கும்).

(iii) பத்திரங்களின் இறுதியில் முத்திரையிடுவது தேவையானது. முத்திரை யிடப்பட்டபின் பத்திரத்தில் எழுதப்பட்டுள்ளதை (உடன்படிக்கையை)

மாற்றவோ, அதனுடன் கூட்டவோ, அதினின்று எதையும் குறைக்கவோ முடியாது.

(iv) முத்திரையென்பது அடையாளம் காண்பதற்கான அறிகுறியாகும். வெளி.7இல் மனிதர் முத்திரையிடப்படுவதைக் காண்க.

(v) முத்திரையிடப்படாதது செல்லாது (பணத்தில் அரசு முத்திரையில்லா விடில் அது செல்லாது).

**பரிசுத்த ஆவியானவர் முத்திரை:**

பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை (ஞானஸ்நானத்தை, அபிஷேகத்தை) வேதத்தின் அடிப்படையில் பெறும்பொழுது (அப்.2:4) நாம் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையைப் பெறுகிறோம்.

(i) பரிசுத்த ஆவியானவரைப் பெறுவது நாம் தேவனுடையவர்கள் என்பதற்கான உறுதியான முத்திரை.

(ii) முத்திரையிடப்பட்டவர்களை முத்திரையிட்டவர் பாதுகாப்பார் என்ற உறுதி உண்டாகிறது. எனவே ஆவியின் அபிஷேகம் நிச்சயம் தேவை.

(iii) கர்த்தருக்கும் நமக்கும் உண்டாயிருக்கிற உடன்படிக்கை (நாம் கர்த்தரை ஏற்றுக்கொண்டு ஆவியானவரால் நடத்தப்படுவதற்கு ஒப்புக்கொடுக் கிறோம். கர்த்தர் நமக்கு நித்திய ஜீவன் அளிப்பதாக வாக்களிக்கிறார். இந்த உடன்படிக்கை) பரிசுத்த ஆவியின் அபிஷேகத்தை நாம் பெறும் போது முத்திரையிடப்பட்டு உறுதிசெய்யப்படுகிறது.

(iv) கர்த்தரின் அரசிற்குச் செல்வது யார் என்று அடையாளம் காண்பிக்கும் முத்திரையாக ஆவியானவரின் அபிஷேகம் செயல்படுகிறது.

(iv) முத்திரையில்லாத பணம் செல்லாது என்றால் ஆவியானவரின் அபிஷேகம் என்ற முத்திரை பெறாதவரின் முடிவு எவ்வாறிருக்கும்?

பரிசுத்த ஆவியின் முத்திரையைப் பெறாதவர்கள் மீட்கப்படும் நாளுக்கென்று முத்திரையைப் பெறாதவர்கள். பிதாவானவர், தம்மிடத்தில் வாஞ்சையாகக் கேட்கும் தம்முடைய பிள்ளை ஒவ்வொருவருக்கும் பரிசுத்த ஆவியை அருளிச்செய்வது அதிக நிச்சயம். லூக்.11:11–13ஐத் தியானித்து இன்றே பரிசுத்த ஆவியின் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்வீராக. பரிசுத்த ஆவியானவருக்குள் நமக்கு கிறிஸ்து திருமுழுக்கு தருகிறார் என்பதை மத்.3:11இல் காண்கிறோம்.

**சிந்திக்க:** நீர் வேதத்தின்படி தேவனுடைய பரிசுத்த ஆவியானவராகிய முத்திரையைப் பெற்றிருக்கிறீரா? பெற்றிருக்காவிடில் மீட்கப்படும் நாளில் உமக்கு என்ன நடக்கும்? ____________________.

**தேவனுடைய பரிசுத்த ஆவி:** தூய ஆவியானவர் திரித்துவத்தில் மூன்றாவது நபர். அவரைக் குறித்த முதல் வேதவசனம் ஆதி.1:2, இறுதி வசனம் வெளி.22:17. ஆவியானவரின் சில பண்புகள் கீழே தரப்பட்டுள்ளன.

அவருக்கு சிந்தை (mind) உண்டு (ரோம.8:27).

அவர் வெளிப்படுத்துதல்களை அருளுகிறவர் (1 நாளா.28:11–13; அப்.11:28; 21:4)

அவர் மக்களை நடத்துகிறவர் (யோவா.16:13)

மனிதர்கள் மூலம் பேசுகிறார் (2 சாமு.23:2; மத்.22:43; 1 தீமோ.4:1)

அறிவை உணர்த்துகிறார் (நெகே.9:20)

சாட்சி கொடுக்கிறார் (யோவா.15:26; 1 யோவா.5:6)

நியாயந்தீர்த்து பாவங்களினின்று சுத்திகரிக்கிறார் (ஏசா.4:3)

ஞானத்தையும் உணர்வையும் ஆலோசனையையும் பெலனையும் அறிவையும் கர்த்தருக்குப் பயப்படும் பயத்தையும் அருளுகிறார் (ஏசா.11:2)

சத்துருவை அடையாளங்காண்கிறார், சத்துருவிற்கு எதிராகப் போரிடுகிறார் (ஏசா.59:19)

அவரைத் துக்கப்படுத்த முடியும் (ஏசா.63:10; எபே.4:30)

பாவத்தைக்குறித்தும் நீதியைக்குறித்தும் நியாயத்தீர்ப்பைக்குறித்தும் கண்டித்து உணர்த்துகிறார் (யோவா.16:8–11)

அவரைச் சோதிக்கமுடியும் (அப்.5:9)

ஊழியத்திற்கு அழைக்கிறார் (அப்.13:2)

தம்மை 'நான்' என்று குறிப்பிடுகிறார் (அப்.13:2)

சில இடங்களில் வசனத்தைச் சொல்லாதபடி தடைபண்ணுகிறார் (அப்.16:6)

சில பயணங்களைத் தடைசெய்கிறார் (அப்.16:7).

இத்தகைய பல பண்புகள் பரிசுத்த ஆவியானவர் ஒரு நபர் என்பதை நிறுவுகின்றன. மாம்சமும் இரத்தமும் இருந்தால்தான் நபர் என்பதில்லை. தம்மை 'நான்' என்று அழைக்கக்கூடியவர், சிந்தை (mind) உள்ளவர், அறிவுள்ளவர், உணர்ச்சிகளை அனுபவிக்கிறவர், தாமாகச் செயல்படக்

கூடியவர் ஒரு நபர் என்பதில் என்ன சந்தேகம்! ஆவியானவர் புறாவைப்போன்று உருவம் கொண்டு இயேசுவின் மீது இறங்கினார் (மத்.3:16) அல்லவா!

ஆவியானவரின் பல பெயர்களில் ஒன்றான 'தேற்றரவாளன்' (யோவா.14:26), என்ற சொல்லின் மூலச்சொல்லான **Parakleetos** என்பது தேற்றுகிறவர், ஆறுதல் படுத்துகிறவர், ஆலோசனை கூறுபவர், உதவி செய்கிறவர், பரிந்து பேசுகிறவர் போன்ற பல பொருட்கள் கொண்டதாகும்.

**குறிப்பு:** ஆவியானவரைப் பெற்றுக்கொள்வதும் இரட்சிக்கப்படுவதும் (விசுவாசியாவதும்) வெவ்வேறான நிகழ்ச்சிகள் என்பதை அப்.8:5–17இலும் அப்.19:1–6இலும் காண்கிறோம். விசுவாசிகளானபோது அல்ல, திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற்றபோது அல்ல, அப்போஸ்தலர் கைகளை வைத்த போதுதான் பரிசுத்த ஆவியானவர் அருளப்பட்டார். அப்.10:44–48இல் யூதரல்லாதோர் மீதும் ஆவியானவர் இறங்குவதைக் காட்டும் வகையில் வசனத்தைக் கேட்பவர்கள் மீது ஆவியானவர் இறங்கினார். ஆவியானவரை அப்.2:4இன்படி பெற்றுக்கொள்ளுங்கள். 'திராட்சைப்பழம் எட்டாத நரி'யைப்போன்று 'இந்தப் பழம் புளிக்கும்' என்று கூறுவது அறியாமையாகும். இவ்வாறு கூறி கர்த்தருடைய ஈவைப் பெறாமல் போகாதீர்.

**ஆவியானவரைத் துக்கப்படுத்துதல்:** நாம் பாவத்தில் ஈடுபட்டால் ஆவியானவர் துக்கமடைவார். ஆவியானவரை விசனப்படுத்துகிறவர் களுக்கு தேவன் சத்துருவாக மாறி அவர்களுக்கு எதிராகப் போரிடக்கூடும் (ஏசா.63:10). ஆவியானவரிடத்தில் பொய்சொல்லுதல் மரணத்துக்கேதுவான பாவம் என்பதை அப்.5:1–11இல் காண்கிறோம். ஆவியானவரை அவித்துப் போடுதல் தவறாகும் (1 தெச.5:19).

கிருபையுள்ள ஆவியை நிந்திப்பதான பாவத்திற்குக் கடுமையான தண்டனை உண்டு (எபி.10:29). ஆவியானவரை ஏளனம் செய்வதும் அவரைப்பற்றி அவதூறாகப் பேசுவதும் இம்மையிலும் மறுமையிலும் மன்னிக்கப்படாது (மத்.12:31,32; மாற்.3:28–30).

**முக்கிய எச்சரிப்பு:** ஆவியானவரைப் பற்றி சரியாகத் தெரியாதவர்கள், ஆவியானவரின் திருமுழுக்கைப் பெற்றுக்கொள்ளாதவர்கள், மிகவும் கவனமாகப் பேசவேண்டும். தவறாகப் பேசி தண்டனை பெறுவதைவிட வாயை மூடிக்கொண்டிருப்பது நல்லது.

**துக்கம்:** கர்த்தராகிய இயேசு துக்கம் அனுபவித்தார். ஏன் என்பதை ஏசா.53:3–6இல் காண்க. பவுல் தமது நாட்டு மக்களின் இரட்சிப்பிற்காக

துக்கம் கொண்டிருந்ததை ரோம.9:1–3இல் காண்கிறோம். பவுலைப்போன்று நமது நாட்டு மக்களின் இரட்சிப்பிற்காக நாம் ஊக்கமாக ஜெபிக்கவும், நற்செய்தியை அறிவிக்கவும், நற்செய்திப் பணியாளர்களை (மிஷனரிகளை) அனுப்பவும் நம்மை அர்ப்பணிப்போமாக.

துக்கம் என்றால் என்ன? நான் அதை அனுபவித்திருக்கிறேனா? மற்றவர்கள் என்னைத் துக்கப்படுத்தும்பொழுது நான் எப்படி நடந்துகொள்கிறேன் (மத்.5:44)? நான் என் தந்தையை, தாயை, கணவனை, மனைவியை, மாமனாரை, மாமியாரை, குழந்தைகளை, உறவினரை, அயலகத்தாரை, உடன் பணியாளரை, பிறரை துக்கப்படுத்துகிறேனா? அவர்களைத் துக்கப்படுத்தாமலிருக்க நான் என்ன செய்யலாம்?

மேலே எழுதப்பட்டவற்றைச் சிந்தித்து வாழ்க்கையைச் சரிசெய்யுங்கள்.

**எதிர்மறைகளைத் தியானிக்க**

| | | |
|---|---|---|
| மீட்கப்படும் நாள் | **X** | நரகத்தில் தள்ளப்படும் நாள் |
| முத்திரையிடப்படுதல் | **X** | முத்திரையின்றி இருத்தல் |
| தூய ஆவியானவர் | **X** | அசுத்த ஆவிகள் |
| துக்கப்படுத்துதல் | **X** | மகிழ்ச்சியுறச் செய்தல் |

போன்றவற்றையும் தியானிக்கலாம்.

# 6. நூல்களைத் தியானிக்கும் முறை

வேதத்தை அதிகாரங்கள் முறையில் அல்லது பத்திகள் முறையில் கற்ற பின்னர் நூல்கள் முறையைப் பின்பற்றுவது நல்லது. இதில் மூன்று வகைகளைக் கீழே காண்போம்.

## முறை 1

ஒரு நூலை அதிகாரங்கள் முறையில் அல்லது பத்திகள் முறையில் நன்கு தியானித்தவுடன் அந்நூலின் மையக் கருத்து, அதன் திறவுகோல் வசனம், அதன் செய்தி, அந்நூலில் கிறிஸ்து எவ்விதம் இடம் பெறுகிறார், அதில் கூறப்பட்டுள்ள மக்களின் நிலை, அது எழுதப்பட்ட சூழ்நிலை, அதன் உட்பிரிவுகள் மற்றும் பிற செய்திகளை ஆராய்ந்து பார்க்கலாம்.

அதிகாரங்களையும் பத்திகளையும் தியானிக்கும் முறைகளை ஏற்கனவே இந்நூலில் வாசித்திருப்பீர்கள் (அத்தியாயங்கள் 3,4). எனவே இந்த முறையை வாசகர்கள் எளிதில் பின்பற்றலாம்.

## முறை 2

ஒரு நூலின் அதிகாரங்கள் அல்லது பத்திகளைத் தியானிக்கும் முன்னர், நூலை மீண்டும் மீண்டும் வாசிப்பதின் மூலம் அதன் மையக் கருத்து, அதன் திறவுகோல் வசனம் முதலியவற்றைக் கண்டுபிடித்தல்.

இரண்டாவது முறைக்கு எடுத்துக்காட்டுகள் தருகிறோம்.

### எடுத்துக்காட்டு – 1, மல்கியா

மல்கியா தீர்க்கதரிசியின் புத்தகத்தை வேதத்தில் படித்து குறிப்புக்களை எழுதுங்கள். பின்னர் நீங்கள் எழுதிய குறிப்புக்களோடு கீழே உள்ளவற்றை ஒப்பிடுங்கள். நீங்கள் இதைவிட நன்கு எழுதியிருப்பின் உங்களுக்குப் பாராட்டுக்கள்.

**1. இந்நூலின் கருப்பொருள்:** 'பின்மாற்றக்காரர்களுக்கு அழைப்பு'.

**2. திறவுகோல் வசனம் (3:7):** 'என்னிடத்திற்குத் திரும்புங்கள், அப்பொழுது உங்களிடத்திற்குத் திரும்புவேன் என்று சேனைகளின் கர்த்தர் சொல்கிறார்'.

**3. மல்கியாவில் கிறிஸ்து:** கிறிஸ்துவின் முன்னோடியின் வருகையும், கிறிஸ்துவின் இரு வருகைகளும் அறிவிக்கப்படுதல் (3:1–5; 4:5,6).

**4. மல்கியாவின் உட்பிரிவுகள்:**

1. இஸ்ரவேலின் மீது கர்த்தரின் சிநேகம் (1:1–1:5)
2. ஆசாரியரின் பாவங்களும் அவர்கள் மீது கர்த்தரின் சாபமும் (1:6–2:9)
3. மக்களின் பாவங்களும் கர்த்தரின் வருகையில் நியாயத்தீர்ப்பும் (2:10–3:15)
4. தேவனுடைய வாக்குறுதிகள் (3:16–4:6)

**5. மல்கியா எழுதப்பட்டுள்ள விதம்:**

மல்கியாவில் கர்த்தர் உரையாடல் முறையைப் பல இடங்களில் பயன் படுத்தியுள்ளதைக் கவனிக்கவும்.

**6. மல்கியாவில் கூறப்பட்டுள்ள ஆசாரியரின் நிலை:**

1. ஆசாரியரின் மீது கர்த்தரின் குற்றச்சாட்டுக்களை எழுதுக.
(1 பேதுரு 2:9இன்படி நாம் எல்லோரும் ஆசாரியர்களே)

1:6 சேனைகளின் கர்த்தரின் நாமத்தை அசட்டைபண்ணினார்கள்.

1:7–9 பீடத்தின் மேல் அசுத்தமான அப்பத்தைப் படைத்தல், கர்த்தருடைய பந்தி எண்ணமற்றுப்போயிற்று என்று கூறுதல், ஊனமானதையும் நசல் கொண்டதையும் கர்த்தருக்குக் கொண்டுவருவது தவறல்ல என்று கூறுதல்

1:10 கூலிக்காக மட்டும் ஆசாரியர்களாக இருப்பவர்களுக்கு (ஊழியம் செய்பவர்களுக்கு) ஐயோ! உண்மையாய்த் தேவன்மீது அன்பினாலும் ஆத்துமாக்கள்மீது கரிசனையோடும் ஊழியம் செய்வோமாக. பணம் அல்லது சம்பளம் வாங்கக்கூடாது என்பதல்ல. பணத்தை முக்கிய குறிக்கோளாகக்கொண்டு ஊழியம் செய்யலாகாது.

1:12, 13 கர்த்தருடைய பந்தி அசுத்தமானது என்று சொல்லி, கர்த்தருடைய நாமத்தைப் பரிசுத்தக்குலைச்சல் ஆக்குதல், பீறுண்டதையும் கால் ஊனமானதையும், நசல்கொண்டதையும் காணிக்கையாகச் செலுத்துதல், வழியைவிட்டு விலகி அநேகரை வேதத்தைவிட்டு இடறப்பண்ணி உடன்படிக்கையைக் கெடுத்துப்போடுதல்

(இப்பாவங்கள் என்னிடத்தில் உண்டோ?)

2. ஆரம்பத்தில் லேவியர் எப்படி இருந்தனர்? 2:5,6

கர்த்தரின் நாமத்துக்குப் பயந்திருந்தனர், சத்தியவேதம் அவர்கள் வாயில்

இருந்தது, கர்த்தரோடே சமாதானமும் யதார்த்தமுமாய்ச் சஞ்சரித்தனர், அநேகரை அக்கிரமத்தினின்று திருப்பினர். இவ்வாறு இருக்கிறேனா?

3. ஆசாரியன் எப்படி இருக்கவேண்டும்? 2:7

ஆசாரியனின் உதடுகள் வேதத்தைக் காக்கவேண்டும். அவன் வாயில் வேதவசனம் இருக்கவேண்டும். நான் இப்படி இருக்கின்றேனா?.

4. பாவம் செய்கிற ஆசாரியர் மீது கர்த்தரின் சாபம் 2:2–4,9

அவர்கள் சாபமாவார்கள், அவர்களின் ஆசீர்வாத வார்த்தைகள் சாபமாகப் போகும், பயிர் கெடும், கேவலம் அடைவார்கள், தள்ளப் படுவார்கள், எல்லா ஜனத்துக்கும் முன்பாக அற்பரும் நீசரும் ஆவார்கள். (ஊழியருக்காகவும், நமக்காகவும் ஜெபிப்போமாக).

**7. மல்கியாவில் கூறப்பட்டுள்ள மக்களின் நிலை**

1. மக்களின் மீது கர்த்தரின் குற்றசாட்டுக்கள்.

1:14 மந்தையில் நல்ல கடா இருக்கும்போது கெட்டுப்போனதை ஆண்டவருக்கு நேர்ந்துகொள்தல்

2:10 பிதாக்களின் உடன்படிக்கையைப் பரிசுத்தக்குலைச்சலாக்கி சகோதரருக்குத் துரோகம் செய்தல்

2:11 துரோகம், அருவருப்பு, பரிசுத்தக்குலைச்சலாக்குதல், அந்நிய தேவதைகளின் குமாரத்திகளைத் திருமணம் செய்தல்

2:13 கர்த்தருடைய பீடத்தைக் கண்ணீரினாலும், அழுகையினாலும், பெரு மூச்சினாலும் நிரப்புதல்

2:14–16 இளவயதின் மனைவிக்குத் துரோகம்பண்ணுதல்

2:17 வார்த்தையினாலே கர்த்தரை வருத்தப்படுத்துதல்

3:5 சூனியம் வைத்தல், விபசாரம் செய்தல், பொய்யாணை இடுதல், விதவைகள் திக்கற்றவர்களின் கூலியை அபகரித்தல், பரதேசிக்கு அநியாயம் செய்தல்

3:8 காணிக்கைகளிலும் தசமபாகங்களிலும் தேவனை வஞ்சித்தல்

3:13–15 கர்த்தருக்குப் பயந்து நடப்பதில் பயனில்லை என்று கர்த்தருக்கு விரோதமாகக் கடினமான பேச்சுக்களைப் பேசுவது

இப்பாவங்கள் என்னிடத்தில் உண்டா?

2. மக்களின் மீது கர்த்தரின் சாபங்கள்.

1:14 சபிக்கப்படுதல்

2:12 சங்கரிக்கப்படுதல்

3:2–3 அக்கினியில் புடமிடப்படுதல்

**8. மல்கியா எழுதப்பட்ட காலச் சூழ்நிலை:**

நெகேமியாவின் காலத்திலோ, அதற்குச் சற்றுப் பின்னரோ எழுதப்பட்டிருக்க வேண்டும். பாபிலோனின் சிறையிருப்பினின்று மீண்டவர்கள் தேவனைச் சடங்காச்சாரங்களால் மட்டும் சேவித்து, பின்மாற்றமாயிருந்த சூழ்நிலையில் இந்நூல் எழுதப்பட்டிருக்கின்றது. பின்மாற்றக்காரர்கள் எதையும் நம்பாமல் கேள்விகள் கேட்பார்கள், தேவனைக்கூட நம்பாமல் அவரையும் கேள்விமேல் கேள்வி கேட்பார்கள், எல்லோரையும் (தேவனையும்) குற்றம் சாட்டுவார்கள் என்பதை மல்கியாவின் நூல் எடுத்துக்காட்டுகிறது. ஆவியினால் தேவனுக்கு ஆராதனை செய்யாமலும் (பிலி.3:3), ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளாமலும் (யோவா.4:24), சடங்காச்சாரங்களை மட்டும் பின்பற்றும் கிறிஸ்தவர்கள் தேவன் விரும்பும்படி அவரைச் சேவிக்கிற வர்களாக மாறவேண்டும் என்று மல்கியாவின் நூல் எச்சரிக்கிறது.

**9. நாம் கற்றுக்கொள்ளும் சில பாடங்களைக் காண்போம்**

1. கர்த்தர் நம்மைச் சிநேகிக்கிறார் (1:2), பாவத்தை வெறுக்கிறார் (1:3–4 துன்மார்க்கத்தின் எல்லை), பின்மாற்றக்காரர் அவரிடத்தில் திரும்பினால் ஏற்றுக்கொள்கிறார் (3:7). கர்த்தரை அசட்டைபண்ணுகிறவர்கள்மேல் அவர் பிரியமாயிருப்பதில்லை (1:8–10). தேவபக்தியுள்ள சந்ததியைப் பெறவேண்டும் (2:15).

2. கர்த்தருடைய நாமம் உலகெங்கும் மகத்துவமாயிருக்கும். கர்த்தருடைய நாமத்துக்குத் தூபமும் சுத்தமான காணிக்கையும் செலுத்தப்படும் (1:11). கர்த்தருடைய நாமம் ஜாதிகளுக்குள்ளே மகத்துவமாயும், பயங்கரமாயும் இருக்கும் (1:11, 14). கர்த்தர் மகத்துவமான ராஜா, சேனைகளின் கர்த்தர் (1:14). அவர் நம்மெல்லாருக்கும் ஒரே பிதா (2:10). அவர் சுத்திகரிப்பார், புடமிடுவார் (3:2, 3). கர்த்தர் மாறாதவர் (3:6).

3. கர்த்தரைக் கனம்பண்ணி, அவருக்குப் பயந்து வாழவேண்டும் (1:6). நாம் பேசுவதைக் கர்த்தர் கவனித்துக் கேட்கிறார் (3:16). ஞாபகப்புஸ்தகம் ஒன்று எழுதப்பட்டிருக்கிறது (3:16). யாருக்காக? . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . அவர்களுக்குத் தேவன் தரும் வாக்குத்தத்தங்கள் எவை? (3:16–18;

4:2,3) **(i)** அவர்கள் ............................ **(ii)**குமாரனைக் கடாட்சிப்பது போல ............................ **(iii)**............................ திரும்பவும் (இப்பொழுதும் பின்பும்) காண்பார்கள். **(iv)** ............................ உதிக்கும் **(v)** அதன் செட்டைகளின் கீழ் ............................ இருக்கும் **(vi)** நீங்கள் ............................போவீர்கள் **(vii)** ............................ வளருவீர்கள் **(viii)** துன்மார்க்கரை ............................ **(ix)** அவர்கள் ............................ கீழ் ............................ என்று ............................ சொல்கிறார். (கோடிட்ட இடங்களை நிரப்புக)

5. கர்த்தரின் சவால்:– தசமபாகம், காணிக்கை செலுத்தும்படி (3:10,11), நீதிமானாக நடந்து ஊழியம் செய்யும்படி (3:18)

**10. மல்கியா பழைய ஏற்பாட்டின் கடைசி நூல்:**

**1. பழைய ஏற்பாட்டின் ஆரம்பத்தில்** (ஆதி.3:15) ஸ்திரீயின் வித்து வாக்குப் பண்ணப்பட்டார். **பழைய ஏற்பாட்டின் இறுதியில்** 'இதோ வருகிறார்' (மல்.3:1) என்று அவர் வருகை வலியுறுத்தப்படுகிறது.

2. **பழைய ஏற்பாட்டின் இறுதியில்** 'வழியை ஆயத்தம் பண்ணுகிறவனை இதோ அனுப்புகிறேன்' (மல்.3:1; 4:5, 6) என்று கர்த்தர் உரைத்தார். **புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில்** வழியை ஆயத்தம்பண்ணுகிற யோவான் ஸ்நானன் வந்தார் (மாற்.1, 2–4; லூக்.1:17).

3. **பழைய ஏற்பாட்டின் இறுதியில்** 'இதோ வருகிறார்', என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் வருகை முன்னறிவிக்கப்பட்டது (மல்.3:1). **புதிய ஏற்பாட்டின் ஆரம்பத்தில்** அவர் வந்துவிட்டார். 'இதோ உலகத்தின் பாவத்தைச் சுமந்துதீர்க்கிற தேவ ஆட்டுக்குட்டி' என்றும் (யோவா.1:29), 'இன்றைக்குக் கிறிஸ்து என்னும் இரட்சகர்... பிறந்திருக்கிறார்' (லூக்.2:10–12) என்றும் புதிய ஏற்பாடு கூறுகிறது.

4. **பழைய ஏற்பாட்டின் இறுதியில்** 'இதோ வருகிறார்', என்று எழுதப்பட்டது நிறைவேறிற்று. **புதிய ஏற்பாட்டின் இறுதியில்** 'இதோ சீக்கிரமாய் வருகிறேன்' என்றும் (வெளி.22:7), 'மெய்யாகவே நான் சீக்கிரமாய் வருகிறேன்' (வெளி.22:20) என்றும் எழுதியிருப்பதும் நிச்சயமாய் நிறைவேறும். அதற்காக ஆயத்தப்படுவோமாக.

## எடுத்துக்காட்டு – 2

அப்போஸ்தலனாகிய பவுல் பிலிப்பியருக்கு எழுதிய நிருபம் – **பிலிப்பியர்**

இந்நூலை, குறைந்தது மூன்று முறையேனும் வாசித்து, நீங்களாகக் குறிப்புக்கள் எழுதுங்கள். பின்னர் கீழே தரப்பட்டுள்ள குறிப்புக்களை வாசியுங்கள். சுருக்கமாக, சில குறிப்புக்கள் மட்டுமே தந்துள்ளேன்.

**பிலிப்பி நகரத்தில் சபை உருவான வரலாறு:** பிலிப்பி நகரத்தில் சபை உருவானதை அப்.16:12–40 கூறுகிறது. அந்நகரத்தின் முதல் விசுவாசியென்ற கிருபை லீதியாளுக்குக் கிடைத்தது. யார் அந்த லீதியாள்? லீதியாள் என்னவெல்லாம் செய்தார் என்று இப்பகுதியை வாசித்து, கண்டுபிடித்து எழுதுங்கள். பிலிப்பி நகருக்குச் சென்ற முதல் நற்செய்திப் பணியாளர்களான பவுல், சீலா ஆகியோரின் பாடுகளினூடே அங்கு சபை தொடங்கியது. தங்களின் மிகுந்த பாடுகளின்போதும் அவர்கள் ஆனந்த மாகப் பாடியபோது, பூமியும் சேர்ந்து ஆர்ப்பரித்தது (பூமி அதிர்ச்சி உண்டாயிற்று). இவற்றின் விளைவாக, சிறைச்சாலையின் அதிகாரியும் அவரின் குடும்பத்தாரும் இரட்சிக்கப்பட்டு இரவோடிரவாக திருமுழுக்கு பெற்றுக்கொண்டனர். இக்குடும்பத்தினர் பிலிப்பி சபையின் உறுப்பினர்களாக இருந்திருப்பார்கள் என்பதில் ஐயமில்லை.

**நூலின் ஆசிரியர்:** வேதத்தின் எந்த நூலையும் ஆவியானவர் தமது ஏவுதலால் எழுதச் செய்தார் அவரது ஏவுதலால் இந்நூலை எழுதியவர்கள் யார்? (பிலி.1:1) . . . . . . . . . . . . . . .

இந்நூலை எழுதும்போது பவுல் எந்நிலையிலிருந்தார்? . . . . . . . . . . இராயனின் அரண்மனையில் இருந்தபோதிலும் அங்கு சிறையில் அடைக்கப்பட்டவராயிருந்தார் (1:13; 4:22).

**எழுதப்பட்ட காலம்:** பவுலின் சிறைவாசத்தின்போது எழுதப்பட்டதால் கி.பி.60இலிருந்து கி.பி.64இற்குள் இந்நூல் எழுதப்பட்டிருக்கவேண்டும்.

**வரலாற்று குறிப்புகள்:** இராயனின் அரண்மனையின் ஒரு பகுதியில் இருந்த சிறைச்சாலையில் பவுல் அடைக்கப்பட்டிருந்தார். சில விசுவாசிகள் பவுலின் உபத்திரவங்களைப் பார்த்து அனல்கொண்டவர்களாக நற்செய்தியைத் தைரியமாகப் பறைசாற்றினார்கள். வேறு சிலர், பவுலின் பாடுகளை அதிகரிக்கச்செய்யும் விதத்தில் நற்செய்தியை அறிவித்தனர்.

பவுலின் உடன் ஊழியரான எப்பாப்பிரோதீத்து கிறிஸ்துவின் ஊழியத்தி னிமித்தம் மரணத்திற்குச் சமீபமாய் சுகவீனமுற்று பின்னர் கர்த்தரால் சுகமடைந்தார். பிலிப்பியரைச் சந்திப்பதற்காக பவுல் அவரை அனுப்பினார். பிலிப்பியர் நிருபம் என்னும் இக்கடிதத்தை எப்பாப்பிரோதீத்து தன்னுடன் எடுத்துக்கொண்டு சென்றிருப்பார் என்று கருதலாம். பவுலின் கடந்தகால அனுபவங்களைப் பற்றிய குறிப்புக்கள் இந்நூலில் உண்டு. அவற்றைக் கண்டுபிடியுங்கள்.

பிலிப்பி நகரத்தின் சபை மக்கள் பவுலின் ஊழியத்தைத் தங்கள் பொருளுதவிகளால் தாங்கினார்கள். பிலிப்பி நகர் சபை மக்களிடையில் கருத்து வேறுபாடுகள் இருந்தன, கள்ளப்போதகர்களும் இருந்தனர். இவற்றை இந்நூலை வாசித்து, கண்டுபிடியுங்கள்.

**ஜீவ புத்தகம்:** ஜீவ புத்தகத்தில் பேரெழுதப்பட்ட சிலரை பவுல் இந்நூலில் குறிப்பிட்டுள்ளார். அவர்கள் யார்? ஏன் அவர்களின் பெயர்கள் ஜீவ புத்தகத்தில் இடம்பெற்றுள்ளன? (அவர்கள் செய்ததை நீர் செய்கிறீரா? உமது பெயர் ஜீவபுத்தகத்தில் இருக்கிறதா?)

**உட்பிரிவுகள்:** இந்நூலைப் பல விதங்களில் உட்பிரிவுகளாகப் பிரிக்கலாம். அதிகாரங்கள் வாயிலாகக் கீழ்க்கண்டவாறு பிரிக்கலாம்.

**அதிகாரம் 1 – பாடுகள்**

1:1–11 வாழ்த்துக்கள், நன்றிசெலுத்துதல், விண்ணப்பங்கள்
1:12–18 பவுலின் பாடுகளால் நற்செய்தி பரவுதல்
1:19–26 பவுலின் பாடுகளால் கர்த்தர் மகிமைப்படுதல்
1:27–30 பாடுபடும் விசுவாசிகளுக்கு பவுலின் உற்சாகமூட்டும் சொற்கள்

**அதிகாரம் 2 – தாழ்மைக்கு எடுத்துக்காட்டுகள்**

2:1–4 தாழ்மையாயிருக்க அழைப்பு
2:5–16 கிறிஸ்துவின் தாழ்மை
2:17–18 பவுலின் தாழ்மை
2:19–24 தீமோத்தேயுவின் தாழ்மை
2:25–30 எப்பாப்பிரோதீத்துவின் தாழ்மை

**அதிகாரம் 3 – கிறிஸ்துவைக் குறித்த அறிவு**

3:1–9 மாம்சத்தில் நம்பிக்கை வைப்பது பயனற்றது

3:10–16 கிறிஸ்துவைக் குறித்த அறிவைப் பெற அழைப்பு

3:17–21 மாம்சத்தின்படி வாழ்பவர்களுக்கு எச்சரிப்பு

**அதிகாரம் – 4 கிறிஸ்து அருளும் சமாதானம்**

4:1–3 சகோதரருடன் சமாதானம்

4:4–9 கிறிஸ்துவுடன் சமாதானம்

4:10–19 எல்லா நிலையிலும் சமாதானம்

4:20–23 இறுதி வாழ்த்துக்கள்

**பயிற்சிகள்:**

1) மேற்கண்ட வகையில் குறிப்புக்கள் எழுதித் தியானியுங்கள்

2) பவுல், தீமோத்தேயு, எப்பாப்பிரோதீத்து ஆகியோரின் குணநலன்களை இந்நூலிலிருந்து ஆராய்ந்து, அவர்களைப் பின்பற்றத் தீர்மானியுங்கள்.

3) பிலிப்பி சபை மக்களின் பண்புகளைத் தியானிக்கலாம். அப்பண்புகள் நம்மிலும் நமது சபையிலும் இருக்கிறதா என்று சோதித்தறியலாம்.

4) இந்நூலிலுள்ள வாக்குறுதிகள் யாவற்றையும் அவற்றிற்கான நிபந்தனைகளோடு எழுதி, வாக்குறுதிகளுக்கான ஆசீர்வாதங்களைப் பெற நாடுங்கள்.

## முறை 3

**அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ள சொற்களின், கருத்துக்களின் வாயிலாக தியானித்தல்**

ஒரு நூலை (அதிகாரத்தை, பத்தியை)த் தியானிப்பதற்கான இன்னொரு முறை, அதில் அடிக்கடி காணப்படும் சொற்கள், சொற்றொடர்கள், கருத்துக்கள் ஆகியவற்றின் அடிப்படையில் தியானிப்பதாகும்.

### எடுத்துக்காட்டு – பிலிப்பியர்

இந்நூலை வாசித்து அதில் மீண்டும் மீண்டும் வரும் சொற்களைக் கண்டுபிடியுங்கள்.

(i) மிகவும் அடிக்கடி பயன்படுத்தப்பட்டுள்ள சொல் **கிறிஸ்து**. இந்நூலில் இச்சொல் வரும் இடங்களை அடிக்கோடிடுக. எத்தனை தடவை இது எழுதப்பட்டுள்ளது?.

(ii) **'சந்தோஷம்', 'மகிழ்ச்சி'** போன்ற சொற்களும் அடிக்கடி காணப் படுகின்றன. இவற்றை வேறொரு நிற மையினால் அடிக்கோடிடுங்கள்.

(iii) **'சுவிசேஷம்', 'பிரசங்கித்தல்'** போன்ற சொற்கள் வரும் இடங்களை வேறொரு நிற மையினால் அடிக்கோடிடுங்கள்.

(iv) **'சிந்தை', 'சிந்திப்பது', 'நினைத்தல்', 'மனம்'** . . . . . . போன்ற சொற்களை பின்னுமொரு நிறத்தால் அடிக்கோடிடுங்கள்.

(v) அன்பு, வாஞ்சை போன்ற சொற்களும் கருத்துக்களும் இடம் பெற்றுள்ளதால் **'பிலிப்பியருக்கு பவுலின் அன்புக்கடிதம்'** என்று இந்நூலை ஆராயலாம்.

(vi) கிறிஸ்துவின் வருகையைக் குறித்த குறிப்புகள் பல இருப்பதால் **'வருகைக்கு ஆயத்தப்படுத்தும் நூல்'** என்று ஆராயலாம்.

வேறு ஏதேனும் கருத்து இந்நூலில் வலியுறுத்தப்பட்டுள்ளதாக நீங்கள் ஆராயும்போது தோன்றினால் அக்கருத்தைச் சார்ந்து ஆராயலாம்.

**(i) கிறிஸ்து** என்ற சொல்லின் அடிப்படையில் தியானம்.

திறவுகோல் வசனம்: **1:21** 'கிறிஸ்து எனக்கு ஜீவன், சாவு எனக்கு ஆதாயம்'.

| | |
|---|---|
| 1:1–14 | கிறிஸ்து, கொடுக்கிற தேவன் **(1:1, 2, 5, 8, 10, 11, 13)** |
| 1:15–18 | கிறிஸ்து பிரசங்கிக்கப்படுதல் **(1:15, 16, 18)** |
| 1:19–30 | கிறிஸ்துவும் நானும் **(1:19, 20, 21, 23, 25, 27, 29)** |
| 2:1–18 | கிறிஸ்துவின் சிந்தையும் அதின் விளைவும் **(2:1, 5, 11, 14)** |
| 2:19–30 | கிறிஸ்துவின் ஊழியர் (2:19, 21, 25, 29, 30) |
| 3:1–21 | யாவும் கிறிஸ்துவுக்கே (3:1, 3, 7, 8, 9, 12, 14, 18, 20) |
| 4:1–9 | கிறிஸ்துவில் உறுதியாக நிற்பது (4:1, 2, 4, 5, 7) |
| 4:10–23 | எல்லாவற்றிற்கும் போதுமான கிறிஸ்து (4:13, 19, 21, 23) |

மேற்கண்டவற்றில் **1:1–14** வரையுள்ளவற்றை குறிப்புக்களை மட்டும் சற்று விளக்குகிறோம். மீதமுள்ளவற்றை நீங்கள் ஒரு ஏட்டில் (நோட்டில்) எழுதுங்கள்.

**1:1–14 கிறிஸ்து கொடுக்கிற தேவன் (1:1, 2, 5, 8, 11, 13)**

1:1 ஊழியத்தை பவுலுக்கும் தீமோத்தேயுவுக்கும் கொடுத்தார், இவ்வூழியரை நமக்குக் கொடுத்தார்

1:2 பிதாவோடு இணைந்து கிருபையையும் சமாதானத்தையும் கொடுக்கிறார்

1:5 தமது மகிமையின் நாளைக் கொடுக்க ஆயத்தமாயிருக்கிறார்

1:8 தமது உருக்கமான அன்பை அளிக்கிறார்

1:10 நீதியின் கனிகளைத் தருகிறார்

1:11 தமது நாளை நமக்கு ஆயத்தம்பண்ணுகிறார்

1:13 தமக்குள்ளான பாடுகளில் பங்கு தருகிறார்

(ii) **'சந்தோஷம்'** என்ற கருத்தில் பிலிப்பியர் நிருபத்தைக் காண்போம்

அதிகாரம் 1 – கிறிஸ்து பிரசங்கிக்கப்படுவதில் சந்தோஷம் (வ.18)

அதிகாரம் 2 – பலியிடப்படுதலில் சந்தோஷம் (வ.17)

அதிகாரம் 3 – கர்த்தருக்குள் சந்தோஷம் (மேன்மை பாராட்டுதல் – வ.3, கிறிஸ்துவை அறிகிற அறிவின் மேன்மை – வ.8, கிறிஸ்துவுக்கொப்பாக மாறுதல் வ.20–21).

அதிகாரம் 4 – எப்பொழுதும் சந்தோஷம் (வ.4)

**முக்கிய வசனம் 4:4** – 'கர்த்தருக்குள் எப்பொழுதும் சந்தோஷமாயிருங்கள்; சந்தோஷமாயிருங்கள் என்று மறுபடியும் சொல்லுகிறேன்'. 'சந்தோஷமா யிருக்கிறேன்' என்று பவுல் கூறும்போது இந்நூலை எழுதும்படி ஏவிய ஆவியானவரும் சந்தோஷப்படுகிறார். எனவே, பிலிப்பியர் செய்ததுபோன்று நாம் நடந்துகொள்ளும்போது கர்த்தர் மகிழ்ச்சியடைகிறார்.

**எடுத்துக்காட்டுகள்:**

அ) 1:3,4 நாம் சுவிசேஷத்தை ஏற்றுக்கொள்ளும்போது கர்த்தர் மகிழ்ச்சி யடைகிறார்.

ஆ) 1:18 கிறிஸ்து அறிவிக்கப்படும்போது தேவன் மகிழ்ச்சியடைகிறார்.

(iii) **'சுவிசேஷம்', 'பிரசங்கித்தல் . . .' என்ற கோணத்திலும்**

(iv) **'சிந்தை', 'சிந்திப்பது', 'மனம் . . .' என்ற கோணத்திலும்**

(v) **'பிலிப்பியருக்கு அன்புக்கடிதம்' என்ற கோணத்திலும் நீங்கள் ஆராயுங்கள்.**

(vi) **'வருகைக்கு ஆயத்தப்படுத்தும் நூல்'**

1:5 'கிறிஸ்துவின் நாள் பரியந்தம்' என்று வரும் வாக்கியம் 1:3–6 வரை உள்ளது. 1:7–8 என்பவையும் இதற்குத் தொடர்புடையன. இவற்றை ஆராய்க.

1:9–11 பவுலின் விண்ணப்பம் இப்பகுதியில் உள்ளது. பிலிப்பியர் (நாமும்) கிறிஸ்துவின் நாளுக்கென்று துப்புரவானவர்களும் இடறலற்றவர்களுமாயிருக்க வேண்டும் என்று பவுல் (பவுலின் வாயிலாக தேவன்) விரும்புவதை நாம் காண்கிறோம். நாம் இவ்வாறு இருப்போமாக.

2:14–16 கிறிஸ்துவின் நாளில் காணப்படும்படி நாம் எப்படியிருக்க வேண்டும் என்று பவுல் (தேவன்) விரும்புகிறார்?

3:20–21 நமது குடியிருப்பு, நம்பிக்கை, வருங்கால மகிமையை இப்பகுதி கூறுகிறது.

4:3 ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்ட பெயர்களில் சில இவ்வசனத்தில் உண்டு. ஏன் அவர்களின் பெயர்கள் ஜீவபுத்தகத்தில் எழுதப்பட்டுள்ளன? அவர்கள் சுவிசேஷ ஊழியத்தில் மிகவும் பிரயாசப்பட்டவர்கள். நீங்கள் எப்படி? வெளி.20:15; 21:27 காண்க.

4:5 கர்த்தர் சமீபமாயிருக்கிறார் (சந்தோஷமாயிருங்கள், சாந்த குணத்துடனிருங்கள் – வ.4–5).

4:4–9ஐ நீங்கள் தியானியுங்கள்.

**தற்பரிசோதனை:** அ) கர்த்தருடைய நாளைச் சந்திக்க நீர் ஆயத்தமா?

ஆ)உமது குடும்பத்தினர் ஆயத்தமா?

இ) கர்த்தரின் முதல் வருகையைக் குறித்தும் கேள்விப்படாத மக்களுக்கு நற்செய்தி சொல்வதில் உமது பங்கு என்ன?

**செயல்பட :** 1) அ) நீர் ஆயத்தமாவீராக.

ஆ) உமது குடும்பத்தை ஆயத்தப்படுத்துவீராக.

இ) உம்மாலானவரை ஆத்தும ஆதாயம் செய்வீராக.

ஈ) நற்செய்திப் பணியாளரை (மிஷனரிகளை) அனுப்பும் நிறுவனங்களுக்கு உதவிசெய்வீராக.

2) பிலிப்பியர் நூலிலுள்ள கட்டளைகள் யாவற்றையும் எழுதி, தியானித்து, தற்பரிசோதனைசெய்து, நம்மையே திருத்திக்கொள்ளலாம்.

**ஜெபிக்க:** மேலேயுள்ள குறிப்புகளுக்காக ஜெபியுங்கள். மத்.9:36–38; 1 தீமோ.2:1–4; ரோம.10:1; சங்.122:6; சக.10:1; லூக்.21:36; மத்.5:44 என்ற வசனங்களிலுள்ள குறிப்புக்களுக்காக ஜெபியுங்கள்.

# 7. வாழ்க்கை வரலாறுகளைத் தியானிக்கும் முறை

வேதத்திலுள்ள ஒரு நபரின் வாழ்க்கையைப் படித்து அவருடைய நற்செயல்கள், தவறுகள், அவர் பயன்படுத்திய சொற்கள், அவருடைய ஜெபங்கள், அவருடைய உலகப் பிரகாரமான, ஆவிக்குரிய அனுபவங்கள் முதலியவற்றை ஆராயலாம். அவரைப்பற்றி வேதத்தில் குறிப்பிடப்பட்ட எல்லாப் பகுதிகளையும் ஆராயவேண்டும். அவ்வப்போது அவருடைய வாழ்க்கையையும் நம் வாழ்க்கையையும் ஒப்பிட்டுப் பார்க்கவேண்டும்.

**எடுத்துக்காட்டு 1**

**ஏனோக்கு**

ஆதி.5:18–24; எபி.11:5; யூதா 14, 15 பகுதிகளில் ஏனோக்கைப்பற்றி எழுதுப்பட்டுள்ளது. அவற்றைத் தியானியுங்கள். பின்னர் கீழே எழுதப் பட்டவற்றை வாசியுங்கள்.

ஏனோக்கு மனிதகுலத்தின் ஏழாம் தலைமுறையில் வந்தவர்.

| | பிறக்கும்போது தந்தையின் வயது |
|---|---|
| சேத் (ஆதாமின் மகன்) | 130 |
| ஏனோஸ் | 105 |
| கேனான் | 90 |
| மகாலாலெயேல் | 70 |
| யாரேத் | 65 |
| ஏனோக்கு | 162 |
| | **622** |

ஆதி.5:3–18ஐப் பயன்படுத்தி இந்தப் பட்டியல் தயாரிக்கப்பட்டுள்ளது. ஏனோக்கு பிறந்தபோது ஆதாமுக்கு 622 வயது என்று இதிலிருந்து காண்கிறோம். ஆதாம் 930 ஆண்டுகள் உயிரோடிருந்ததால், ஏனோக்கின் 308 வயதுவரை, அதாவது ஏனோக்கு தேவனோடு சஞ்சரிக்கும் 243 ஆண்டுகள் ஆதாம் உயிருடனிருந்தார். இதற்கு முன் ஆதாமும் ஏவாளும் சில காலம் தேவனுடன் சஞ்சரித்து, பின்னர் அந்த மாபெரும் ஆசீர்வாதமான அனுப வத்தை இழந்துபோனார்கள்.

ஏனோக்கு மரணமடையாமல், தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்டார். கர்த்தருடைய இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்படுவதற்காக நாம் காத்திருக்கிறோம். கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சீக்கிரமாக வருகிறார்.

ஆகவே, எடுத்துக்கொள்ளப்பட்ட ஏனோக்கின் குணங்கள் நமக்கும் இருக்கின்றனவா என்று கவனித்து. ஏனோக்கைப் பின்பற்றுவோமாக.

**மனந்திரும்பினார்:** தனது 65 வயதுவரை ஏனோக்கு தேவனுடன் சஞ்சரிக்கவில்லை என்பதை ஆதி.5:21–23இல் காணலாம். பிறப்பிலிருந்து அல்ல, மறுபடியும் பிறந்த பின்பே ஒருவர் தேவனோடு சஞ்சரிக்க முடியும். தனது மகனான மெத்தூசலா பிறந்த ஆண்டில் ஏனோக்கு தேவனுடன் சஞ்சரிக்கத் தொடங்கினார்.

**திருமணமானவர்:** மெத்தூசலாவும் பிற குழந்தைகளும் அவருக்குப் பிறந்தனர். முதன்முதலாக தேவனால் எடுத்துக்கொள்ளப்பட்ட மனிதர் திருமணமாகாதவர் அல்ல, திருமணமாகி குடும்ப வாழ்க்கையில் ஈடுபட்டவர் என்பதைக் கவனிக்க. திருமணமானவர்கள் குடும்பத்தோடு வாழ்ந்து கொண்டே தேவனுடன் சஞ்சரிக்கமுடியும், பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப்பட முடியும் என்பதற்கு ஏனோக்கு சான்றாகத் திகழ்கிறார்.

**குடும்பத்தைக் கவனித்தார்:** 'தேவனோடு சஞ்சரித்துக்கொண்டிருந்து, குமாரரையும் குமாரத்திகளையும் பெற்றான்,' என்று எழுதியிருப்பது (ஆதி.5:22) வியப்பைத் தருகிறது. தேவனோடு சஞ்சரித்தபோது தனது மனைவியுடனும் நல்ல உறவில், சமாதானத்தோடும் மகிழ்ச்சியோடும் இருந்தார் என்பது இதிலிருந்து தெரிகிறது. அதாவது, தனது குடும்பத்தை நன்கு கவனித்துவந்தார். தனது குடும்பத்தைக் கவனிக்காதவர் தேவனுக் குகந்தவர் அல்ல (1 தீமோ.5:8). உமது குடும்ப வாழ்க்கை எப்படியுள்ளது?

**தேவனோடு சஞ்சரித்தார்: (Walked with God)** தேவனுடன் சஞ்சரிப்பது என்றால் என்ன? தேவனுடன் தொடர்ந்து நெருங்கிய தொடர்புகொண் டிருப்பதே தேவனுடன் சஞ்சரிப்பதாகும். பாவத்தில் இருப்பவர்கள் தேவனுடன் சஞ்சரிக்க முடியாது. பாவத்தை விட்டு மனந்திரும்பியவர்களே தேவனுடன் சஞ்சரிக்க முடியும்.

நீர் தேவனுடன் சஞ்சரிக்கிறீரா? பாவத்தைவிட்டு மனந்திரும்பிய அனுபவம் உமக்கு உண்டா? இல்லையெனில் அதிகாரம் 8இல் இரட்சிப்பு என்ற எடுத்துக்காட்டு முழுவதையும் படித்து, பின்பற்றி, மனந்திரும்புமாறு கேட்டுக்கொள்கிறேன் (பக்கங்கள் 74–81).

**சஞ்சரிப்பது என்றால் ஒருமனப்படுதல்:**

இருவர் ஒருமனப்படாவிட்டால் சேர்ந்து சஞ்சரிக்கமுடியாது (ஆமோஸ் 3:3). எனவே சஞ்சரிப்பது என்றால் ஒத்த கருத்துக்களுடையவர்களாக இருக்கவேண்டும்.

**1. கீழ்ப்படிதல்:** தேவனுக்குக் கீழ்ப்படிகிறவர்களே அவருடன் ஒருமனப்பட முடியும். தேவனுடைய வார்த்தையை முழுமனதோடு ஏற்றுக்கொண்டு அதற்குக் கீழ்ப்படியவேண்டும் (சங்.119:1).

**2. தேவனுடைய சத்தத்தைக் கேட்டல்:** தேவனுடன் ஏனோக்கு சஞ்சரித்தார் என்றால் அவர் தன்னிடம் பேசுவதை ஏனோக்கு கேட்டிருப்பார். நாம் தேவனுடன் நடக்க வேண்டுமெனில் அவர் பேசுவதைக் கேட்கவேண்டும். தேவன் பல வழிகளில் நம்முடன் பேசக்கூடும். ஆனால், தமது வார்த்தையான வேதத்தின் மூலம்தான் நம்முடன் அடிக்கடி பேசுகிறார். வேதத்தைத் தியானிக்கும்போது அவர் நம்முடன் பேசுவதைக் கேட்க முடியும். இந்த அனுபவம் ஒவ்வொரு கர்த்தருடைய பிள்ளைக்கும் தேவை. இந்த அனுபவம் இல்லாதவர் தேவனுடன் சஞ்சரிக்க முடியாது.

**3. தேவனிடம் பேசுதல்:** தன்னுடன் நடக்கும் தனது நண்பருடன் மனம்விட்டுப் பேசுவதுபோன்று தேவனிடம் பேசுவது அவருடன் நடப்பதற்கு ஒரு சான்று. நமது ஜெபவாழ்க்கையில் துதித்தலும், நன்றிசெலுத்துதலும், (நமக்காகவும், நமது குடும்பத்தினருக்காகவும், பிறருக்காகவும்) விண்ணப்பிப்பதும் ஒவ்வொரு நாளும் இருக்கவேண்டும். ஜெப வேளையிலும் துதிக்கும்போதும் அவருடைய பிரசன்னத்தை உணர முடியும். தேவ பிரசன்னத்துக்காக ஆவலுடன் காத்திருந்து ஜெபியுங்கள்.

**4. ஆவியின் வரம் பெற்றவர்:** ஏனோக்கு தேவனுடன் சஞ்சரித்ததோடு தீர்க்கதரிசனமும் உரைத்துள்ளார். அவர் உரைத்த தீர்க்கதரிசனம் யூதா 14–15இல் உள்ளது. மேலும் அவர் தனது மகனுக்கு மெத்தூசலா என்று பெயரிட்டது ஒரு தீர்க்கதரிசனத்தை உள்ளடக்கியுள்ளது. 'இவன் கால முடிவில் (பெருவெள்ளம்) தாமதிக்காது' என்று அதற்குப் பொருள். மெத்தூசலா மரணமடைந்த ஆண்டில் நோவா காலத்தின் பெருவெள்ளம் வந்தது. ஆவியானவரின் தீர்க்கதரிசன வரம் ஏனோக்கில் செயல்பட்டது. தேவனோடு சஞ்சரிப்பவர்கள் தேவனுடைய ஆவியைப் பெற்றவர்களாயிருப்பது அவசியம். அப்.2:4இன்படி அந்நியமொழிகள் பேசும் அடையாளத்துடன் ஆவியின் அபிஷேகத்தைப் பெற்றுக்கொள்வீராக. தேவனிடம் இரகசியங்களைப் பேசுவதற்கு அந்நியமொழி(அந்நியபாஷை)யில் பேசுவது அவசியமல்லவா (1 கொரி.14:2)? எந்தக் காரணத்தையும் கூறி இந்த அனுபவத்தைத் தள்ளிவிடாதீர்.

**5. தொழுதுகொள்பவர்:** தேவன் விரும்பும்வண்ணம் அவரைத் தொழுதுகொள்பவரே தேவனுடன் சஞ்சரிக்க முடியும். புதிய ஏற்பாட்டு காலத்தில்

தேவனை ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ளவேண்டும் (யோவா.4:24) என்பது கர்த்தரின் கட்டளை. ஆவியைப் பெறாமல் ஆவியோடும் உண்மையோடும் தொழுதுகொள்ள முடியுமா?

**6. பாவத்தை வெறுத்தல்:** ஏனோக்கின் தீர்க்கதரிசனத்தை (யூதா 14–15) வாசித்துப்பார்த்தால் அவர் அவபக்தியையும் பாவத்தையும் வெறுத்தார் என்று காண்கிறோம். நாமும் இவ்வாறு இருப்பது அவசியம்.

**7. விசுவாச வாழ்க்கை:** ஏனோக்கின் விசுவாசத்தை எபி.11:5இல் காண்கிறோம். தேவனுடைய வார்த்தை ஒவ்வொன்றையும் விசுவாசித்தார்.

**8. ஊழியம்:** மக்களைச் சந்தித்து பாவத்தைக் கண்டித்து உணர்த்தினார் ஏனோக்கு. அவர் தீர்க்கதரிசனம் உரைத்ததைக் (யூதா 14–15) கேட்டவர்கள் பாவத்தைக் குறித்து உணர்த்தப்பட்டார்கள். நாம் மக்களைச் சந்தித்து, கர்த்தரைக் குறித்துப் பேசுகிறோமா?

**9. வருகை, நியாயத்தீர்ப்பைக் குறித்த சிந்தை:** கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரண்டாம் வருகையையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து தீர்க்கதரிசனம் உரைத்த முதல் நபர் ஏனோக்கு. கர்த்தரின் வருகையையும் நியாயத்தீர்ப்பையும் குறித்து சிந்தனையுடையவராகவும், அவற்றைக் குறித்து மக்களை எச்சரிப்பவராகவும் வாழ்ந்தார் ஏனோக்கு. நாம் இவற்றைச் செய்கிறோமா?

கிறிஸ்துவின் இரகசிய வருகையில் எடுத்துக்கொள்ளப்பட விரும்புகிறவர்கள் (1 தெச.4:14–17) ஏனோக்கின் இந்தப் பண்புகளுள்ளவர்களாக வாழ வேண்டியது அவசியம். உங்கள் வாழ்க்கையை இவ்விதம் அமைத்துக்கொள்ள நீங்கள் அழைக்கப்படுகிறீர்கள். ‘கேட்கிறதற்குக் காதுள்ளவன் கேட்கக்கடவன்’.

**சிந்தனைக்கு:** ஏனோக்குடன் சஞ்சரித்த தேவன் நம் ஒவ்வொருவருடனும் சஞ்சரிக்க விரும்புகிறார். இன்றைக்கே தேவனுடன் சஞ்சரிப்பதற்கு உம்மை ஒப்புக்கொடுப்பீரா? ஏனோக்கைப் போன்று வாழ்வீரா?

**தியானிக்க:** தேவனுக்கு **முன்பாக** நடத்தல், **தேவனுடன்** சஞ்சரித்தல், தேவனைப் **பின்பற்றுதல்** என்பவற்றைத் தியானிக்கலாம்.

## எடுத்துக்காட்டு 2

### ராகாபின் வாழ்க்கை வரலாறு

ராகாபைக் குறித்து வேதத்தில் எழுதப்பட்டுள்ள பகுதிகளான யோசுவா 2:1–24; 6:20–25; மத்.1:5; எபி.11:31; யாக்.2:25 என்ற பகுதிகளைத்

தியானித்து, குறிப்புக்கள் எழுதுங்கள். பின்னர் கீழேயுள்ள குறிப்புக்களை வாசித்துப்பாருங்கள். ஒவ்வொரு குறிப்பை வாசிக்கும்போதும் அதில் உள்ள வசனத்தை வாசித்து, விளக்கம் சரிதானா என்று சிந்திக்கவும்.

**I. ராகாபின் பண்புகள்**

1. ராகாப் ஒரு வேசியாயிருந்தார். பாவத்தில் ஜீவித்து வந்தார். வேதத்தின்படி எல்லோரும் பாவிகளே (ரோம.3:10–12,23).

2. தேவனைப் பற்றி அறியவேண்டும் என்ற வாஞ்சையும், மெய்த் தேவன் யார் என்று அறிவதற்கான தாகமும் ராகாபிடம் இருந்தது. அற்புதங்களைக் கேள்விப்பட்டு, தியானம் செய்தார் (வ.10). ஆகவே, மெய்யான தேவன் யார் என்பதைக் கண்டுகொண்டார் (வ.11). "தேடுங்கள் அப்பொழுது கண்டடைவீர்கள். . . தேடுகிற எவனும் கண்டுகொள்கிறான்" என்று கர்த்தர் கூறியிருக்கிறார் (லூக்.11:9,10).

3. திறந்த மனதுடன் உண்மையை ஒத்துக்கொண்டார் (வ.11). கண்டடைந்த பலர் ஒத்துக்கொள்வதில்லை. ஆனால், ராகாப் உண்மையை ஒத்துக் கொள்ளக்கூடிய மனநிலை படைத்தவர்.

4. இறுதி அழிவை நினைவில் வைத்திருந்து அதற்குத் தப்புவதற்கு வாஞ்சித்தார் (வ.9,13). அநேகர் மரணத்தையும் அதற்குப் பின்னான வாழ்க்கையையும் சிந்திப்பதும், அவற்றிற்காகத் தங்கள் வாழ்க்கையைச் சரி செய்துகொள்வதும் இல்லை.

5. தேவன் கூறியது நடக்கும் என்று தேவனையும் அவருடைய வாக்கையும் விசுவாசித்தார் (வ.9,11). அநேகர் தேவனுடைய வார்த்தைகளை விசுவாசிப்பது இல்லை.

6. பாவத்தையும் பாவிகளின் நட்பையும் தள்ளிவிட்டு, தேவ மக்களோடு இணையத் தீர்மானித்தார். இதற்காகத் தன் உயிரையே பணயம் வைத்து, தேவ மக்களுக்கு இடமளித்தார். அவர்களைப் பாதுகாப்பதற்காகத் திட்டம் தீட்டினார். தேவனுடைய மக்களாகிய இரண்டு வேவுகாரருக்கும் இடமளித்து ஒளித்து வைத்ததை எரிகோவின் ராஜா அறிந்தால் ராகாபும் ராகாபின் வீட்டாரும் சித்திரவதை செய்யப்பட்டு, கொலை செய்யப்பட்டிருப்பார்கள்.

7. தேவன் தன்னைப் பாதுகாப்பார் என்ற விசுவாசத்தினாலே வேவு காரரைச் சமாதானத்தோடே ஏற்றுக்கொண்டு கீழ்ப்படியாதவர்களோடே சேதமாகாதிருந்தார் (எபி.11:31). நீதியுள்ளவளாக்கப்பட்டார் (யாக்.2:25).

8. தன்னுடைய ஜீவனுக்காகவும் தன் குடும்பத்தாரின் ஜீவன்களுக்காகவும் வேண்டிக்கொண்டார் (வ.12,13). அடையாளம் கேட்டார் (வ.13). இரட்சிப்புக்காக ஜெபிக்கவேண்டியதின் அவசியத்தை இதிலிருந்து தெரிந்து கொள்கிறோம்.

9. ஜீவனுக்கு ஈடாக ஜீவன் (வ.14). ஆம், நாம் நித்திய ஜீவனை அடையும் படிக்கு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்து தமது ஜீவனைக் கொடுத்தார்.

10. அடையாளமாகச் சிவப்பு நூல் கயிறு கட்டி வைக்கப்பட்டது (வ.17). இந்தச் சிவப்பு நூல் கயிறு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவின் இரத்தத்தைக் குறிக்கிறது என்று எடுத்துக்கொள்ளலாம். ராகாப் விசுவாசத்தோடே கீழ்ப் படிந்து அந்தக் கயிற்றை ஜன்னலில் கட்டி வைத்தார். தேவன் தம்மிடத்தில் வருகிறவர்களைக் கைவிடுகிறவர் அல்ல. ஆகவே, எரிகோவின் அலங்கம் இடிந்து விழுந்தபோது, ராகாபின் வீடு அலங்கத்தின்மீது இருந்தபோதிலும் சேதமடையவில்லை (யோசு.2:15; 6:20, 23) என்று அறிகிறோம். தேவன் செய்த அற்புதம் இது.

11. பின்பு, ராகாப் இஸ்ரவேலரின் நடுவிலே குடியிருந்தார் (யோசு.6:25). ஒரு ஓரத்திலே இருந்துகொண்டு சமயம் கிடைக்கும்போது ஓடிவிடவேண் டும், தன் இனத்தாரோடே சேர்ந்துகொள்ளவேண்டும் என்ற எண்ணமே இல்லாமல் இஸ்ரவேலரின் நடுவே குடியிருந்தார். இரட்சிக்கப்பட்டவர்கள் பழைய நட்புகளை விட்டுவிட்டு, தேவனுடைய பிள்ளைகளோடு நல்லவிதமான ஐக்கியம்கொள்ளவேண்டும் என்பதை வாழ்க்கையில் காண்பித்தார்.

12. ராகாப் தன்னுடைய பழைய பாவ வாழ்க்கையை விட்டுத் திரும்பினார். ஒரு பிரபுவைத் திருமணம் செய்துகொண்டு குடும்ப வாழ்க்கை நடத்தினார் (மத்.1:5). கர்த்தரை ஏற்றுக்கொள்பவர்கள் பழைய பாவ வாழ்க்கையை விட்டுத் திரும்பவேண்டும் என்பதை இது அறிவுறுத்துகிறது.

**II. ராகாப் பெற்ற ஆசீர்வாதங்கள்**

1. தன் ஜீவனையும் தன் குடும்பத்தாரின் ஜீவனையும் காத்துக்கொள்ள முடிந்தது
2. தேவ மக்களுடன் ஐக்கியம்
3. பரிசுத்த வாழ்க்கை
4. விசுவாசிகளின் பட்டியலில் இடம் (எபி.11:31)
5. நீதிமான்களின் பட்டியலில் இடம் (யாக்.2:25)
6. கர்த்தராகிய இயேசுவின் வம்சத்தில் ஒரு தாயாக விளங்கும் பேறு (மத்.1:5).

**III. நாம் தேவனைச் சேர்ந்துகொண்டால் நமக்குக் கிடைக்கும் ஆசீர்வாதங்கள்**

________________________________________________________

________________________________________________________

(மாற்கு 3:35; லூக்.8:21 வசனங்களை வாசித்து, கோடிட்ட இடத்தை நிரப்புங்கள்).

**IV கடைசியாக, ஓர் எச்சரிக்கை:**

இராஜ்யத்தின் புத்திரர் அழைப்பை அசட்டைபண்ணினால், ஆயக்காரரும் வேசிகளும் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிப்பார்கள். இராஜ்யத்தின் புத்திரரோ புறம்பான இருளில் தள்ளப்படுவார்கள் (மத்.21:31, மத்.8;12).

**மனிதனின் குணங்களில் மாற்றம்**

சிலருடைய குணநலன்கள் படிப்படியாக மாறும் தன்மையுடையவை. எவ் விதம் மாறுகின்றன என்பதைத் தியானிப்பது மிகவும் சுவையுள்ளதாக இருக்கும்.

இதற்கான எடுத்துக்காட்டுகளை அதிகாரம் 9இல் 'நபர்களை ஒப்பிடுதல்' பத்தியில் காண்க. பக்கங்கள் 87,88.

**பாத்திரங்களை ஒப்பிட்டுத் தியானித்தல்**

வேதத்திலுள்ள நபர்களை ஒருவருக்கொருவர் ஒப்பிட்டும் தியானிக்கலாம். யூதாசின் வீழ்ச்சியையும் பேதுருவின் மறுதலிப்பையும் இருவரின் முடிவையும் ஒப்பிட்டுப்பாருங்கள். பவுலையும் பேதுருவையும் ஒப்பிடலாம்.

**பாத்திரங்களின் பார்வையில் தியானித்தல்**

அப்.8:5–24 பகுதியை 'ஒரு மாய வித்தைக்காரனின் கதை,' என்று கதை வடிவிலும் நாடக வடிவிலும் எழுதிப்பாருங்கள். 'நான் மனந்திரும்பிய மாயவித்தைக்காரன்,' என்று சீமோன் கூறுவது போன்றும் இப்பகுதியை எழுதுங்கள். இவ்விதங்களிலும் தியானிக்கலாம்.

# 8. கருத்துக்களைத் தியானிக்கும் முறை
(Meditation of topics)

வேதத்திலுள்ள கருத்து ஒன்றைத் தெரிந்துகொண்டு அதைத் தியானிப்பது இந்த முறையாகும். அரைகுறையாக கருத்துக்களை (உபதேசங்களை) ஆராய்வதின் விளைவாக, தவறான கொள்கைகளும் உபதேசங்களும் பெருகியுள்ளன. எனவே, முறையான, சரியான வகையில் வேதத்தின் உபதேசங்களைத் தியானிப்பது மிகவும் தேவையானதாகும்.

**எடுத்துக்காட்டுக்கள்:** வேதத்திலுள்ள கட்டளைகள், தேவன் தரிசனமான பகுதிகள், தேவனுடைய வாக்குத்தத்தங்கள், தேவனுடைய ஆசீர்வாதங்கள், மோசே செய்த அற்புதங்கள், தேவ தூதர்கள், தேவனுடைய இராஜ்யம், பலிகள் எவ்விதம் சிலுவையைக் குறிக்கின்றன, வேதத்திலுள்ள ஜெபங்கள், இரட்சிப்பு, ஞானஸ்நானம், ஆவியானவரின் அபிஷேகம், வரங்கள், கர்த்தரின் இரகசிய வருகை, ஆயிரம் வருட அரசாட்சி . . .

**கருத்துக்களைத் தியானிக்கும் முறை**

வேதத்திலுள்ள கருத்துக்கள் கணக்கற்றவை; தியானிக்க இனிமையானவை. முதலாவது, பொருத்தமான, பயனுள்ள ஒரு தலைப்பைத் தெரிந்து கொள்ளவேண்டும். கருத்துக்கள் முறையில் தியானிக்கும்போது, நமது சொந்தக் கருத்துக்களைத் தள்ளிவிடவேண்டும். அக்கருத்தில் வரும் முக்கிய சொற்களையும் அவற்றைச் சார்ந்த சொற்களையும் (எடுத்துக்காட்டு: அன்பு, பாசம், சிநேகம், நேசம்) பரிசுத்த வேதாகம ஒத்தவாக்கிய விளக்கவுரையில் **(Concordance)** கண்டு அக்கருத்தை ஒட்டிய வேதவசனங்கள் யாவற்றையும் படித்துப் பார்க்கவேண்டும். ஒத்தவாக்கிய வேதாகமம், கற்பிக்கும் வேதாகமம் **(Study Bible)** ஆகியவற்றினின்றும் ஒத்தவாக்கியங்களைக் கண்டுபிடித்து ஆராயலாம். அத்தியாயம் 2இல் உள்ள வழிமுறைகளைப் பின்பற்றித் தியானிக்கலாம். தேவன் அக்கருத்தைப் பற்றிக் கூறுவதைத் திறந்த மனதுடன் ஏற்றுக்கொள்ளவேண்டும். நமது ஆராய்ச்சியில் நாம் புரிந்துகொண்டதற்கு ஏற்புடையதாக இல்லாத ஒரு வசனம் வேதத்தில் இருந்தாலும் நாம் புரிந்துகொண்டது தவறு. அந்த ஒரு வசனமும் பொருந்தினால்தான் நமது கருத்து சரியானது. எனவே, ஒரு கருத்தைப்

பற்றிய அனைத்து வசனங்களையும், பகுதிகளையும், உவமைகளையும் தியானித்து, சரியான விளக்கத்தைப் பெற்றுக்கொள்ளவேண்டும்.

கற்றுக்கொண்ட கருத்து அல்லது உபதேசம் நமது பாரம்பரியத்திற்கு எதிரானதாக இருந்தால் நமது பாரம்பரியப் பழக்கத்தை மாற்றவேண்டும். பாரம்பரியத்திற்கேற்ப கருத்தை மாற்றுதல் தவறு (மாற்.7:6–13).

தமிழில் பரிசுத்த வேதாகம ஒத்துவாக்கிய விளக்கவுரை உள்ளது. ஆங்கிலத்தில் Young's Analytical Concordance, Strong's Analytical Concordance, Cruden's Concordance போன்றவை உள்ளன. வாங்க விரும்புவோர் Word of Christ, No.100/3, Nirmala Apartments, Medavakkam Tank Road, Kellys, Chennai - 600 010.என்ற முகவரிக்குத் தொடர்பு கொள்ளுங்கள்.

**சொற்களைத் தியானிக்கும் முறை** இதோடு தொடர்புடையது.

ஒரு குறிப்பிட்ட சொல்லை எடுத்துக்கொண்டு அது வேதத்தில்வரும் இடங்கள் யாவற்றையும் ஒத்தவாக்கிய விளக்கவுரை மூலம் கண்டுபிடித்து அதன் மூலம் கிடைக்கும் பொருளைத் தியானிப்பது. இது கிட்டத்தட்ட கருத்துக்கள் முறையேயாகும். ஒரு சொல்லை எடுக்கும்போது அதைப் போன்ற பொருள்கொண்ட பிற சொற்களையும் கவனிக்கவேண்டும். (எடுத்துக்காட்டு: சந்தோஷம், மகிழ்ச்சி, களிப்பு, களிகூறுதல், ஆனந்தம்).

**எடுத்துக்காட்டு 1: இரட்சிப்பு** என்ற கருத்தைத் தியானிப்போம்

**I. இரட்சிப்பு வேதத்தில் எவ்விதமெல்லாம் கூறப்பட்டுள்ளது?**

மனந்திரும்புதலும் பாவமன்னிப்பும் (லூக்.24:47)
பாவமன்னிப்பாகிய மீட்பு (எபே.1:7)
மறுபடியும் பிறத்தல் (யோவா.3:3,7)
தேவனால் பிறத்தல் (யோவா.1:13)
மனந்திரும்புதல் (மத்.4:17, அப்.17:30)
நீதிமானாக்கப்படுதல் (லூக்.18:14)
சீஷனாதல் (மத்.28:19)
இயேசு கிறிஸ்துவை ஏற்றுக்கொள்ளுதல், தேவனுடைய பிள்ளையாதல் (யோவா.1:12)
நித்திய ஜீவனை உடையவனாதல் (யோவா.3:16, 1 யோவா.5:11,12)
விசுவாசியாதல் (எபே.1:13)
ஜீவபுஸ்தகத்தில் எழுதப்படுதல் (வெளி.20:15)

பிராணனை அழிவுக்கு விலக்கி மீட்டல் (சங்.103:4)

வருங்கோபத்துக்குத் தப்பித்துக்கொள்ள வகை (மத்.3:7)

கிறிஸ்துவைச் சேருதல், இஸ்ரவேலுடைய காணியாட்சிக்கு உள்ளாதல், நம்பிக்கையுள்ளவர்களாதல், இவ்வுலகத்தில் தேவனுள்ளவர்களாதல், தேவனுக்குச் சமீபமாதல் (எபே.2:12,13)

தேவனுக்கு ஒப்புரவாதல் (எபே.2:16)

கிறிஸ்துவுக்கு உள்ளாதல், புது சிருஷ்டியாதல் (2 கொரி.5:17)

பிதாவினிடத்தில் சேரும் சிலாக்கியம் பெறுதல் (எபே.2:18)

பரிசுத்தவான்களோடே ஒரே நகரத்தாரும், தேவனுடைய வீட்டாருமாதல் (எபே.2:19)

(பாவங்கள், அக்கிரமங்களிலிருந்து) கிறிஸ்துவுடனே கூட உயிர்ப்பிக்கப் படுதல் (எபே.2:1, 5)

புத்தி தெளிதல் (லூக்.15:17)

நியாயப்பிரமாணத்தின் சாபத்துக்கு நீங்கலாக்கி மீட்கப்படுதல் (கலா.3:13)

.......................................................................

.......................................................................

**II. எவை இரட்சிப்பு அல்ல?**

தேவாலயத்துக்குச் செல்லுதல் (லூக்.18:10)

தேவனை ஸ்தோத்தரித்தல் (லூக்.18:11)

பறிகாரர், அநியாயக்காரர், விபசாரக்காரராய் இல்லாதிருத்தல் (லூக்.18:11)

கற்பனைகளையெல்லாம் சிறுவயது முதல் கைக்கொள்ளுதல் (லூக்.18:20,21)

நியாயப்பிரமாணத்திற்குரிய நீதியின்படி குற்றஞ்சாட்டப்படாதவனாய் இருத்தல் (பிலி.3:6)

நியாயப்பிரமாணத்தினாலுண்டாகும் சுயநீதியை உடையவனாய் இருத்தல் (பிலி.3:9)

உபவாசித்தல் (லூக்.18:12)

சம்பாத்தியத்திலெல்லாம் தசமபாகம் செலுத்துதல் (லூக்.18:12)

சபையிலே அதிகாரியாயிருத்தல் (யோவா.3:1)

இயேசு தேவனிடத்திலிருந்து வந்த போதகர் என்று அறிக்கையிடல் (யோவா.3:2)

சபைப் போதகனாயிருத்தல் (யோவா.3:10)

தேவ பக்தியுள்ளவனாய் இருத்தல் (அப்.10:2)

வீட்டாரனைவரோடும் தேவனுக்குப் பயந்தவனாய் இருத்தல் (அப்.10:2)

ஜனங்களுக்கு மிகுந்த தருமங்களைச் செய்தல் (அப்.10:2)
எப்பொழுதும் தேவனை நோக்கி ஜெபம்பண்ணிக்கொண்டிருத்தல் (அப்.10:2)
சடங்காச்சாரங்களை நிறைவேற்றுதல் (பிலி.3:5)
பக்தி வைராக்கியம் உடையவனாயிருத்தல் (பிலி.3:6)
மனந்திரும்பாமல் ஞானஸ்நானம் எடுத்தல் (மாற்.16:16)

.....................................................................

தேவாலயம் செல்லுதல், கற்பனைகளைக் கைக்கொள்ளுதல் முதலியன தேவைதான். ஆனால் அவை இரட்சிப்பு அல்ல.

### III. இரட்சிப்பு என்றால் என்ன?

மத்.4:17; நீதி.28:13; 1 யோவா.1:9; நீதி.23:26; வெளி.3:20; யோவா.3:16 என்ற வசனங்களை வாசிக்கவும்.

மனந்திரும்பி (பழைய பாவங்களுக்காக வருந்தி, பாவ வாழ்க்கையை வெறுத்து, கர்த்தரின் ஒத்தாசையால் பரிசுத்த வாழ்க்கை மேற்கொள்ளத் தீர்மானித்து), பாவங்களை அறிக்கையிட்டு, கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவை இருதயத்தில் வருமாறு அழைக்கவேண்டும். அவர் நம்முடைய வாழ்க்கையைச் சரியாக நடத்துவார் என்று நம்பி அவரிடம் நம்முடைய வாழ்க்கையை ஒப்படைக்கவேண்டும். அவருடைய இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கிறது என்றும் உயிர்த்தெழுந்த கர்த்தர் நமது இருதயத்தில் வந்தார் என்றும் விசுவாசிக்கவேண்டும். விசுவாசத்தினாலே தேவனுடைய ஈவாகிய இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ளவேண்டும். வாயினாலே கிறிஸ்துவை அறிக்கையிடவேண்டும் (ரோம.10:9,10).

பாவத்துக்காகத் துக்கப்படுதல் தேவைதான். ஆனால், தேவ ஒத்தாசை யால் பாவங்களை இனி செய்யமாட்டேன் என்று உறுதியுடன் மாறுவதே மனந்திரும்புதல் ஆகும். அத்துடன் கர்த்தரின் மரணத்தையும் உயிர்த் தெழுதலையும் விசுவாசித்து அறிக்கையிடும்போது இரட்சிப்பு கிடைக்கிறது.

### IV. மூன்று காலங்களிலும் இரட்சிப்பு:–

1. கடந்த காலப் பாவங்களுக்கான தண்டனையினின்று விடுதலை (ரோம.5:18; 6:23; 1 யோவா.1:7,9)
2. நிகழ் காலத்தில் பாவத்தின் வல்லமையினின்று விடுதலை (ரோம.6:14)
3. வருங்காலத்தில் பாவத்தின் பிரசன்னத்தினின்று விடுதலை (எபி.9:28; வெளி.21:4, 24, 27)

### V. இரட்சிப்பு தேவையா?

1. மனந்திரும்ப வேண்டும் என்பது தேவ கட்டளை (அப்.17:30)

2. இரட்சிக்கப்படாதவன் தேவனுடைய இராஜ்யத்தைக் காணவே முடியாது (யோவா.3:3)
3. இரட்சிப்பைக் குறித்துக் கவலையற்றிருந்தால் தண்டனை நிச்சயம் (எபி.2:4)
4. இரட்சிக்கப்படாதவனின் முடிவு அக்கினிக்கடல் (வெளி.20:15)

## VI. யாருக்கு இரட்சிப்பு தேவை?

'எல்லா மனிதருக்கும் ஆக்கினைக்கு ஏதுவான தீர்ப்பு உண்டானது' (ரோம.5:18) என்றும், 'நீதிமான் ஒருவனும் இல்லை; உணர்வுள்ளவன் இல்லை: தேவனைத் தேடுகிறவன் இல்லை; எல்லாரும் வழிதப்பி ஏகமாய்க் கெட்டுப்போனார்கள், நன்மை செய்கிறவன் இல்லை; ஒருவனாகிலும் இல்லை' (ரோம.3:10–12) என்றும், 'எல்லாரும் பாவஞ்செய்து தேவ மகிமை யற்றவர்களானார்கள்' (ரோம.3:23) என்றும், 'நிர்ப்பந்தமான மனுஷன் நான், இந்த மரண சரீரத்தினின்று யார் என்னை விடுதலையாக்குவார்' (ரோம.7:24) என்றும் வேதம் கூறுகிறது.

எனவே, ஒவ்வொருவருக்கும் இரட்சிப்பு தேவையென்று காண்கிறோம்.

## VII. மனிதரின் இரட்சிப்புக்காகத் தேவன் செய்ததென்ன?

தேவன் தம்முடைய ஒரே பேறான குமாரனைத் தந்தருளினார் (யோவா.3:16; 1 யோவா.4:9). நம்முடைய அக்கிரமத்தை இயேசு கிறிஸ்துவின் மேல் விழப்பண்ணினார். இரத்தஞ் சிந்துதலில்லாமல் (பாவ) மன்னிப்பு உண்டாகாது (எபி.9:22). எனவே கர்த்தராகிய இயேசு கிறிஸ்து, தமது இரத்தத்தினாலே பாவ மன்னிப்பாகிய மீட்பை நமக்கு உண்டாக்கி வைத்தார் (எபே.1:7). இயேசு கிறிஸ்துவின் இரத்தம் சகல பாவங்களையும் நீக்கி நம்மைச் சுத்திகரிக்கும் (1 யோவா.1:7). தம்மைத்தாமே பலியிட்டதினாலே (எபி.7:27), தேவ ஆட்டுக்குட்டியாகிய இயேசு கிறிஸ்து, நாம் பாவங்களுக்குச் செத்து நீதிக்குப் பிழைத்திருக்கும்படிக்குத் தமது சரீரத்திலே நம்முடைய பாவங்களைச் சிலுவையின்மேல் சுமந்தார் (1 பேது.2:24). நம்முடைய பாவங்களை நிவிர்த்தி செய்கிற கிருபாதார பலி அவரே (1 யோவா.2:2). பாவம் செய்த நாம் தண்டனை அடையவேண்டும், ஆனால் அவர் நம்மீது அன்பு கூர்ந்தபடியால், நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டு நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டார். நமக்குச் சமாதானத்தை உண்டுபண்ணும் ஆக்கினை அவர்மேல் வந்தது. அவருடைய தழும்புகளால் குணமாகிறோம் (ஏசா.53:5).

இயேசு கிறிஸ்து மரித்து அடக்கம்பண்ணப்பட்டபின், மூன்றாம் நாளில் உயிர்த்தெழுந்தார். இழந்து போனதைத் தேடவும், இரட்சிக்கவும் வந்த இயேசு கிறிஸ்து (லூக்.19:10), "வருத்தப்பட்டுப் பாரஞ்சுமக்கிறவர்களே! நீங்கள் எல்லாரும் என்னிடத்தில் வாருங்கள். நான் உங்களுக்கு இளைப் பாறுதல் தருவேன்" (மத்.11:28) என்று அழைக்கிறார்.

## VIII. இயேசுவே இரட்சிப்பின் வழி

இயேசு "நானே வழியும் சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன், என்னாலே யல்லாமல் ஒருவனும் பிதாவினிடத்தில் வரான்", என்று கூறியிருக்கின்றார் (யோவா.14:6). அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை. நாம் இரட்சிக்கப்படும்படிக்கு வானத்தின் கீழெங்கும், மனுஷருக்குள்ளே அவருடைய நாமமேயல்லாமல் வேறொரு நாமம் கட்டளையிடப்படவும் இல்லை (அப்.4:12).

## IX. எப்பொழுது இரட்சிக்கப்பட வேண்டும்?

இதோ இப்பொழுதே அநுக்கிரக காலம், இப்பொழுதே இரட்சணிய நாள் (2 கொரி.6:2). தாமதிக்கக்கூடாது.

## X. இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நாம் என்ன செய்யவேண்டும்?

சிலுவையில் நமக்காகக் கர்த்தராகிய இயேசு கிறிஸ்து ஆயத்தம்பண்ணி வைத்திருக்கிற இரட்சிப்பைப் பெற்றுக்கொள்ள நாம் எந்தப் பலியையும் செலுத்தவேண்டியதில்லை. தன்னுடைய பாவங்களை மறைக்கிறவன் வாழ்வடையமாட்டான்; அவைகளை அறிக்கைசெய்து விட்டுவிடுகிறவனோ இரக்கம் பெறுவான் (நீதி.28:13) என்று வேதம் கூறுகிறது. எனவே, தேவ னுக்கேற்ற துக்கத்துடனும் முழு இருதயத்துடனும் அவரிடம் திரும்பும்போது (யோவே.2:12,13; 2 கொரி. 7:10), அவர் நம்மை மன்னிக்கிறதற்குத் தயை பெருத்திருக்கிறார் (ஏசா.55:7). நமது இருதயத்தை அவருக்காகத் திறக்கும் போது இயேசு கிறிஸ்து உள்ளே வருகிறார் (நீதி.23:26; வெளி.3:20). இவற்றை விசுவாசிக்கும்போது, இரட்சிப்பு நம் சொந்தமாகிறது.

## XI. இரட்சிக்கப்பட விரும்புகிறவர்கள் செய்ய வேண்டியது என்ன?

நம்முடைய மீறுதல்களினிமித்தம் அவர் காயப்பட்டதையும், நம்முடைய அக்கிரமங்களினிமித்தம் அவர் நொறுக்கப்பட்டதையும், தியானிக்க வேண்டும் (ஏசா.53:5). நம்முடைய தவறான சிந்தனைகளுக்கு நம் தலையில் வரவேண்டிய தண்டனை அவர் தலையில் வந்தது. அவர் தலையில் குட்டினார்கள், முள்ளினால் செய்த கிரீடத்தைத் தலையில் வைத்து, கோலால் அடித்தார்கள். பல இடங்களில் முள் கிழித்ததினால் இரத்தம் வழிந்தது. முகத்தால் அசுத்தமான காரியங்களை நாம் செய்வதற்கு நமக்கு

வரவேண்டிய தண்டனை அவருக்கு வந்தபடியால், அவருடைய கன்னத்தில் அடித்து, தாடிமயிரைப் பிடுங்கி, முகத்தில் துப்பினார்கள். நமது சரீரத்தினால் நாம் செய்யும் பாவங்களுக்கு நமக்குக் கிடைக்கவேண்டிய தண்டனைகள் அவர்மேல் வந்தபடியால், சவுக்கினால் அடிக்கப்பட்டார். கைகளாலும், கால்களாலும் நாம் செய்யும் பாவங்களுக்காக நமக்கு வரவேண்டிய தண்டனையை அவர் கரங்களும் கால்களும் ஆணி கடாவப்பட்டபோது ஏற்றுக்கொண்டன. அசுத்தமான ஆசைகள், பலவித இச்சைகள், பொறாமை, பெருமை, கோபங்கள் முதலியவற்றை நம் இருதயத்தில் நாம் பேணி வைத்திருப்பதற்காக அவருடைய விலாவில் ஈட்டி பாய்ச்சப்பட்டது.

இவற்றைத் தியானித்து, கண்களை மூடி, நினைவிற்கு வரும் ஒவ்வொரு பாவத்தையும் மனதிற்குள்ளாகச் சொல்லி முடிக்கவும். பின்னர், "இயேசுவே, என் பாவங்கள் யாவற்றையும் மன்னியும்" என்று கூறவும்.

"இயேசுவே, என் பாவங்கள் யாவற்றையும் மன்னியும்" என்று கூறி முடித்த பின்னர், கீழ்க்கண்ட ஜெபத்தை உள்ளத்தில் உணர்ந்து வாயைத்திறந்து சொல்லவும்.

**ஜெபம்:–** "கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவே, நான் ஒரு பாவி என்று ஒப்புக் கொள்கிறேன். பாவியாகிய என்மேல் கிருபையாயிரும். என்னுடைய பாவங் களுக்காக நான் அனுபவிக்கவேண்டிய தண்டனைகளை நீர் சிலுவையிலே அனுபவித்துவிட்டீர் என்று நம்புகிறேன். நீர் உயிரோடு எழுந்தீர் என்றும் நம்புகிறேன். எனவே, நீர் சிந்தின இரத்தத்தாலே என் பாவம் நீங்க என்னை முற்றிலும் கழுவும். என்னை இப்பொழுதே மன்னியும். மேலும், இந்த நிமிஷத்திலே என்னுடைய இருதயத்தை உமக்காகத் திறக்கிறேன். இயேசுவே என் இருதயத்திற்குள் இப்பொழுதே வாரும். இனி, என் விருப்பப் படிஅல்ல, உம்முடைய விருப்பப்படி என் வாழ்க்கையை நீரே ஏற்று நடத்தும். என்னை முற்றிலும் ஒப்படைக்கிறேன். என்னை ஏற்றுக்கொள்ளும். என்னை ஏற்றுக்கொள்வதற்காகவும், என் இருதயத்தில் வருகிறதற்காகவும், என் பாவங்களை மன்னிக்கிறதற்காகவும் உமக்கு நன்றி. இயேசு என்னும் நாமத்தில் வேண்டிக்கொள்கிறேன். ஆமென்."

XII. **இரட்சிப்பின் நிச்சயம்**

1) "இதோ வாசற்படியிலே நின்று தட்டுகிறேன். ஒருவன் என் சத்தத்தைக் கேட்டு, கதவைத் திறந்தால் அவனிடத்தில் நான் பிரவேசித்து, அவனோடே போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்" (வெளி.3:20) என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து கூறுகின்றார்.

இதில், 'அவனோடு போஜனம்பண்ணுவேன், அவனும் என்னோடே போஜனம்பண்ணுவான்', என்பது அவரோடு தொடர்ந்து ஜீவிப்பதைக் குறிக்கிறது. ஆனால் வாசற்படியில் நின்று தட்டும் கர்த்தருக்காகக் கதவைத் திறந்தால், அதாவது, 'என் இருதயத்தைத் திறக்கிறேன், உள்ளே வாரும்' என்று அழைத்தால், பிரவேசிப்பேன் என்று கர்த்தர் சொல்லியிருக்கிறார். இது உடனடியாக நடக்கிறது.

(i) "இந்த நிமிஷத்திலே, என்னுடைய இருதயத்தை உமக்காகத் திறக்கிறேன். இயேசுவே என் இருதயத்திற்குள் இப்பொழுதே வாரும்", என்று ஜெபம் செய்தீர்களா? ________________ (ஆம்).

(ii) அப்படி இருதயத்தைத் திறந்தால் பிரவேசிப்பேன் என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்லியிருக்கிறாரா? ________________ (ஆம்)

(iii) இயேசு கிறிஸ்து பொய் சொல்வாரா? ____________ (சொல்லமாட்டார்)

(iv) அப்படியானால் இயேசு கிறிஸ்து இப்பொழுது எங்கே வந்திருக்கிறார்? ________________________________ (என் உள்ளத்தில் வந்திருக்கிறார்).

(i), (ii), (iii), (iv) கேள்விகளை மீண்டும் இரு முறையேனும் (இயேசு என் உள்ளத்தில் வந்திருக்கிறார் என்று அறியும்வரை) கேட்கவும்.

உங்கள் உணர்ச்சியை நம்பாதிருங்கள். உணர்ச்சி நாளுக்கு நாள் மாறக் கூடியது. ஆனால் 'வானமும் பூமியும் ஒழிந்துபோனாலும் கர்த்தருடைய வார்த்தைகள் ஒழிந்து போகாது' (மத்.24:35). ஆகவே, உங்கள் உணர்ச்சியில் தெரிந்தாலும் தெரியாவிட்டாலும், இயேசுவின் வார்த்தையின்படி அவர் உங்கள் உள்ளத்தில் வந்தது உண்மை. அது மாறாதது.

2. 'அவருடைய நாமத்தின்மேல் விசுவாசமுள்ளவர்களாய் அவரை ஏற்றுக் கொண்டவர்கள் எத்தனை பேர்களோ அத்தனை பேர்களும் தேவனுடைய பிள்ளைகளாகும்படி அவர்களுக்கு அதிகாரம் கொடுத்தார்' (யோவா.1:12) என்று வேதம் கூறுகிறது. யார் நாமத்தில் ஜெபித்தீர்கள்? ____________ (இயேசுவின் நாமத்தில்)

ஆகவே அவர் நாமத்தில் உங்களுக்கு விசுவாசம் உண்டு. கடுகளவு விசுவாசத்தையும் கனப்படுத்துகிறவர் நம் கர்த்தர்.

இயேசுவே என் இருதயத்தில் வாரும் என்று ஏற்றுக்கொண்டீர்களா? ____________________________________ (ஆம் ஏற்றுக்கொண்டேன்)

அப்படி ஏற்றுக்கொண்ட அத்தனை பேரும் யார்?

________________________ (தேவனுடைய பிள்ளைகள்)

அப்படியானால் நீங்கள் யார்? ________________ (நான் தேவனுடைய பிள்ளை)

நீங்கள் தேவனுடைய பிள்ளைகளாக அதிகாரம் பெற்றபடியால் நீங்கள் தேவனுடைய பிள்ளை.

உங்கள் உணர்ச்சியில் தெரிந்தாலும் சரி, தெரியாவிட்டாலும் சரி, வானமும் பூமியும் ஒழிந்தாலும் ஒழியாத தேவனுடைய வார்த்தையின்படி, நீங்கள் தேவனுடைய பிள்ளை.

3. 1 யோவா.1:9 'நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால், பாவங்களை நமக்கு மன்னித்து எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியும் உள்ளவராயிருக்கிறார்' என்று கூறுகிறது.

நம்முடைய பாவங்களை நாம் அறிக்கையிட்டால் எதை மன்னிக்கிறார்? பாவங்களை மன்னிக்கிறார்

பாவங்களை அறிக்கையிடும்போது பல பாவங்களை நாம் மறந்திருப்போம் என்று கர்த்தருக்குத் தெரியும். ஆகவே, பாவங்களை நாம் அறிக்கையிடும் போது, அறிக்கையிட்ட பாவங்களை மட்டும் அல்ல, எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரிப்பதற்கு அவர் உண்மையும் நீதியுமுள்ளவரா யிருக்கிறார். அவர் உண்மையுள்ளவர் என்பது உண்மையானால், அவர் நீதி யுள்ளவர் என்பது உண்மையானால், அவர் எல்லா அநியாயத்தையும் நீக்கி நம்மைச் சுத்திகரித்தது உண்மை. மற்றவர்களுடைய பாவங்களை மன்னிப் பவர்களுக்கும் எந்தப் பாவத்தையும் மறைத்து வைக்காமல், ஞாபகம் வரும் பாவங்கள் யாவற்றையும் இயேசுவிடம் கூறி மன்னிப்பு கேட்பவர்களுக்கும் மட்டுமே இந்த வசனம் சொந்தம் (மத்.6:14, 15; நீதி.28:13).

4. குமாரனை உடையவன் நித்திய ஜீவனை உடையவன் (1 யோவா.5:11,12). ஆகவே, குமாரனாகிய கிறிஸ்து உமது உள்ளத்தில் வந்தவுடன் நித்திய ஜீவனை உடையவராகியிருக்கிறீர்.

இயேசு கிறிஸ்து உம் இருதயத்தில் வந்ததற்காகவும், நீர் தேவனுடைய பிள்ளையாக மாற்றப்பட்டதற்காகவும், உமது எல்லா அநியாயத்தையும் நீக்கி உம்மைக் கர்த்தர் சுத்திகரித்ததற்காகவும், உமக்கு நித்திய ஜீவன் அருளிச் செய்ததற்காகவும் அவருக்கு நன்றிசெலுத்தி, அவரைத் துதிப்பீராக.

**உமக்கு ஆலோசனை:** அனுதினமும் வேதத்தைத் தியானிக்கவும் ஜெபிக்கவும் கவனமாயிருப்பீராக. உமது இடத்தில் நற்செய்திப்பணியில் ஈடுபடுவோரைக் கண்டுபிடித்து அவர்களுடன் சேர்ந்து ஊழியம் செய்வீராக. ஆத்தும ஆதாயம் செய்யும் சபையில் ஐக்கியம் கொள்வீராக.

**எடுத்துக்காட்டு 2: வேதாகமம் எவற்றிற்கு ஒப்பிடப்பட்டுள்ளது? என்ற கருத்தைத் தியானிப்போம்.**

உங்கள் வேதத்தில் இதில் வரும் வசனங்களைப் பார்த்து, கோடிட்ட இடங்களை நிரப்பி, தியானியுங்கள்.

1. உபா.8:3; எரே.15:16; 1 பேது.2:3; எபி.5:12: உணவு, பால், பலமான ஆகாரம் உணவு என்னவெல்லாம் செய்யும்?

(அ) ______

(ஆ) ______

(இ) ______

______

______

______

தேவனுடைய வார்த்தையாகிய ஆவிக்குரிய உணவு என்ன செய்யும்?

______

சரியான உணவு உட்கொள்ளாவிடில் என்னவெல்லாம் நேரிடும்?

______

சரியாக தேவனுடைய வார்த்தையை உட்கொள்ளாவிட்டால் என்ன நேரிடும்? ______

தேவனுடைய வசனமானது பாலைப் போன்று மட்டுமின்றி பலமான ஆகாரத்தைப் போன்றும் (meat) எவ்விதங்களில் பயன் அளிக்கின்றது?

______

______

2. எபே.5:26: 'தண்ணீர்'

தண்ணீரின் குணங்கள் எவை? பயன்கள் எவை?

______

______

இவற்றில் வேதத்தின் குணங்கள் எப்படி வெளியாகின்றன?

______

3. சங்.19:10: 'தேனிலும் தெளிதேனிலும் மதுரமுள்ளது'. இவ்விதமாக

வேதத்தை அனுபவித்திருக்கிறீரா? அவ்வாறு அனுபவிக்க என்ன செய்ய வேண்டும்?

__________________________________________________________

4. சங்.19:10: 'பொன்னிலும் மிகுந்த பசும் பொன்னிலும் விரும்பப்படத்தக்கது' ஏன்? ________________________________________

உம் வாழ்க்கையில் அப்படி இருக்கிறதா? ________________________

அதற்காக ஜெபம் செய்வீராக.

5. சங்.119:105; 2 பேது.1:19; நீதி.6:23: 'பாதைக்கு தீபம், விளக்கு, வெளிச்சம்'. இருட்டில் வழி தெரியாத ஒரு காட்டினூடே நடந்து செல்லும்போது கை விளக்கு (டார்ச் லைட்) எப்படியெல்லாம் பயன்படும்? ________________

உம் வாழ்க்கையில் அவ்விதம் பயன்பெறத்தக்கதாக வேதம் என்ன செய்கிறது? ________________________________________

6. எரே.5:14; 23:29: 'அக்கினி'

அக்கினி பட்சிக்கும், புடமிடும், கழிம்பை நீக்கும். சரியாகப் பயன் படுத்தினால் பெரிதும் உதவும். ஆவிக்குரிய அக்கினி எவற்றைப் பட்சிக்கும்? ____________________________________

எவ்விதம் பயன் தரும்? __________________________________

7. எரே.23:29: 'கன்மலையை நொறுக்கும் சம்மட்டி'

உம் வாழ்க்கையில் நொறுங்காத பகுதிகள் எவை? அவை தேவனுடைய வசனத்தினால் நொறுங்கும்படி விட்டுக்கொடுப்பீராக. மேலும் சம்மட்டியைப் போன்று எவ்விடங்களில் பயன்படுத்தலாம் என்று தியானிப்பீராக.

__________________________________________________________

8. மத்.13:18–23; 1 பேது.1:23: 'விதை, அழிவில்லாத வித்து'

விதையைப் போன்று தேவனுடைய வார்த்தை எவ்விதம் செயல்படுகின்றது?

________________________________________

________________________________________

9. ரோம.1:16: 'இரட்சிப்பு உண்டாக தேவ பெலன்'
உமக்கு இரட்சிப்பின் நிச்சயம் உண்டா? ________________

________________________________________

எபி.2:4ஐத் தியானியுங்கள்.

10. எபே.6:17: 'ஆவியின் பட்டயம்'
பட்டயம் எதற்குப் பயன்படும்? ____________________
வேத வசனத்தைப் பட்டயமாகப் பயன்படுத்தி சோதனைகளையும் பிசாசையும் ஜெபிப்பது எப்படி? ____________________

________________________________________

எடுத்துக்காட்டு: மத்.4:1–11இல் கர்த்தர் வேதத்தைப் பயன்படுத்துதல்

11. எபி.4:12: 'இருபுறமும் கருக்குள்ள பட்டயத்திலும் கருக்கானது'
தேவனுடைய வார்த்தை என்ன செய்வதாக இவ்வசனத்தில் கூறப்பட்டுள்ளது? ____________________

________________________________________

________________________________________

# 9. ஒற்றுமை வேற்றுமைகளைத் தியானித்தல்

வேதத்திலுள்ள ஒரே வகையானவற்றையும் எதிர்மறையானவற்றையும் தியானிப்பதும் சபைகளில் செய்தியளிக்கும்போது பயன்படுத்துவதும் சிறந்த அனுபவமாகும். வேதத்தில் உவமைகள், ஒப்பிடுதல், வேறுபடுத்துதல், உருவகங்கள் போன்ற பல காணப்படுகின்றன. இவற்றையும் கவனமாக தியானிக்கலாம்.

**I. வசனங்கள்:** 'கர்த்தருடைய புத்தகத்திலே தேடி வாசியுங்கள்; இவைகளில் ஒன்றும் குறையாது; இவைகளில் ஒன்றும் ஜோடில்லாதிராது; அவருடைய வாய் இதைச் சொல்லிற்று; அவருடைய ஆவி அவைகளைச் சேர்க்கும்', என்று ஏசா.34:16இல் காண்கிறோம்.

விளக்க வேதாகமங்களை எடுத்துப்பார்த்தால் ஒத்த வாக்கியங்கள் தரப்பட்டிருக்கும். நீங்கள் தெரிந்தெடுக்கும் ஒரு வசனத்திற்கான ஒத்த வாக்கியங்களை வாசித்து ஒப்பிட்டு தியானிக்கலாம்.

**எடுத்துக்காட்டு 1:**

யோவான் எழுதிய நற்செய்தி நூல் 3:3ஐயும் 3:5ஐயும் ஒப்பிட்டுத் தியானிப்போம்.

**யோவா.3:3** *இயேசு அவனுக்குப் பிரதியுத்தரமாக: ஒருவன் மறுபடியும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தைக் காணமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

**யோவா.3:5** *இயேசு பிரதியுத்தரமாக: ஒருவன் ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால் தேவனுடைய ராஜ்யத்தில் பிரவேசிக்கமாட்டான் என்று மெய்யாகவே மெய்யாகவே உனக்குச் சொல்லுகிறேன் என்றார்.*

இந்த இரு வசனங்களிலும் உள்ள கருத்துக்களை கர்த்தராகிய இயேசு கிறிஸ்து 'மெய்யாகவே மெய்யாகவே' என்று கூறி மிகவும் வலியுறுத்திக் கூறி யுள்ளார். இந்த இரு வசனங்களும் தேவனுடைய ராஜ்யத்திற்குச் செல்வதற்கு வழிகாட்டிகளாக அமைகின்றன. மேலும் இவை இரண்டும் **எச்சரிப்பின் வசனங்கள்**. எனவே, இவற்றைக் கவனித்து ஆராய்வது மிகவும் தேவையானது.

3:3இல் **காணமாட்டான்** என்றும் 3:5இல் **பிரவேசிக்கமாட்டான்** என்றும் கூறியுள்ளார். நான் காண்கிற பல கட்டிடங்களுக்குள் நாம் பிரவேசிப்பதில்லை. நமது தெருவில், கிராமத்தில் நாம் அநேக வீடுகளைக் கண்டிருந்தபோதிலும் அவை ஒவ்வொன்றிற்குள்ளும் நாம் பிரவேசித்ததில்லை. எனவே, **காண்பது வேறு, பிரவேசிப்பது வேறு. இரண்டும் ஒன்றல்ல.**

**காண்பதற்கான நிபந்தனை:** 3:3இல் கூறப்பட்டுள்ளது. **மறுபடியும் பிறவாவிட்டால்** தேவனுடைய ராஜ்யத்தைக் **காணமாட்டான்.** ஒருவன் பாவத்தைவிட்டு மனந்திரும்பி கர்த்தராகிய இயேசுவை இரட்சகராக ஏற்றுக்கொள்ளும்போது மறுபடியும் பிறக்கிறான் (யோவா.1:12–13). இதை இரட்சிப்பு என்றும் கூறுகிறோம். இதைப் பெற்றுக்கொள்வதற்கு இந்நூலின் பக்கங்கள் 74 இலிருந்து 81 வரை காண்க.

**பிரவேசிப்பதற்கான நிபந்தனைகள்:** 3:5இல் கூறப்பட்டுள்ளன. **ஜலத்தினாலும் ஆவியினாலும் பிறவாவிட்டால்** தேவனுடைய ராஜ்யத்தில் **பிரவேசிக்கமாட்டான்.**

**ஜலத்தினால் பிறப்பது என்றால் என்ன?**

தண்ணீர் திருமுழுக்கு பெறுதல் 'ஜலத்தினால் பிறத்தல்' என்பது மிகவும் தெளிவாகத் தெரிகிறது அல்லவா? இதுதான் உண்மை. இதை மறைப்பதற்காகப் பலர் பல விளக்கங்களைக் கூறுகின்றனர். உண்மையை ஒத்துக்கொண்டு கீழ்ப்படிகிறவன் பாக்கியவான். ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் விளைவைச் சந்திக்கவேண்டும்.

**ஆவியினால் பிறப்பது என்றால் என்ன?**

இரட்சிக்கப்பட்டு (விசுவாசிகளாகி) தண்ணீர் திருமுழுக்கு பெற்றிருந்தபோதிலும் பரிசுத்த ஆவியின் திருமுழுக்கு பெறாதவர்களை பரிசுத்த ஆவியைப் பெறாதவர்கள் என்று வேதம் தெளிவாகக் கூறுகிறது (அப்.8:12–17; 19:1–6). எனவே, **பரிசுத்த ஆவியானவரின் திருமுழுக்கை** (மத்.3:11), **வேதத்தின்படி** (அப்.2:4) **பெற்றுக்கொள்வதே ஆவியினால் பிறப்பதாகும்.** இதை ஏற்றுக்கொண்டு, கீழ்ப்படிந்து, தாழ்மையுடன் கர்த்தரிடம் கேட்டு, விசுவாசத்துடன் வேதத்தில் கூறியபடி பெற்றுக்கொள்கிறவன் பாக்கியவான். ஏற்றுக்கொள்ளாவிட்டால் அதின் விளைவுகளை அவன் சந்திப்பான்.

**நாம் கற்றுக்கொள்வது**

**காண்கிற யாவரும் பிரவேசிப்பதில்லை. ஆனால் பிரவேசிப்பவர்கள் யாவரும் கண்டும் பிரவேசித்தும் இருக்கின்றனர். எனவே, ஒருவன்**

**தேவனுடைய அரசிற்குள் பிரவேசிக்கவேண்டுமானால் யோவா.3:3ஐயும் யோவா.3:5ஐயும் நிறைவேற்றியே தீரவேண்டும்.**

தேவனுடைய இராஜ்யத்திற்குள் பிரவேசிப்பதே எந்தவொரு கிறிஸ்தவனின் நோக்கமாக இருக்கவேண்டும். இந்த நோக்கமில்லாதவன் உண்மையான கிறிஸ்தவன் அல்ல. இந்த நோக்கம் நிறைவேறவேண்டுமானால் அவன் யாராயிருந்தாலும்

1. மறுபடியும் பிறக்கவேண்டும்

2. தண்ணீரினால் பிறக்கவேண்டும். அதாவது, விசுவாசமுள்ளவனான பின்பு (மறுபடியும் பிறந்த பின்பு) தண்ணீரில் மூழ்கி திருமுழுக்கு (ஞானஸ்நானம்) பெற வேண்டும்.

3. ஆவியினால் பிறக்கவேண்டும். அதாவது, பரிசுத்த ஆவியின் அபிஷேகம் பெற வேண்டும்.

'இவற்றிற்குக் கீழ்ப்படிவீரா இல்லையா?' என்பதுதான் உமது இறுதி முடிவைத் தீர்மானிக்கும். **கீழ்ப்படிவீரா?**

### எடுத்துக்காட்டு 2

வாசற்படியில் நின்று கதவைத் தட்டும் நேசரை உன்.5:2-8இலும் வெளி.3:20இலும் காண்கிறோம். கதவைத் திறப்பதற்குக் காலம் தாழ்த்தியதால் கிடைக்கும் பாடுகளை ஆராயலாம்.

### எடுத்துக்காட்டு 3

யோபு 23:10ஐயும், மல்.3:2-3ஐயும், 1 பேது.1:7ஐயும் சேர்த்துத் தியானிக்கலாம்.

அநேக ஆயிரம் இணைவசனங்கள் வேதத்தில் உண்டு அவற்றைக் கண்டுபிடித்துத் தியானிப்பது சிறந்தது. இவ்வாறு தியானிப்பதிலிருந்து செய்திகள் கொடுப்பது பயனுள்ளதாக இருக்கும்.

**நபர்களை ஒப்பிடுதல்:** இரு நபர்களின் குணநல ஒற்றுமைகளையும் வேற்றுமைகளையும் தியானிப்பது சுவையானது. ஒரே மனிதர் குணம் மாறுவதையும் தியானிக்கலாம்.

**எடுத்துக்காட்டு 1:** சங்கீதம் 1இல் நீதிமானையும் துன்மார்க்கனையும் ஒப்பிட்டிருப்பதை எளிதில் தியானிக்கலாம்.

2. பெந்தெகொஸ்தே நாளுக்குமுன் பேதுரு, பெந்தெகொஸ்தே நாளுக்குப் பின் பேதுரு என்று தியானிக்கலாம். இயேசுவைவிட்டு ஓடிப்போன,

இயேசுவை மூன்றுதரம் மறுதலித்த பேதுரு, பெந்தெகொஸ்தே நாளில் 'இந்த இயேசுவை நீங்கள் பிடித்து, அக்கிரமக்காரருடைய கைகளினாலே சிலுவையில் ஆணியடித்துக் கொலைசெய்தீர்கள்' (அப்.2:23) என்று யூதர்களின் திரள் கூட்டத்தினரைத் தைரியமாகக் குற்றஞ்சாட்டினார். மேலும், தான் இயேசுவை மறுதலித்த இடமான அரண்மனையின் உரிமையாளரான பிரதான ஆசாரியனின் முகத்திற்கு முன்பாக நின்று இதைக்கூறினார் (அப்.4:10). 'அவராலே யன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை'யென்று முழக்கமிட்டார் (அப்.4:12).

3. மறுதலித்த பேதுருவையும், காட்டிக்கொடுத்த யூதாசையும் ஒப்பிடலாம்.

4. பேதுருவிற்கும் பவுலுக்கும் ஒற்றுமை வேற்றுமைகளை ஆராயலாம்.

5. வேதத்தின் பல இடங்களில், குறிப்பாக சங்கீதங்களில் 'நானோ' என்ற சொல் வருகின்ற இடங்களில் வேறுபாடுகளைத் தியானிக்கலாம்.

6. தன்னை தேவன் பாதுகாப்பார் என்ற விசுவாசமின்றி, 'நீ உன்னை என் சகோதரி என்று சொல்?' என்று கூறிய தைரியமற்ற, விசுவாசமற்ற ஆபிரகாம் (ஆதி.12:13), பின்னர் தைரியமாக நான்கு அரசர்களைச் சேர்ந்த படையை எதிர்த்துப் போரிட்டு வெற்றியடைந்ததோடு (ஆதி.14:1–16), விசுவாசத்தில் வல்லவரானார் (ரோம.4:18–21).

7. அரசராவதற்கு முன்பு சவுல் கீழ்ப்படிகிறவராகவும் (1 சாமு.9:3–5), தேவ மனிதரை மதிப்பவராகவும் (1 சாமு.9:7–8), தாழ்மையுள்ளவராகவும் (1 சாமு.9:21) இருந்தார். பிற்காலத்தில் தேவனுக்குக் கீழ்ப்படியாதவராகவும், தேவனுடைய ஆசாரியர்களைத் துணிகரமாகக் கொலைசெய்தவராகவும், பெருமையுள்ளவராகவும் மாறினார். அஞ்சனம் பார்க்கிறவர்களை நாட்டிலிருந்து அகற்றுவதற்கு முயற்சித்த அவரே அஞ்சனம் பார்க்கும்படி சென்றார்.

**III. வேதப்பகுதிகள்:**

வேதத்திலுள்ள சில ஒற்றுமை வேற்றுமைகள் மிகவும் சிறப்பானவை.

**எடுத்துக்காட்டு 1: 'பாக்கியவான்கள்', 'ஐயோ'க்கள்:**

மத்.5:3–11 என்ற பகுதி 'பாக்கிய வசனங்கள்' **(Beatitudes)** என்று அழைக்கப்படுகின்றன என்பதை அறிவோம். இவற்றில் எட்டு 'பாக்கியங்கள்' (பேறுகள்) கூறப்பட்டுள்ளன. மத்.23:13–36இல் எட்டு 'ஐயோ'க்கள் கூறப்பட்டுள்ளன. இவற்றிற்கிடையே ஒன்றுக்கொன்று எதிர்மறையான கருத்துக்கள் இருப்பதோடு, வரிசையாக அவ்வாறு அமைகின்றன. கீழ்க்கண்ட அட்டவணையில் இதைக் காணலாம்.

| பாக்கிய வசனங்கள் | 'ஐயோ'க்கள் |
|---|---|
| **முதல் பாக்கிய வசனம்.5:3**<br>பரலோக அரசிற்குள் செல்லுதல் | **முதல் ஐயோ 23:13**<br>பரலோக அரசிற்குள் செல்லாமை |
| **இரண்டாம் பாக்கிய வசனம்.5:4**<br>துயரப்படுவோர் ஆறுதலடைதல் | **இரண்டாம் ஐயோ.23:14**<br>துயரப்படுத்துதல், ஆக்கினை அடைதல் |
| **மூன்றாம் பாக்கிய வசனம்.5:5**<br>பூமியைச் சுதந்தரித்தல் | **மூன்றாம் ஐயோ.23:15**<br>நரகத்தைச் சுதந்தரித்தல் |
| **நான்காம் பாக்கிய வசனம்.5:6**<br>நீதியின்மேல் பசிதாகம் | **நான்காம் ஐயோ.23:16–22**<br>சத்தியம் ஒன்றுமில்லையென்று நீதியைப் புறக்கணித்தல் |
| **ஐந்தாம் பாக்கிய வசனம்.5:7**<br>இரக்கமுள்ளவர்கள் | **ஐந்தாம் ஐயோ.23:23–24**<br>இரக்கத்தை விட்டுவிடுதல் |
| **ஆறாம் பாக்கிய வசனம்.5:8**<br>இருதயத்தில் சுத்தம் | **ஆறாம் ஐயோ.23:25–26**<br>வெளிப்புறம் சுத்தம்,<br>உட்புறம் அசுத்தம் |
| **ஏழாம் பாக்கிய வசனம்.5:9**<br>சமாதானம்பண்ணுதல் | **ஏழாம் ஐயோ.23:27–28**<br>மாயத்தினாலும், அக்கிரமத்தினாலும் நிறைந்திருத்தல் |
| **எட்டாம் பாக்கிய வசனம்.5:10**<br>துன்பப்படுகிறவர்கள் பரலோகம் செல்லுதல் | **எட்டாம் ஐயோ.23:29–33**<br>துன்புறுத்திக் கொலைசெய்தல், நரகாக்கினை அடைதல் |

பேறுபெற்றவர்களின் (பாக்கியவான்களின்) பெயர்களை எழுதுக: ஆவியில் எளிமையுள்ளவர்கள், சாந்த குணமுள்ளவர்கள். . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

'ஐயோ' என்று கூறப்பட்டவர்களின் பெயர்களை எழுதுக. மாயக்காரர், குருடரான வழிகாட்டிகள், மதிகேடர் . . . . . . . . . . . . . . . . . . . . . . . .
. . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . . .

இவ்வசனங்கள் யாவற்றையும் வாசித்து நீங்கள் 'பாக்கியவான்களா' அல்லது 'மாயக்காரரா' என்று கண்டுபிடியுங்கள். நன்கு உங்களை ஆராய்ந்து, உங்களுக்கு 'ஐயோ' என்று நேரிடாதபடி மனந்திரும்புங்கள்.

**எடுத்துக்காட்டு 2: ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள்**

வெளி.8:7 – 9:21; 11:15–19இல் ஏழு தேவதூதர்கள் ஒன்றன்பின்ஒன்றாக எக்காளம் ஊதினர் என்று காண்கிறோம். ஒவ்வொரு தேவதூதன் எக்காளம் ஊதியதும் பேராபத்துக்கள் நடந்தன.

இவ்வாறே வெளி.16:1–21இல் ஏழு தேவதூதர்கள் ஒன்றன்பின் ஒன்றாக தங்கள் கலசங்களில் இருந்தவற்றைக் கொட்டினார்கள் என்று காண்கிறோம். ஒவ்வொரு தேவதூதனும் தன் கலசத்திலிருந்ததைக் கொட்டியவுடன் பேராபத்துக்கள் நடைபெற்றன. இந்த இரு ஏழு பேராபத்துக்களையும் வரிசைக்கிரமமாக ஆராய்ந்து பார்ப்போம்.

இரு ஏழு பேராபத்துக்களையும் அவை நடைபெற்ற இடங்களையும் கவனித்தால் இவை யாவும் ஒரு ஏழு வரிசையான நிகழ்ச்சிகளின் இரண்டு தரிசனங்கள் என்று காணலாம். ஆதி.41:1–36இல் பார்வோன் கண்ட இரண்டு கனவுகளுக்கும் ஒரேபொருள் இருந்ததுபோல (ஆதி.41:25–26), யோவான் கண்ட இரு தரிசனங்களும் (ஏழு எக்காளங்கள், ஏழு கலசங்கள்) ஒரு பொருள் கொண்டவை (ஒரு ஏழு வரிசை நிகழ்ச்சிகளைக் கூறுபவை) என்பது தெளிவாகத் தோன்றுகின்றது. தேவன் இவற்றை நிச்சயமாக நியமித்திருக்கிறார் என்பதைக் குறிப்பதற்காக பார்வோனுக்குக் கனவு இரட்டித்ததைப் போன்று (ஆதி.41:32), யோவானுக்கும் தரிசனம் இரட்டித் துள்ளது. இவற்றிற்கிடையே வேறுபாடுகளைப் போன்று தோன்றுபவற்றிற்கு பட்டியலில் விளக்கம் தரப்பட்டுள்ளது. கீழே தரப்பட்டுள்ள பட்டியலைக் கருத்தாக ஆராயுங்கள்.

| **எக்காளம் ஊதும்போது விளைவுகள்** | **கலசத்தைக் கொட்டும்போது விளைவுகள்** |
|---|---|
| 1. முதலாம் எக்காளம் (வெளி.8:7): **பூமியில்** இரத்தங்கலந்த அக்கினியும் கல்மழையும் கொட்டப்பட்டன (இவற்றால் தாவரங்கள் மீதான விளைவுகள் இத்தரிசனத்தில் காட்டப்பட்டன) | 1.முதலாம் கலசம் (வெளி.16:2): **பூமியில்** கலசம் கொட்டப்பட்டது (மிருகத்தைப் பின்பற்றுகிறவர்கள் மீதான விளைவு இத்தரிசனத்தில் யோவானுக்குக் காட்டப்பட்டது) |
| 2. இரண்டாம் எக்காளம் (வெளி.8:9): **சமுத்திரத்தில்** எரிகிற மலைபோன்ற தொன்று போடப்படுதல், சமுத்திர | 2. இரண்டாம் கலசம் (வெளி.16:3): **சமுத்திரத்தில்** கலசம் கொட்டப் பட்டது. சமுத்திர நீர் மாசடைதல், |

| | |
|---|---|
| நீரில் மூன்றிலொருபங்கு மாசடைதல், கடல் வாழ் உயிரினங்களில் மூன்றி லொரு பங்கு அழிதல், கப்பல்களில் மூன்றிலொரு பங்கு சேதம்<br>**குறிப்பு:** மூன்றில் ஒரு பங்கு அழிவது இத்தரிசனத்தில் தெரிந்ததால், இத் தரிசனமானது யோவான் சற்று தூரத்திலிருந்து பார்ப்பதாக அமைந்தது. | கடல் வாழ் உயிரினங்கள் அழிதல்<br>**குறிப்பு:** யாவும் அழிவதுபோன்று காணப்பட்டதால் இத்தரிசன மானது அழிவு ஏற்படும் இடத் தினருகில் இருந்து பார்ப்பதாக அமைந்தது. |
| 3. மூன்றாம் எக்காளம் (8:10–11): **ஆறுகளில்** மூன்றிலொரு பங்கின் மீதும் **நீரூற்றுகளில்** மூன்றிலொரு பங்கின் மீதும் எரிகிற நட்சத்திரம் விழுதல், தண்ணீரில் மூன்றிலொரு பங்கு மாசடைதல், பல மனிதர் உயிரி ழத்தல் (மேலேயுள்ள குறிப்பு காண்க) | 3. மூன்றாம் கலசம் (16:4–7): **ஆறுகளிலும், நீரூற்றுகளிலும்** கலசம் கொட்டப்படுதல், தண்ணீர் மாசடைதல் (மேலேயுள்ள குறிப்பு காண்க) |
| 4. நான்காம் எக்காளம் (8:12): **சூரியனிலும் சந்திரனிலும்** நட்சத்திரங்களிலும் சேதம் (2 இலுள்ள குறிப்பு காண்க) | 4. நான்காம் கலசம் (16:8–9): **சூரியன்** மீது கலசம் கொட்டப் படுதல் (2இலுள்ள குறிப்பு காண்க) |
| 5. ஐந்தாம் எக்காளம் (9:1–12): **பூமியின்மீது** நட்சத்திரம் விழுதல் இருளும், பாதாளத்திலிருந்து வரும் வெட்டுக்கிளிகள் (போன்ற அந்த கார சக்திகள்) உண்டாக்கும் வேதனைகளும் | 5. ஐந்தாம் கலசம் (16:10–11): மிருகத்தின் சிங்காசனம் இருக்கும் இடத்தில் – **பூமியில்** – கலசம் கொட்டப்படுதல், இருளும் வேதனைகளும் உண்டாகுதல் |
| 6. ஆறாம் எக்காளம் (9:13–21): **ஐபிராத்து நதியருகில்** செயல்கள் தொடங்கின. நான்கு தூதர்கள் விடுதலை, குதிரைகள், 20 கோடி தொகை கொண்ட சேனை, நெருப்பு, புகை, சாவு, போர்கள் | 6. ஆறாம் கலசம் (16:12–16): **ஐபிராத்து நதியில்** கலசம் கொட்டப்பட்டது. சாத்தானும் மூன்று அசுத்த ஆவிகளும் பல நாட்டின் அதிபதிகளைப்போருக் கென்று கூட்டிச்சேர்த்தல் |

| | |
|---|---|
| 7. ஏழாம் எக்காளம் (11:15–19): **வானத்தில்** கெம்பீர சத்தங்கள் "உலகத்தின் ராஜ்யங்கள் நம்முடைய கர்த்தருக்கும் அவருடைய கிறிஸ்துவுக்குமுரிய ராஜ்யங்களாயின; அவர் சதாகாலங்களிலும் ராஜ்யபாரம்பண்ணுவார்" என்றுரைத்தன. **பரலோகத்தில் தேவாலயம்** திறக்கப்படுதல்; மின்னல்கள், சத்தங்கள், இடிமுழக்கங்கள், பூமியதிர்ச்சிகள், பெரும் கல்மழை உண்டாதல் | 7. ஏழாம் கலசம் (16:17–21): **ஆகாயத்தில்** (முதல் வானத்தில்) கலசம் கொட்டப்பட்டது. **பரலோகத்தின் ஆலயத்திலிருந்து** "ஆயிற்று" என்ற சத்தம் உண்டாதல், சத்தங்கள், இடிமுழக்கங்கள், மின்னல்கள், பூமியதிர்ச்சி, கல்மழை உண்டாதல் |

மேலேயுள்ள யாவையும் ஆராய்ந்தால் ஏழு எக்காளங்கள் தொனிக்கும் தரிசனமும் ஏழு கலசங்கள் கொட்டப்படும் தரிசனமும் ஒரே வரிசையான ஏழு நிகழ்ச்சிகளைக் குறிக்கிறது என்பதைக் காணலாம்.

**IV நூல்களை ஒப்பிடுதல்:**

ஆதியாகமம் நூலையும் வெளிப்படுத்தின விசேஷம் நூலையும் ஒப்பிட்டுத் தியானிக்கலாம்.

தானியேலின் நூலையும் வெளிப்படுத்தின விசேஷம் நூலையும் ஒப்பிட்டுப் படித்தால் கடைசிக்கால நிகழ்ச்சிகளின் இரகசியங்களை இரு நூல்களும் கூறுவதை ஆராய்ந்து உணரமுடியும்.

1 சாமுவேல் 31 இலிருந்து 2 ராஜாக்கள் 25 வரையுள்ள வேதப்பகுதியின் நிகழ்ச்சிகளில் பல 1 நாளாகமம் 10 இலிருந்து 2 நாளாகமம் 36 வரையுள்ள பகுதியில் மீண்டும் கூறப்பட்டுள்ளன. இவற்றை ஒப்பிடலாம்.

நற்செய்தி நூல்களை ஒன்றுக்கொன்று ஒப்பிடலாம்.

**V ஏற்பாடுகளுக்கிடையே ஒப்பிடுதல்:**

பழைய ஏற்பாட்டையும், புதிய ஏற்பாட்டையும் ஒற்றுமைப்படுத்தியும் வேறுபடுத்தியும் தியானிப்பதும் நம்மில் வேத அறிவு பெருகச்செய்யும். எபிரெயர் நூல் பழைய ஏற்பாட்டையும் புதிய ஏற்பாட்டையும் நன்கு ஒப்பிட்டுள்ளதை நாம் காணலாம்.

பழைய ஏற்பாட்டின் 'நியாயப்பிரமாணத்தினாலாகும் நீதி'யையும் புதிய

ஏற்பாட்டின் 'விசுவாசத்தினாலுண்டாகும் நீதி'யையும் குறித்து நிருபங்களில் காண்கிறோம். நிருபங்களை வாசித்து இவற்றைத் தியானிக்கலாம்.

'பழைய புதிய உடன்படிக்கைகளின் (ஏற்பாடுகளின்) வேறுபாடுகள்' என்ற கட்டுரை வாழ்வியல் விளக்க வேதாகமத்தில் தரப்பட்டுள்ளது **(2nd, 3rd edition, பக்கம் 1879).**

**பயிற்சி:** சங்.23இல் காணப்படும் மேய்ப்பரை, யோவா.10இல் காணப்படும் மேய்ப்பரோடு ஒப்பிடலாம்.

நல்ல மேய்ப்பர் ஒரு ஆட்டுக்குட்டியாக இருப்பதை ஒப்பிட்டுத் தியானிக்கலாம்.

சங்.22இல் மீட்பர், 23இல் மேய்ப்பர், 24இல் மகிமையின் ராஜா.

சங்.22இல் சிலுவை மரம், 23இல் மேய்ப்பனின் கோல், 24இல் செங்கோல் என்று இச்சங்கீதங்களைப் பலவிதமாக ஆராய்க.

வேதாகமமெங்கும் பல ஒப்பிட்டு தியானிப்பதற்கான நபர்களும், பகுதிகளும், கருத்துக்களும் இன்னும் பலவித கோணங்களும் உண்டு. ஒப்பிட்டுத் தியானிப்பது நமது தியானத்தின் தரத்தை உயர்த்துவதோடு, வேதத் தியானத்தின்மீது வாஞ்சையையும் அதிகரிக்கச் செய்யும்.

# 10. வேதத்தைப் பகிர்ந்தளிப்பது எப்படி?

வேதத்தைச் சரியாக விளக்கம் செய்வதற்கான (வியாக்கியானம் செய்வதற்கான, பகிர்ந்தளிப்பதற்கான) சில நெறிமுறைகள் இந்த அத்தியாயத்தில் கூறப்பட்டுள்ளன. வேதத்தைச் சரியாக விளங்கிக் கொள்ளவும் இந்த நெறிமுறைகள் பொருந்தும் என்பதால் இந்த அத்தியாயம் இந்நூலில் சேர்க்கப்பட்டுள்ளது.

1. வேதத்திலுள்ள சொற்கள், சொற்றொடர்கள், இலக்கண முறைகள், உவமைகள், வரலாறுகள் முதலியவற்றிற்கு எழுத்தின்படி என்ன பொருளோ அதையே முதன்மையாக எடுத்துக்கொள்ளவேண்டும். அதாவது, அவை வேறு ஒரு நூலில் இருந்தால் என்ன பொருள்படுமோ அப்பொருளையே எடுத்துக்கொள்ளவேண்டும். எழுத்தின்படி பொருள் தர முடியாத உவமைகளுக்கும், அணிகளுக்கும் அவை தரும் பொருளை வேதத்தின் பிற பகுதிகளுக்கேற்ப விளக்கம் செய்யவேண்டும். எல்லாவற்றிற்கும் செயற்கையாக ஆவிக்குரிய பொருள் ஏற்படுத்த முயலக்கூடாது. மாற்.9:9–11இல் 'மரித்தோரிலிருந்து எழுந்திருத்தல்' என்பதற்கு எழுத்தின்படி பொருள்கொள்ளாமல் சீஷர்கள் தத்தளித்ததைப் பார்க்கிறோம். ஆனால் ஆவிக்குரிய பொருள் இருக்கும் இடத்தில் அதைச் சரியாக விளக்கவேண்டும். மத்.16:6–12இல் "பரிசேயருடைய" என்ற சொல்லைச் சரியாகக் கவனிக்காததால் ஆவிக்குரிய பொருளைப் புரிந்து கொள்ளாததைக் காண்கிறோம்.
2. பழைய ஏற்பாடானது புதிய ஏற்பாட்டின் நிழல் என்பதைக் கருத்திற் கொண்டு விளக்கவேண்டும்.

   எடுத்துக்காட்டுக்கள்: பலி, பஸ்கா, உயர்த்தப்பட்ட சர்ப்பம் இவற்றிற்கு, கிறிஸ்து புதிய ஏற்பாட்டு நிறைவேறுதலாக அமைகிறார்
3. மாதிரிகளை, அவை குறிக்கும் பண்புகளை மட்டும் ஒப்பிட்டு விளக்க வேண்டும்.

   எடுத்துக்காட்டுக்கள்: யோசேப்பு, தாவீது என்பவர்கள் கிறிஸ்துவின் மாதிரிகள் (types). கிறிஸ்துவின் குணங்களுக்கெதிரான குணங்களும் இவர்களுக்கு உண்டு. அக்குணங்களைச் சரியாக அடையாளம் கண்டு

விளக்கம் தரவேண்டும். அக்குணங்கள் கிறிஸ்துவுக்கு இருப்பதாகக் கூறிவிடக்கூடாது

4. வேதத்தில் அதிகமாகப் பயன்பெறும் நடைமுறைகள், பழக்கவழக்கங்களைக் கற்று அதற்கேற்ப விளக்கம் செய்யவேண்டும்.

எடுத்துக்காட்டு: யூதர்கள் காலை **6** மணியை **0** என்று கணக்கிடுவார்கள். எனவே லூக்.**23:44**இல் குறிப்பிடப்பட்ட நேரம் நண்பகல் **12**இலிருந்து மாலை **3** மணிவரை. ஆனால் யோவா.**19:14**இல் குறிப்பிட்டுள்ள நேரம் நமது வழக்கப்படியான காலை **6** மணி. இது ரோமர் முறை.

5. வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள இடங்களின் புவியியல் கூறுகளையும், வேதத்திலுள்ள வரலாற்றையும் நன்கு கற்ற பின்னரே அவற்றைக் குறித்து விளக்க முயலவேண்டும்.

6. வேதம் முழுவதையும் கற்றிருப்பதுடன், வேதத்தில் காணப்படும் தேவனின் திட்டத்தின் பொது அறிவைப்பெற்று அதற்கேற்ப விளக்கம் கூற வேண்டும். காலக்கூறுகள், சாத்தானின் இறுதித் தோல்வி, சத்துருக்கள் கிறிஸ்துவின் பாதபடிக்குக் கீழாவது, நித்திய அரசாட்சி போன்றவற்றை நன்கு அறிந்திருத்தல் வேண்டும்.

7. ஒரு உபதேசமானது வேதத்திலுள்ள ஏதேனும் ஒரு வசனத்திற்கு முரண்பட்டதாயிருந்தாலும், அந்த உபதேசம் கள்ள உபதேசமாகும் **(Even if a single verse is against a doctrine, then the doctrine is false)**. வேதத்தில் எந்த ஒரு முரண்பாடும் இல்லை என்பதை மனதிற்கொண்டு விளக்கம் செய்யவேண்டும். முரண்பாடு அல்லது தவறு இருப்பது போலத் தோன்றுவது நமது அறிவு குறைவினால்தான். (எடுத்துக்காட்டு: பூமி உருண்டை என்ற கருத்தோடு ஏசா.40:22இல் எழுதப்பட்டிருப்பது பல நூற்றாண்டுகட்கு முற்பட்டவர்களுக்கு தவறு என்று தோன்றியிருக்கும்)

8. வேதம் கற்க எளிதானது. ஏனெனில் அது ஒரு வெளிப்பாடு. அதன் மொழியும் எளிது. அநேக சத்தியங்கள் பலமுறை கூறப்பட்டுள்ளன. உடனடியாகப் புரியாத பகுதிகள் பலதடவைகள் வாசித்த பின்னர் அல்லது சிலகாலம் சென்ற பின்னர் புரியும். முயற்சி எடுத்து, படித்து, விளக்கம் செய்யவேண்டும். மனிதனுக்குத் தேவை என்று தேவன் கருதும் எல்லாக் கேள்விகளுக்கும் வேதத்தில் பதில் உண்டு.

9. பாரம்பரியத்திற்கேற்ப அல்லது நமது சொந்த அனுபவத்திற்கேற்ப வசனத்தை விளக்கம் செய்யாமல், தேவனுடைய வார்த்தைக்கேற்ப நமது அனுபவங் களும் பாரம்பரியங்களும் இருக்கின்றனவா என்று சரி பார்க்கவேண்டும்.

10. எந்த ஒரு உபதேசத்தையும் உதாரணங்களை மட்டும் கொண்டு நிறுவக் கூடாது. குறைந்தபட்சம் இரண்டு அல்லது மூன்று வேதப்பகுதிகளால் உபதேசங்கள் நிறுவப்படவேண்டும்.

11. வேதத்திலுள்ள ஒரு பகுதியை விளக்கம் செய்யும்போது, அந்நூல் யாரால் எச்சூழ்நிலையில் என்ன நோக்கத்தோடு எழுதப்பட்டது என்பதையும் அந்த வார்த்தைகளைக் கூறுவது யார் என்பதையும் கருத்தில் கொண்டு விளக்கம் செய்யவேண்டும்.

12. ஒரு வசனத்தை விளக்கம் செய்தால் அதைச் சொன்னவர் யார் என்பதை மட்டுமல்ல அதன் அருகில் உள்ள வசனங்கள் என்ன சொல்கின்றன என்பதையும் கவனித்து விளக்கம் செய்யவேண்டும்.

**வேதத்தைக் கற்கும் சகோதரரே, சரியாக விளக்கம் செய்யக் கற்றுக் கொள்வீரா? வேதத்தின் ஆசிரியரான தேவனுடைய ஆவியானவர், சரியாக வேதத்தை வியாக்கியானம் செய்ய நமக்குக் கற்றுத்தருவாராக.**

**வேதத்தைச் சரியாகப் போதிப்பவர்க்கான தகுதிகள்**

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்துவைச் சொந்த இரட்சகராக ஏற்றுக்கொண்டு, ஆவியானவரின் ஒத்தாசையால் பரிசுத்த வாழ்க்கை நடத்துபவராக இருக்கவேண்டும்.
2. வேதம் முழுவதும் தேவனுடைய வார்த்தை என்று நம்புகிறவராக இருக்க வேண்டும்.
3. வேதத்தின் உபதேசங்களையும், தத்துவங்களையும் ஆசையோடு படித்து அவற்றின் உண்மையான பொருளை ஜெபத்துடன் கூற வாஞ்சை யுள்ளவராக இருக்கவேண்டும்.
4. வேதத்திற்குக் கீழ்ப்படியத் தன்னை முற்றிலும் ஒப்புக்கொடுத்தவராக இருக்கவேண்டும்.
5. உலக ஆதாயத்திற்காக உபதேசங்களை மாற்றாமல், தான் போதிப்ப வற்றிற்காக உயிர்விடவும் தயாராக இருப்பவராக இருக்கவேண்டும்.
6. தன்னைத் திருத்திக்கொள்ளும் மனப்பாங்கும், கற்றுக்கொள்ளும் எளிமையும் உள்ளவராக இருக்கவேண்டும்.
7. தாழ்மையும், ஜெப சிந்தையும் உள்ளவராய் இருக்கவேண்டும்.

# இணைப்பு:
# வேதம் தேவனுடைய வார்த்தை என்பதற்கு ஆதாரங்கள்

1. கர்த்தராகிய இயேசு கிறிஸ்து அதைத் தேவனுடைய வார்த்தை என்று குறிப்பிட்டார் (யோவா.10:35; மாற்.7:13). எனவே வேதம் தேவனுடைய வார்த்தையே.

2. பல சூழ்நிலைகளில் (சிங்காசனத்திலிருந்தும், சிறைச்சாலையிலிருந்தும்), பலதரப்பட்ட மக்களால் (அரசர்களாலும், ஆடு மேய்ப்பவர்களாலும், ஆசாரியராலும், ஆயக்காரராலும், வைத்தியராலும், மீன் பிடிப்பவராலும் . . .), பல நூற்றாண்டு காலமாக (1700 ஆண்டுகட்கு மேலாக) எழுதப்பட்ட நூல், வேதாகமம். ஆனாலும் இதில் முரண்பட்ட கருத்துக்கள் இல்லை. யாவரும் ஒற்றுமையோடே ஒரே நோக்கத்துடன் எழுதியுள்ளனர். இன்றுள்ள 40 அறிஞர்களை ஏதேனும் ஒரு பொருளைப் பற்றி எழுதச் சொன்னால் ஒரே கருத்து நிச்சயமாக வராது. எனவே வேதத்தின் ஆசிரியர் ஒருவரே (தேவனே).

3. வேதத்தில் பல கருத்துக்கள் படிப்படியாக வெளிப்படுத்தப்பட்டிருக் கின்றன. ஒருவர் எழுதிய கருத்தை (சில சமயங்களில் பல நூற்றாண்டு கட்குப் பின்னர் வேறு சூழ்நிலையிலுள்ள) இன்னொருவர் கையாண்டு சிறிது சேர்த்து, பின் விட்டுவிடுகிறார். அதன் பிறகு இன்னொருவர் இன்னும் சிறிது சேர்க்கிறார். இவ்வாறாக அக்கருத்து வேதத்தில் நல்ல முடிவிற்கு வருகிறது. இவ்வாறு இருந்தபோதிலும் முரண்பாடான குறிப்புக்கள் இல்லை. எனவே இதன் ஆசிரியர் தேவன் ஒருவரே.

4. சாத்தான் உட்பட, பலர் இதை மேற்கோள் காட்டிப் பேசியிருக்கின்றனர். எந்த மனிதன் எழுதிய நூலும் இவ்வளவு மேற்கோள் காட்டப்பட்டதில்லை. இதன் பாதி அளவிற்குக்கூடப் பயன்படுத்தப்படவில்லை. எனவே இதன் ஆசிரியர் தேவனாகத்தான் இருக்கவேண்டும்.

5. வரலாற்றின் எல்லா நூற்றாண்டுகளிலும் எல்லாவிதமான வயது, பால், தேசம், மொழியைச் சேர்ந்தவர்களுடைய இம்மைக்குரிய மறுமைக்குரிய தேவைகளைச் சந்திக்கிறது வேதம் (லூக்.4:4; மத்.4:4).

6. வேதத்திலுள்ள மனிதனுக்கான இரட்சிப்பின் திட்டம் (மனிதனின் வீழ்ச்சியிலிருந்து இறுதிவரை) மனித மூளைக்கு அப்பாற்பட்டது.

7. வேதத்தின் கருத்துக்கள் சந்தேகத்தோடு கூறப்படாமல் அதிகாரத்தோடு கூறப்பட்டுள்ளன. தற்கால விஞ்ஞானிகள் "இப்படி இருக்க வாய்ப் பிருக்கிறது" . . . "என்று நம்புகிறோம்", . . . "என்று கருதுகிறோம்" என்று கூறும்போது, கிறிஸ்து "என்னிடத்தில் வாருங்கள் நான் உங்களுக்கு இளைப்பாறுதல் தர முயற்சிக்கிறேன்" என்று கூறாமல், "நான் இளைப்பாறுதல் தருவேன்" என்று கூறுகிறார். "நானும் ஒருவழி" என்று கூறாமல் "நானே வழியும், சத்தியமும், ஜீவனுமாயிருக்கிறேன்" என்று கூறுகிறார். தேவனைத் தவிர வேறுயாரும் இவ்வளவு அதிகாரத்தோடு கூறினதில்லை. "நான் உங்களுக்குக் கூறுகிறேன்" என்று ஆணித் தரமாகக் கூறுவது தேவனின் குரலே.

8. வேதத்திலுள்ள தீர்க்கதரிசனங்கள் அது தேவனுடைய வார்த்தை என்று நிறுவுகின்றன. ஒரு தீர்க்கதரிசனம் கூடப் பொய்யாகவில்லை. இன்றைய புதைபொருள் ஆராய்ச்சி இதை நிறுவிக்கொண்டே இருக்கிறது. மேலும் கிறிஸ்துவின் வாழ்வில் அவரது பிறப்பு முதல் இறப்புவரை நடந்தவற்றை அவருக்கு முன்னிருந்த தீர்க்கதரிசிகள் எழுதி வைத்திருக்கிறார்கள். எடுத்துக்காட்டாக, பழைய ஏற்பாட்டில் சங்.22இல் அவரது பாடுகள் விவரிக்கப்பட்டுள்ளன. இவை அனைத்தும் நிறைவேறிவிட்டன. நிறைவேறிய அனைத்து தீர்க்கதரிசனங்களும் வேதம் தேவனுடைய வார்த்தை என்று பறைசாற்றுகின்றன.

9. வேதத்தை நேசித்து, தியானித்து, அதன்படி வாழ்பவர்கள் பரிசுத்தமடைகிறார்கள். வாழ்க்கையை மாற்றுகிறது வேதம். மாற்றப்பட்ட கோடிக் கணக்கான வாழ்க்கைகள், வேதம் தேவனுடைய வார்த்தை என்பதை நிறுவுகின்றன.

10. வேதத்தை எழுதியவர்கள் அதைத் தேவனுடைய வார்த்தை என்று சொன்னதுமட்டுமல்ல, அதற்காகத் தங்கள் உயிரையும் கொடுக்கத் தயங்கவில்லை. அவர்களது இரத்தம் 'வேதம் தேவனுடைய வார்த்தை' என்பதற்கு ஒரு ஆதாரம்.

11. எத்தனையோ அரசர்களும் அதிகாரிகளும் வேதத்தை அழிப்பதற்கு தங்களாலான மட்டும் முயற்சித்தார்கள். ஆனால் வேதம் அதிகமதிகமாய்ப் பெருகிக்கொண்டும் பல புதிய மொழிகளில் அச்சிடப்பட்டும் வருகிறது.

உலகிலேயே அதிகமான மொழிகளில் அச்சிடப்படுவது வேதம்தான். பல நூற்றாண்டுகளாக ஒவ்வொரு ஆண்டும் உலகத்தில் அதிக விற்பனை யாகும் நூல் வேதமே. இதுவும் 'வேதம் தேவனுடைய வார்த்தை' என்பதற்கு ஆதாரமாகும்.

இன்னும் பல ஆதாரங்கள் உண்டு. வேதம் தேவனுடைய வார்த்தை என்று நிறுவுவதற்கு இவற்றில் ஏதேனும் ஒரு ஆதாரமே போதும்.

தேவன் நமக்கு அருளியிருக்கின்ற பெரிய ஈவுகளில் ஒன்று வேதம். சகோதரரே, வேதத்தின் மகத்துவங்களை நீர் எப்படி எண்ணுகிறீர்?

**தேவன் எழுதிக் கொடுத்த வேதத்தின் மகத்துவங்களை அந்நிய காரியமாக எண்ணாமல் (ஓசியா 8:12), வேதத்தை அனுதினமும் தியானிக்கவும் அதின்படி நடக்கவும் இன்றைக்கே உம்மை அர்ப்பணிப்பீரா?**

## Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் எழுதியுள்ள பிற நூல்கள்

**வேதத்தைத் தியானிப்பது எப்படி (தமிழ்)**
**HOW TO MEDITATE ON THE BIBLE (English)**

வேதத்தைத் தியானிப்பதற்கான, எளிதில் பின்பற்றக்கூடிய முறைகளும் எடுத்துக்காட்டுகளும் அடங்கிய நூல். பல மொழிகளில் 34,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**நற்செய்திப்பணி செய்வது எப்படி (தமிழ்)**
**HOW TO DO GOSPEL WORK (English)**

நற்செய்திப்பணிக்கு நம்மை உற்சாகப்படுத்தி வழிகாட்டும் சிறந்த நூல். பல மொழிகளில் 25,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**கடவுளைக் காண்பிக்கிறேன் வாருங்கள் (Tamil)**
**COME I'LL HELP YOU SEE GOD (English)**

கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரை அறிமுகப்படுத்தும் நூல். பல மொழிகளில் 1,25,000 பிரதிகளுக்கு மேலாக விநியோகிக்கப்பட்டுள்ளது.

**வருகைக்கு ஆயத்தப்படுவது எப்படி (தமிழ்)**
**How to be prepared for the Lord's coming (English & Hindi)**

கிறிஸ்துவின் வருகைக்கு கிறிஸ்தவர்களை ஆயத்தப்படுத்தும் நூல்.

**ஆவியானவரின் அருள்மாரி, வரங்கள், கனி (தமிழ்)**
**BAPTISM IN THE SPIRIT, GIFTS AND FRUIT OF THE SPIRIT (English)**

சகோதரர் லயணலுடன் இணைந்து எழுதிய வேத ஆய்வு நூல்.

**இதோ சீக்கிரம் வருகிறார் (தமிழ்)**

கர்த்தரின் வருகையைக்குறித்த உபதேச நூல்.

**தேவனுடைய இருதயத்திற்கேற்ற ஊழியர் (தமிழ்)**

ஊழியர்களும் சபை மக்களும் அறிந்துகொள்ள வேண்டிய சத்தியங்கள் அடங்கிய நூல்.

## Dr. ஆல்ஃப்ரட் தேவதாசன் விளக்கங்கள் எழுதியுள்ள வாழ்வியல் விளக்க வேதாகமம்



# வாழ்வியல் விளக்க வேதாகமம்

*வேதத்தின் பேருண்மைகளை அறிந்து கொள்ளவும்*
*தேவன் விரும்புகிறபடி வாழவும்*
*தேவனுக்கு ஊழியம் செய்யவும்*
*வழிகாட்டியாக அமைவது*

## வாழ்வியல் விளக்க வேதாகமத்தின் சிறப்புகள்

**விளக்கக் கட்டுரைகள்:** 80 இற்கும் மேலான விளக்கக் கட்டுரைகளில் வேதத்தின் எல்லா முக்கிய கருத்துகளும் எளிதில் புரியும் வகையில் எழுதப்பட்டுள்ளன. 'திரித்துவம்' போன்ற கடினமான தலைப்புகளிலும், வாழ்வியல் சார்ந்த தலைப்புகளிலும், தேவத்துவம், இரட்சிப்பு, திருமுழுக்கு (ஞானஸ்நானம்), ஆவியினால் திருமுழுக்கு (அபிஷேகம்), ஆவியின் வரங்கள், ஆவியின் கனி, நற்செய்திப்பணி போன்ற பல தலைப்புகளிலும் கட்டுரைகள் எழுதப்பட்டுள்ளன ஆபிரகாமின் காலத்திலிருந்து இன்றுவரையுள்ள எருசலேமின் வரலாறு, படைப்பின் வரலாறு, ஆதாம்வரை ஆண்டுக் கணக்கு போன்ற வரலாற்றுக் கட்டுரைகளில் பல முக்கிய தகவல்கள் கொடுக்கப்பட்டுள்ளன. தமிழ் வேதாகமத்தின் வரலாறும் சேர்க்கப்பட்டுள்ளது.

**இணைப்பு:** 'டார்வினின் படிமுறை வளர்ச்சிக் கொள்கை தவறானது' என்பதற்கான அறிவியல் (Scientific) ஆதாரங்கள் கட்டுரை வடிவில் தரப்பட்டுள்ளன.

**வாழ்க்கை வரலாறு ஆய்வு :** 75 இற்கும் மேலான வேதாகம மனிதர்களின் வாழ்க்கை ஆய்வுக் குறிப்புகளின் தொகுப்புகள் ஆங்காங்கே இணைக்கப்பட்டுள்ளன.

**அட்டவணைகள்:** வேதத்தில் குறிப்பிடப்பட்டுள்ள முக்கியமான நகரங்களின் தூரங்களைக் கூறும் அட்டவணைகளும், எபிரெய மாதங்கள், எடைகள், அளவுகள், தீர்க்கதரிசிகளின் காலங்கள் போன்ற பல தலைப்புகளில் அட்டவணைகளும் பட்டியல்களும் சேர்க்கப்பட்டுள்ளன.

**அறிமுகங்கள்:** வேதத்தின் ஒவ்வொரு நூலுக்கும் பல குறிப்புகளுடன் அறிமுகம் தரப்பட்டுள்ளது. மேலும், வேதாகமம், பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு, ஐந்தாகமங்கள், தீர்க்கதரிசிகளின் நூல்கள், நிருபங்களுக்கான அறிமுகங்கள் இணைக்கப்பட்டுள்ளன.

**விளக்கக் குறிப்புகள்:** இறையியல், வரலாறு, சமூக வாழ்க்கை, விளக்கங்கள் போன்றவற்றுடன் ஜெபத்திற்கும் தியானத்திற்கும் துதிப்பதற்கும் வாழ்க்கைப் பயனீட்டிற்கும் ஏற்ற குறிப்புகள் ஒவ்வொரு பக்கத்திலும் உண்டு. முரண்பாடுகளாகக் கருதப்படும் வசனங்களுக்கு விளக்கங்கள் அளிக்கப்பட்டுள்ளன. உன்னதப்பாட்டிற்குச் சிறப்பான அறிமுகம் உண்டு.

**ஒத்த வாக்கியங்கள், கடினமான சொற்கள்:** ஒவ்வொரு பக்கத்திலும் ஒத்தவாக்கியங்கள், வேதத்தின் இறுதியில் ஒத்தவாக்கிய அகராதி, கடினமான சொற்களுக்குப் பொருள் தரும் பட்டியல் ஆகியவையும் இந்நூலில் உண்டு.

**படங்கள்:** ஆங்காங்கே விளக்கப்படங்களும் இறுதியில் பலவண்ண தேசப்படங்களும் தரப்பட்டுள்ளன.

மேலும், **வேதவாசிப்பு திட்டங்கள்**, நற்செய்தி நூல்களின் நிகழ்ச்சிகள் தொகுப்பு போன்ற பல சிறப்பம்சங்கள் இந்நூலில் அடங்கியுள்ளன.

**எல்லா கிறிஸ்தவப் புத்தக நிலையங்களிலும் கிடைக்கும்**

1596
40

சகோதரர் ஆல்ஃப்ரட் தேவதாசன் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக என்னுடன் மிகவும் நெருங்கிய ஐக்கியம் வைத்துள்ளவர்களில் ஒருவர் ஆவார். சென்னையிலுள்ள மாநிலக் கல்லூரி பேராசிரியராகவும் பின்னர் அரசுக் கல்லூரி முதல்வராகவும் பணியாற்றி ஓய்வுபெற்ற இவர், வேதபாடங்கள் எழுதுவதும், வாலிபர் மத்தியில் எழுப்புதல் கூட்டங்கள் நடத்துவதும், நோயுற்றோரைச் சந்திப்பதும், சபைகளிலும் கூட்டங்களிலும் ஆசிரியர் மாநாடுகளிலும் போதகர் கூடுகைகளிலும் தேவசெய்தி அளிப்பதுமான பல ஊழியங்களைச் செய்துவருகிறார். இவர் எழுதிய ஆவிக்குரிய நூல்களில் இதுவே முதலாவது எழுதிய நூல்.

இந்நூலிலுள்ளவற்றை நான் கவனமாகப் படித்திருக்கிறேன். இதிலுள்ள ஒவ்வொரு பகுதியும் ஜெபத்தோடும், ஆவியானவரின் அபிஷேகத்தோடும் தயாரிக்கப்பட்டது. பல சபைகளிலும் கூட்டங்களிலும் இந்நூலின் பகுதிகளைப் பயன்படுத்தியிருக்கிறேன். அவ்வாறு பயன்படுத்திய ஒவ்வொரு இடத்திலும் அநேகர் ஆசீர்வாதங்களைப் பெற்றுக் கொண்டதை நான் கண்டேன். எனவே, இந்நூலைப் பயன்படுத்துகிற ஒவ்வொருவருக்கும் இது மிகவும் பயனளிக்கும் என்ற நிச்சயம் எனக்கு உண்டு.

இவர் எழுதியுள்ள பிற நூல்களும், வாழ்வியல் விளக்க வேதாகமும் மிகவும் பயனுள்ளவை. தேவ கிருபையால் இன்னும் அநேக நூல்களை இச்சகோதரர் எழுதவேண்டுமென்று வாழ்த்துகிறேன்.

**சகோ. A. லயணல்,** B.E.,<br>
**இணை நிறுவனர்,**<br>
**ஆசீர்வாத இளைஞர் இயக்கம்.**


**WORD OF CHRIST**<br>
# 100/3, Nirmala Apartments<br>
Medavakkam Tank Road<br>
Kellys, Chennai - 600 010, India